


29 வது ஆண்டில்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
# விளம்பரம்
VLAMBARAM™
Tel: 416-282-8059
Fax: 416-286-0334
email: vlambaram@sympatico.ca
info@vlambaram.com
web: vlambaram.com
tamilvanakkam.com




நதி: 29 | பாலம்: 04 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | FEBRUARY 15, 2019

# பொருளாதாரக் குற்றமிழைத்த நிறுவனங்களுக்கு அரசியல் அமைப்பில் பாதுகாப்பு!

நீதி அமைச்சரும் மற்றும் சட்டமா அதிபராகவும் இருந்த Jody Wilson Raybouldஇற்கு கனடாவில் பாரதூரமான பொருளாதாரக்குற்றம் இழைத்த கனேடியப் பொறியியல் நிறுவனமான SNC - Lavalin இனுடைய விசாரணைகளை துரிதகதியில் முடிவுக்குக் கொண்டுவர கனேடியப் பிரதமரின் அலுவலகம் அழுத்தம் கொடுத்த தாக Globe and Mail ஊடகத்தில் 2019 பெப்ரவரி 7இல் செய்திகள் வெளிவந்தன. இவை முற்று முழுதாகத் தவறானவை எனக் கனேடியப் பிரதமர் ஜஸ்ரின் ரூடோ 2019 பெப்ரவரி 7இல் Vaughan நகரில் ஊடகவியலாளர்களுக்குத் தெரிவித்தார்.

மொன்றியல் நகரில் தலைமையகத்தைக் கொண்டு உலகளாவியரீதியில் வியாபித் திருக்கும் SNC-Lavalin எனும் கனடாவின் மிகப்பெரிய பொறியியல் நிறுவனம் 1911ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது. 160 நாடு களில் பலவிதமான செயற்திட்டங்களில் ஈடுபட்டுள்ள இந்த நிறுவனம் 50இற்கும் மேற்பட்ட நாடுகளில் தனது அலுவலகங் களைக் கொண்டுள்ளது. இந்நிறுவனத்தில் 50 ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் பணி புரிகின்றனர். கிட்டத்தட்ட $10 பில்லியன் வருடாந்த வருமானம் கொண்ட இந்நிறுவனம் பலவிதமான சச்சரவுகளில் அண்மைக் காலங்களில் ஈடுபட்டு வருகிறது.

2010ஆம் ஆண்டில் மொன்றியல் பல்கலைக் கழக வைத்தியசாலை அமைக்கும் ஒப்பந்தத்தை $1.3பில்லியனுக்குப்பெற்று அப்பல்கலைக்கழக வைத்தியசாலையை வடிவமைத்து உருவாக்கியிருந்தது. இவ் ஒப்பந்தத்தின் போது நடைபெற்ற பலவிதமான ஊழல் விவகாரங்கள் வெளியானதால் 2012ஆம் ஆண்டில் இருந்த அப்போதைய SNC - Lavalin நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் உட்பட அந்நிறுவனத்தின் CEOஆக அப்போது பணியாற்றிய Pierre Duhaime உம் பதவி விலகினர்.


Prime Minister Justin Trudeau and Veterans Affairs Minister Jodie Wilson-Raybould

இந்த ஒப்பந்தத்தைப் பெற இரகசியமாகப் பணம் வழங்கியது. அரச ஊழியர் ஒருவரைத் தவறு செய்யத்தூண்டியது எனப் பல பாரதூரமான குற்றச்சாட்டுக்கள் இந்நிறுவனத்தில் விழுந்தன. 2012ஆம் ஆண்டின் பிற்பகுதியில் கைது செய்யப்பட்ட Pierre Duhaime சில குற்றச்சாட்டுக்களை ஒப்புக்கொண்டதால் இவர்மீதான 14 பெரிய குற்றச்சாட்டுக்கள் மீளப்பெறப்பட்டன.

இவ்வாறே SNC - Lavalinஇனுடைய கட்டிட அமைப்புப் பிரிவுக்குத் துணைத் தலைவர் பதவி வகித்த Riadh Ben Aissaஉம் 2012 ஆம் ஆண்டில் பதவி விலகியிருந்தார். இவர் மீது $22.5 மில்லியன் இலஞ்சப்பணம் மொன்றியல் பல்கலைக்கழக வைத்தியசாலை அமைக்கும் ஒப்பந்தத்தைப் பெற வழங்கியது உட்பட 16இற்கும் மேற்பட்ட ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டதாக வழக்குத் தாக்கல் செய்யப்பட்டது. 2018 யூலையில் Riadh Ben Assia தவறான தகவல்கள் வழங்கிய குற்றத்தை ஒப்புக் கொண்டதால் மிகுதி 15 குற்றச்சாட்டுகளும் மீளப்பெறப்பட்டன.

2012 செப்ரெம்பரில் RCMP அதிகாரிகள் SNC - Lavalin இனுடைய ரொறன்ரோ அலுவலகத்தை சோதனை இட்டனர். பங்களாதேஷின் Padma பாலம் தொடர்பான ஒப்பந்தத்தில் SNC - Lavalin சம்பந்தப்பட்டது பற்றி ஆராயவே இந்த சோதனைகள் நடைபெற்றன. இதனைத் தொடர்ந்து உலக வங்கி பங்களாதேஷிற்கு பாலம் கட்ட வழங்கிய $1.2 பில்லியன் பண உதவியை நிறுத்தியது. அதைத் தொடர்ந்து உலகவங்கி SNC - Lavalin இற்கும் அதன் உபநிறுவனங்கள் 100இற்கும் தாங்கள் நிதிவழங்கும் செயற் திட்டங்களில் பங்குபற்ற 10 ஆண்டு களுக்குத் தடைவிதித்தது. SNC - Lavalin உம் அதன் உபநிறுவனங்களும் பங்களா தேஷ் மற்றும் கம்போடியா நாடுகளில் பலவிதமான ஒப்பந்தங்களைப்பெறத் தவறான முறையைப் பயன்படுத்தியதே இதற்குக் காரணம் எனக் கூறப்பட்டது.

2011 நவம்பரில் SNC - Lavalin ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்ட நிறுவனம் ஒன்றின் அதிகாரி ஒருவர் லிபிய முன்னாள் அதிபர் Moammar Gadhafiஇனுடைய மகனை லிபியாவில் இருந்து மெக்சிக்கோ

(தொடர்ச்சி 10ஆம் பக்கம்...)
























Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org









Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# அம்மா
## Amma Pawn Broker
## தங்கநகை அடைவு மாடம்



- ரொரன்றோவில் வர்த்தகத்துறையில் 25வது வருட வெள்ளி விழா காணும் நிறுவனம்
- உங்கள் நகைக்கு கூடிய பெறுமதியும் குறைந்த வட்டி வீதமும் தரும் ஒரே நிறுவனம்
- 5 நிமிடங்களில் உங்கள் கையில் குறைந்த வட்டியுடன் பணமும் பாதுகாப்பும் அளிக்கும் நட்பான சேவையுடன் கைராசியான நிறுவனம்.
- உங்கள் பழைய நகைகளை அதியுயர் பெறுமானத்திற்கு எம்மிடம் விற்றுக்கொள்ளலாம்

எவ்வளவு தொகையானாலும் மிக குறைந்த வட்டியுடன் எம்மிடம் பெற்றுக் கொள்ளலாம்

அம்மா போல அம்மா பவுண் புறோக்கர்ஸ்

நம்பிக்கை நாணயம் உத்தரவாதம்

**1.5% முதல் 2% வட்டி மட்டுமே (per month)**



உங்கள் முதலை மாதாமாதம் கட்டிக்குறைக்கலாம் உங்கள் கட்டுப்பணத்தை வங்கியினூடாகவும் செலுத்தலாம்.

கனேடிய அரசின் அங்கீகாரம் பெற்று முழுக் காப்புறுதி செய்யப்பட்ட முதன்மையான அடைவுசேவை

**416-757-0034, 416-994-3861**

**105A - 2425 Eglinton Ave, E, Scarborough**

ammapawnbroker@gmail.com

கடைக்குப் பின்புறத்தில் போதிய வாகனத்தரிப்பிட வசதிகள் உண்டு.

**Shankar & Co.** விற்கு அருகாமையில்




# Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale

ASSIGNMENT SALE $359900.00 ..... Occupancy closing May 2019

Brand New Never Lived In 1 Bm Condo In pickering for Sale
**Absolutely Stunning**Rarely Offered** In The Highly Anticipated San Francisco 3 Tower. Lavish , State Of The Art Recreation Facilities! Including Outdoor Pool, Hot Tub, Cabanas, Loungers And Fire Pits. Light Infused Lobby With 24 Hour Concierge. Fitness Area With Change Rooms And Sauna. <><>2 Mins To Pickering Go Station<><> And 401 Access, 4 Mins To Pickering Lake front-Marina, And Waterfront Trail, 5 Mins To Pickering Town Centre.

Broker protected.....
PATPUSH 416-894-1187


BRAND NEW CONDO APT


INDO SWIMMING POOL


OUT DOOR POOL

WIN BUY OR SELL THROUGH PAT in 2019 & WIN 1WEEK TRIP FOR TWO in CARIBBEAN** WIN

HOME SWEET LOAN



Century 21 Affiliate Realty Inc. Brokerage*
416-290-1200

**Pat Pushpakanthan**
Broker
416-894-1187

MASTERS HALL OF FAME



5% Mortgage
TJT financial
Interest rate from
2.79%
416-894-1187

** Ask for more detail and some condition apply. Or visit www.patpush.com




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும் நமது இல்லமும் - 528

## ஆதனத்தை இப்போது வாங்குங்கள் அல்லது காத்திருங்கள்!



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

### Buy Now or Wait

ஆதன வியாபாரம் மீண்டும் இன்றைய கதைப் பொருளாக மாறியுள்ளது. ஏற்றம் - இறக்கம், இதுவே இயற்கையின் நிலை மாற்றம். ஆதன 2008/2009 விலை இறக்கத்தின் பின்பான மாற்றம் 2017இல் ஆரம்பித்தது. 2018, 2019இலும் தொடர்கின்றது. மேலும் தொடரலாம்? 2015, 2016இல் ஆதனத்தை வாங்காதவர்கள் கவலைப் பட்டதும், இன்று அதிகரித்திருந்த விலை குறைந்திருப்பதால் கவலை மறந்து இருப்பதனையும் அவதானிக்கக் கூடியதாக உள்ளது. இது சரியான நிலையா?

தொடர்ந்து ஒவ்வொன்றாக ஆராய்வோம். முன்பு படித்தது ஒன்று ஞாபகத்திற்கு வருகின்றது. "முறையான, நேர்த்தியான முதலீட்டாளர் எப்பொழுதும் பொதுமையற்ற (Uncommon) செயல்களே செய்வர். அதாவது "எவரும் ஆதனம் வாங்காதபோது இவர்கள் ஆதனத்தை வாங்குவர், எவரும் ஆதனத்தை விற்காதபோது இவர்கள் ஆதனத்தை விற்பர்."

நிஜ வாழ்வில் இது உண்மை. ஆதன வியாபாரம் மிகவும் மந்தமாக உள்ளபோது முதலீட்டை ஆரம்பிப்பது சிறந்தது. சில ஆதனங்களை இவ்வாறான சந்தர்ப்பத்தில் வாங்கியபின், விலை அதிகரிக்கும்போது விலை அதிகரிப்பில் ஏற்பட்ட பணத் தொகையை முதலீட்டிற்கு உபயோகப் படுத்துவதே சிறந்ததாகும்.

எனது அனுபவத்திலிருந்து ஓர் உதாரணம் மூலம் இந்நிலைமையை ஆராயலாம்.

### 2008, 2009 ஆதனச்சந்தை நிலைமையிலிருந்து

30 வயதான நந்தன், செலவில் மிகவும் கவனமானவர். வாடகை வீட்டிலிருப்பவர். ஒரு வருடத்தில் $5000வரை சேமிப்பவர். மகிழ்ச்சியாக வாடகை வீட்டில் வாழ்ந்து வருகின்றார். கடந்த 5 வருடங்களுக்கு மேலாக 3% சேமிப்புவட்டியில் (Saving Account) சேமித்து வருகின்றார். இவரின் நோக்கம் போதியளவு பணம் சேர்த்து முதல் வீட்டிற்கு ஆரம்ப முதலீடு செய்வதே. இவரின் நிலைமை மேலும் பணம் சேர்த்து போதிய ஆரம்ப முதலீட்டுடன் வீடு வாங்குவதே. 2008இல் வீடு வாங்குவதனை தவிர்த்து தொடர்ந்து வாடகை வீட்டிலேயே இருந்து வருகின்றார்.



இரண்டாம் நபர் - நந்தினி. இவரும் 30 வயதுடையவர். அவர் தனது $25,000 பணத்தினை முதலீடு செய்து முதல் வீட்டை வாங்கியுள்ளார். இவர் வாங்கிய நகரம் "X". இவரின் வீடு 1970இல் கட்டியது. இந்த நகரில் ஏப்ரல் 2008இல் சராசரி விலை $415,450. நந்தினியின் மாதாந்த அடமானக் கொடுப்பனவு $1935.90 (40 வருட அடமானம், வட்டிவீதம் 5.19%). வீட்டின் கீழ்ப் பகுதியில் வாடகை $1000. இந்த வருமானத்திலிருந்து வருடத்தில் $5000 வரை இவரால் சேமிக்கக் கூடியதாக இருந்தது. இந்தப் பகுதியில் வீட்டின் விலை தொடர்ந்து குறைந்து வருவதனை அவரால் அவதானிக்க கூடியதாக இருந்தது. 2011இல் இந்த வீட்டின் விலை 20%இனால் குறைந்து விட்டது. ஏப்ரல் 01, 2013இல் அவரின் அடமானக்கடனின் தொகை $377,600. ஆனால் இதே மாதிரியான வீட்டின் விலை $350,000இற்குக் குறைவாகவே விற்கப்பட்டுக் கொண்டு இருந்தது. அடமானக்கடனை புதுப்பிக்க வேண்டிய காலம் நெருங்கி வந்தது. இவரின் நிலைமை இன்னும் மோசமாக இறங்கிக்கொண்டு வந்தது. 40 வருட அடமானக் காலம் மத்திய வங்கியினால் (Amortization) 25 வருடமாகக் குறைக்கப்பட்டது.

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# MORTGAGE

- ⇒ $35,000.00 வரை Personal Loan (பெர்சனல் லோன் ) தேவையா?
- ⇒ Private 1st & 2nd Mortgages தேவையா?- No Income Verification
- ⇒ மோட்கேஜ் பலன்ஸ் கட்டாது வீட்டினை பறி கொடுக்கும் நிலையில், அடுத்து என்ன செய்வதென யோசிக்கிறீர்களா?
- ⇒ Refinance / Renewal (ரிபைனான்ஸ் / ரினிவல்) செய்ய வேண்டுமா?
- ⇒ பாங்க்ரப்சி, புரபோசல் செய்தோருக்கு மோர்ட்கேஜ் தேவையா?
- ⇒ எல்லாக் கடனையும் ஒரே பேமண்ட்டாக்கா வேண்டுமா?

**கடைசி நேரத்தில் மோட்கேஜ் கிடைக்காமல்**
**வாங்கிய வீட்டை கைவிடும் நிலையில் உள்ளீர்களா?**

**அனைத்து மோட்கேஜ், ரியல் எஸ்டேட்**
**தொடர்பான தேவைகளுக்கும் ...**

**நீங்களும் வெல்லலாம்**
**$100,000** *
எம்மிடம் மோட்கேஜ் பெறுவதன் மூலம்.

MORTGAGE CLINIC



www.mortgageclinicanada.com

**உங்களுக்கு கை கொடுக்க காத்திருக்கிறது**

**416-613-2788 / 416-816-9011**



## ஜெ(Jey)இராசதுரை MBA. BBA (Hon) AMP

Team Leader/Mortgage Agent/Real Estate Broker

**Cell : 416 - 624 - 4843**

RIGHT AT HOME REALTY INC.

**1504 Markham Road,**
**Toronto ON M1B 2V9**
**(Markham Road & HWY 401)**

MORTGAGE ALLIANCE
Lic # 10530

Brokerage : 112-895 Don Mills Rd, Toronto On M3C 1W3 Corporate office : 2005 Sheppard Ave E, Suit 200 Toronto On M2J 5B4

*http://www.mortgagealliance.com/JeyRasathurai/minimize-your-mortgage-sweepstakes



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**- ஆதித்தன் -**

# வெளியாகவிருக்கும் மன்னார் மனிதப் புதைகுழி மர்மம்!

மன்னாரில் புதைகுழி ஒன்றிலிருந்து மீட்கப் பட்ட மனித எலும்புக்கூடுகளின் பகுப்பாய்வு அறிக்கை இன்னும் ஒரு வாரத்தில் (14ஆம் திகதிக்கு பின்னர்) வெளிவரும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. அமெரிக்காவின் புளோரிடாவிலுள்ள ஆய்வுகூடத்திற்குப் பரிசோதனைக்காக அனுப்பி வைக்கப்பட்ட இந்த எலும்புக்கூடு மாதிரிகளின் பரிசோதனை முடிவுகளை பொதுமக்கள் எதிர்பார்த்து நிற்கின்றனர். குறிப்பாக, காணாமலாக்கப்பட்டோரின் உறவினர்கள் இதன் முடிவை அச்சம் கலந்த உணர்வுடன் எதிர்பார்த்துக் காத்திருக்கின்றனர்.

மன்னார் மனிதப் புதைகுழியில் சுமார் நான்கு மாதங்களுக்கு மேலாக இடம்பெற்ற அகழ்வுப் பணிகளின்போது 266 எலும்புக்கூடுகளுக்கு மேல் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சட்ட மருத்துவ அதிகாரி சமிந்த ராஜபக்ஸ இதனை உறுதி செய்துள்ளார். மேலும் தொடர்ந்து அகழ்வுப் பணிகள் இடம்பெற்று வருகின்றன. மேலும் பல எலும்புக்கூடுகள் வெளிவரலாம் என்கின்ற சந்தேகத்தில் தொடர்ந்தும் தோண்டும் பணிகள் இடம் பெற்று வருகின்றன.

ஆண்கள், பெண்கள், சிறுவர்களுடையவை என எலும்புக் கூடுகள் பல அடையாளம் காணப்பட்டுள்ளன. ஆடைகளற்ற நிலையில் புதைக்கப்பட்ட மனிதர்களும், இரும்புக் கம்பியினால் கால்கள் பிணைக்கப்பட்டு புதைக்கப்பட்ட மனிதரும், பன்னிரண்டு வயதிற்கும் குறைந்த வயதுடைய சிறுவர்களும் எலும்புக் கூடுகளாக மீட்கப் பட்டுள்ளமை பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

புளோரிடாவில் மேற்கொள்ளப்பட்ட காபன் பரிசோதனையின் முடிவுகளிலிருந்து இந்த எலும்புக் கூடுகளின் காலத்தை அறிந்து கொள்ள முடியும். இதிலிருந்து எந்தக் காலகட்டத்தில் இவர்கள் கொல்லப்பட்டு புதைக்கப்பட்டிருக்கலாம் என்பது கண்டறியப்படும். தொடர்ந்து, கொல்லப்பட்டவர்கள் யாராக இருக்கலாம் என்பதையும் அறிய முடியும். இறுதிப் போர் நடைபெற்ற காலகட்டத்தில் கொல்லப்பட்டவர்களாக இருந்தால் அவர்கள் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களாகவும் இருக்கலாம்.

மன்னாரிலுள்ள இந்தப் புதைகுழி விவகாரம் மிகவும் பாதூரமானதாக இருந்த போதிலும் தமிழ் அரசியல்வாதிகள் இதற்கு அதிக முக்கியத்துவம் வழங்கவில்லை என்றே எண்ணத் தோன்றுகின்றது. அரசியல் விடயங்கள் குறித்து அடிக்கடி- அதிகம் வாதிடும் இந்த அரசியல்வாதிகள் ஏன் இவ்வாறான, பாரதூரமான ஒரு விடயம் குறித்து அதிகம் பேசுவதில்லை என்பது புரிந்துகொள்ள முடியாத ஒன்றாகவே உள்ளது.



மீட்கப்படும் எலும்புக்கூடுகள் தமிழர்களுடையவையாக இருப்பதற்கான சாத்தியம் வெளிப்படையாகவே தோன்றுகின்ற போதும் அதனை வேறு விதத்தில் திசைதிருப்பும் வகையில் தென்னிலங்கை அரசியல்வாதிகள் கருத்துக்களை வெளியிட்டு வருகின்றனர். மன்னார் புதைகுழியிலிருந்து மீட்கப்படும் எலும்புக்கூடுகள் விடுதலைப் புலிகளால் கொல்லப்பட்டவர்களுடையவையாக இருக்கலாம் என அவர்கள் கூறுகின்றனர். தமிழ் ஆயுதக் குழுக்களின் மோதல்களின் போது கொல்லப்பட்டவர்கள் இங்கு புதைக்கப்பட்டிருக்கலாம் என்றும் அவர்கள் குறிப்பிடுகின்றனர். ஆனால், இவை காணாமலாக்கப்பட்ட தமிழர்களுடையவையாக இருக்கலாம் என்பது குறித்து அழுத்தமான குரல்கள் தமிழர் தரப்பில் இருந்து பெரிதாக ஒலிக்கவில்லை.

புளோரிடா ஆய்வறிக்கையின் பின்னரே இந்த மனித எலும்புக்கூடுகள் தொடர்பான உண்மை விபரங்களை பெற்றுக்கொள்ள முடியும் என காணாமல் ஆக்கப்பட்ட உறவுகளுக்காக வாதாடும் சட்டத்தரணி வி.எஸ். நிறைஞ்சன் தெரிவித்துள்ளார்.

அண்மையில் தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பேச்சாளரும், நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ.சுமந்திரன் வெளிநாட்டு வானொலி ஒன்றிடம் “முடிவுகள் தமிழர் தரப்பிற்கு அதிர்ச்சியளிப்பதாகவிருக்கும்” எனக் கருத்து வெளியிட்டுள்ளார். இதுவொரு குழப்பமான கருத்தாகவே அமைந்துள்ளது.

காபன் பரிசோதனை மூலம் எச்சங்களின் காலத்தை நிர்ணயம் செய்யும் நடவடிக்கைகள் அமெரிக்காவின் புளோரிடாவில் நடக்கின்றன. அதன்மூலம் அக் கொடூரங்கள் நடந்தேறிய காலம் உறுதிப்படுத்தப்படுகின்றபோது அது தமிழர் தரப்புகளுக்கும் அதிர்ச்சியைக் கொடுக்கும் என அவர் தெரிவித்துள்ளார்.

“மன்னார் புதைகுழி விடயத்தில் நாம் மௌனம் காக்கவில்லை. பல இடங்களில் அது குறித்துப் பேசியிருக்கின்றோம். நாடாளுமன்றத்திலும் பல முறை உரையாற்றியிருக்கின்றோம். இவ்விடயம் குறித்து முறையான விசாரணைகள் நடத்தப்பட வேண்டும் என நாம் கேட்டிருக்கின்றோம்.

இதில், பிரதானமானது அந்தப் புதைகுழிச் சம்பவங்கள் எந்தக் காலப் பகுதியில் இடம்பெற்றவை என்பதைத் திகதியிடுவதாகும். அதை நாம் பலமுறை வலியுறுத்தியுள்ளோம். இப்போது அந்த எலும்புகள், எச்சங்களின் மாதிரிகள் அமெரிக்காவின் புளொரிடாவுக்கு அனுப்பப்பட்டுள்ளன. காபன் பரிசோதனை மூலம் அவை எந்தக் காலத்திற்கு உரியவை என்பதை நாம் உறுதிப்படுத்தக் கூடியதாக இருக்கும். அது எந்தக் காலப் பகுதிக்குரியது என்ற முடிவு வெளிவருகின்றபோது அது, தமிழ்த் தரப்புகளுக்கும் சில அதிர்ச்சிகளைக் கொடுக்கும் என்றுதான் நான் நினைக்கின்றேன்” என அவர் தெரிவித்திருக்கின்றார்.

இலங்கை அரசின் இராணுவமாக இருந்தாலும் அல்லது தமிழ் தரப்பிலே ஏதேனும் ஓர் ஆயுதக் குழு இதற்குக் காரணமாக இருந்தாலும் அவர்களும் இதற்குப் பொறுப்புக்கூற வேண்டிய தேவைப்பாடு இருக்கும் எனவும் அவர் குறிப்பிட்டுள்ளார். சுமந்திரன் கூறிய இக் கருத்திலிருந்து தமிழ் ஆயுதக் குழுக்களும் இதற்குக் காரணமாக இருக்கலாம் என்பதை அவர் வெளிப்படுத்தியிருக்கின்றார்.

தமிழ் ஆயுதக் குழுக்கள் மத்தியில் மோதல்கள் கடந்த காலங்களில் இடம்பெற்றிருக்கின்றன. அதனை மறுப்பதற்கில்லை. மன்னாரில் இந்தளவு மனிதர் கொல்லப்பட்டு அவர்களை புதைத்திருக்கக் கூடிய நிலைமை ஏற்பட்டதாக அறிய முடியவில்லை. அதுமட்டுமன்றி பன்னிரண்டு வயதிற்குட்பட்ட சிறுவர்களும், தாய்மாரான பெண்களும் மீட்கப்பட்ட எலும்புக்கூடுகளில் காணப்படுவதாக அடையாளம் காணப்பட்டுள்ளது. விடுதலைப்புலிகள் உள்ளிட்ட ஆயுத இயக்கங்கள் அவர்களைப் போன்றோரை கொன்று புதைக்க வேண்டிய தேவை இருந்திருக்க வாய்ப்பில்லை. ஆனால், இறுதிப் போரில் உறவினர்களால் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டு காணாமலாக்கப்பட்டவர்களில்



ஆண்கள் மட்டுமன்றி பெண்கள், சிறுவர்களும் உள்ளடங்குகின்றனர் என்பது குறிப்பிடத்தக்கது.

எவ்வாறாயினும், காபன் பரிசோதனை அறிக்கையின் மூலம் கொல்லப்பட்டவர்களின் காலம் கண்டறியப்பட்டு, எச்சந்தர்ப்பத்தில் இந்தப் படுகொலைகள் நடைபெற்று மனிதர் புதைக்கப்பட்டிருக்கலாம் என்பது வெளிவரும். அப்போது உண்மை தெரிய வரும். ஆனாலும், காபன் பரிசோதனை முடிவடைந்து அதன் அறிக்கை வெளிவருகின்ற நிலையில், தொடர்ச்சியாக நடைபெற வேண்டிய அடுத்த கட்ட நடவடிக்கைகள் எவ்வளவிற்கு வேகம் கொள்ளும் என்பது சந்தேகத்திற்கிடமானதாகவே உள்ளது.

எதிர்வரும் 22ஆம் திகதி ஐ.நா. மனித உரிமைகள் பேரவையின் 40வது கூட்டத் தொடர் ஆரம்பமாகவுள்ள நிலையில், இந்தப் புதைகுழி விவகாரமும் அங்கு சூடுபிடிக்கக் கூடும். அதனால், காபன் பரிசோதனை அறிக்கையின் பின்னான நடவடிக்கைகளை இலங்கை அரசாங்கம் ஆறவிடலாம் என்றே சந்தேகப்பட வேண்டியுள்ளது. ஆனாலும், விரைவில் உண்மை வெளிவந்தே தீர வேண்டும். புதைகுழி விவகாரத்தை இலங்கை அரசு புதைத்துவிடாமல் பார்த்துக் கொள்ள வேண்டும்.

CEDARGREEN COIN LAUNDRY & DRY CLEAN DEPOT
" VERY CLEAN LAUNDRY" Avoid The Rush ..... Come during weekdays!



• Large laundry Folding Tables, Lots of Space • We offer wash, Dry & fold at .99Cents /lb Commercial
. We Clean Commercial Linens, Aprons, & Towels • We Clean Uniforms Dry Clean or Wash & Dry
. We Clean Towels/Sheets from Daycare, Clinics, Hair Saloon, Nail Spa, Restaurants etc
STORE Tel: 416-289-7514
OPEN DAILY 8 am – 11 pm
Sat. & Sun 7 Am – 11 pm
(Near Bellamy & Lawrence – find us in GOOGLE !!) 3340 Lawrence Ave. East, Unit 5, Scarborough, ON M1H 1A7



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கனடாவின் பழங்குடியினரும் ஈழத்தமிழரும் – 43



குரு அரவிந்தன்

கனடாவின் ஏனைய முதற்குடி மக்கள் போலவே, இன்யூட் இனத்தவரும் தங்கள் பாரம்பரிய இடங்களில் எந்த ஒரு குறுக்கீடும் இல்லாமல் வாழ்ந்து வந்தனர். அரசியல் ரீதியாக வட அமெரிக்கா பிரிக்கப்படாமல் இருந்ததால் ஐக்கிய அமெரிக்கா, கனடா என்று இரு நாடுகள் அக்காலத்தில் இருக்கவில்லை. வரலாற்றுப் பதிவுகளின்படி, தொடக்கத்தில் புவியியல் அமைப்பில் ஒரே நிலமாக வடஅமெரிக்கா இருந்தது. அதனால்தான் வடஅமெரிக்க முதற்குடி மக்களாக இவர்கள் கணிக்கப்பட்டனர். ஜனநாயக முறைப்படி கனடா என்ற நாடு வடக்கே உருவாக்கப்பட்டதால், தற்போது கனடா முதற்குடி மக்கள் என்று இவர்கள் அழைக்கப்படுகின்றனர். 15ஆம் நூற்றாண்டு பிற்பகுதியிலும், 16ஆம் நூற்றாண்டு தொடக்கத்திலும் ஐரோப்பியரின் வருகையால் இவர்களின் இயல்பு வாழ்க்கையில் பாதிப்பு ஏற்பட்டது. தோல் வியாபாரத்திற்காக வந்த ஐரோப்பியர்கள் இவர்களின் குடியிருப்புக்களை ஆக்கிரமிக்கத் தொடங்கினர். இன்யூட் இனத்தவர் கடல் உணவுகள் குறிப்பாக சீல்கள், திமிங்கிலங்கள், மீன்கள், கடற்பறவைகள் போன்றவற்றை உணவாகக் கொண்டனர். இவற்றின் கொழுப்பை எடுத்து எண்ணையாகப் பாவித்தனர். இவற்றின் தோல், எலும்பு,




வீடு கட்டப் பாவித்த எலும்புகள்

பற்கள் போன்றவற்றை வீடுகள் அமைப்பதற்கும் மற்றும் ஆயுதங்களுக்காகவும் பாவித்தனர்.

இவர்களால் வேட்டையாடப்பட்ட கரிபு மிருகத்தின் தோலும் கூடாரங்கள் அமைப்பதற்காகப் பாவிக்கப்பட்டன. இதைவிட மரங்களையும், கற்களையும் தேவைக்கேற்பப் பாவித்தனர். எலும்பு, கொம்பு, கூரிய கற்கள் போன்றவற்றை ஆயுதங்களாகப் பாவித்தனர். மிருகத் தோல்களைக் கூடாரம் செய்வதற்கும், பாதவணி, ஆடைகள், அலங்காரப் பொருட்கள் செய்யவும் பாவித்தனர். வசதிகள் அற்ற அந்தக் காலத்தில் முதற்குடி மக்களின் வாழ்க்கை இப்படித்தான் அமைந்திருந்தது. கடலுணவும், வேட்டையாடிய பறவைகள், மிருகங்களின் உணவும்தான் அவர்களுக்கு முக்கிய உணவாக இருந்தன. குளிர் காலமும் அவர்களுக்குப் பாதகமாகவே இருந்ததால், வேட்டையாட முடியாவிட்டால் பட்டினி கிடந்த நாட்களும் உண்டு. ஐரோப்பியரின் வருகையால் சொந்த மண்ணை விட்டு இடம்பெயர்ந்து கொண்டிருந்தார்களே தவிர அவர்கள் புலம் பெயரவில்லை.

ஈழத்தமிழரின் நிலையோ வித்தியாசமாக இருந்தது. தங்கள் பாரம்பரிய நிலத்தில் குடும்பம், வீடு வாசல் என்று எல்லா வசதிகளோடும் வாழ்ந்தனர். அந்த நிலம் அவர்களது பாரம்பரிய நிலமாக இருந்தது. வடபகுதி மூன்று பக்கமும் கடலால் சூழப்பட்டு இருந்தது. இலங்கை ஒரு தீவாக இருந்ததால், வடக்குக் கிழக்குப் பகுதிகளில் தமிழர்களே வாழ்வதால், அதிக கடற்பரப்பை அவர்கள் கொண்டிருக்கிறனர். கரையோரத்தில் வாழ்ந்தவர்கள் கடலுணவு கிடைத்ததால் அதை நம்பியிருந்தனர். ஏனைய பகுதிகளில் வாழ்ந்த மற்றவர்கள் காய், கறி உணவு, மாமிசம் போன்றவற்றை நம்பி இருந்தனர். வடபகுதியில் குடி நீர் வசதிகளுக்குப் பெரிய ஆறுகள் இல்லாததால் கிணறுகளைத் தோண்டி அதில் இருந்து தண்ணீர் வசதிகளைப் பெற்றனர். இதனால் சிறிய அளவில் காய் கறித் தோட்டங்களை அமைத்து தங்கள் உணவுத் தேவைகளைப் பூர்த்தி செய்தனர். நிலத்தின் அடியிலே சுண்ணக்கல் பாறைகளைக் கொண்டிருந்ததால் மழை நீர் அடியில் தேங்கி நிற்கக் கூடியதாக இருந்தது. சுண்ணக்கற்கள் இல்லாவிட்டால் இலங்கையின் வடபகுதி தண்ணீர் இன்றி வரண்ட நிலமாகிப் போயிருக்கும். ஆனாலும் ஈழத்தமிழர் தங்கள் கடின உழைப்பால் அந்த நிலத்தை மிகவும் செழிப்பாக வைத்திருந்தனர். அவ்வப்போது இயற்கையின் பாதிப்பால், குறிப்பாக மழை, வெள்ளப் பெருக்கு போன்றவற்றால் பாதிக்கப்பட்டாலும் பெரிய அளவில் ஈழத்தமிழர் இடம் விட்டுக் குடிபெயரவில்லை.

ஆனால் அந்த மண்ணில் ஏற்பட்ட யுத்தம் காரணமாக ஈழத்தமிழரில் ஒரு பகுதியினர் முதலில் இலங்கையில் இடம் பெயரவும் அதன்பின் சிலர் புலம் பெயரவும் வேண்டிய சூழ்நிலை ஏற்பட்டது. யுத்தம் மிகப் பெரிய இழப்பை ஈழத்தமிழருக்கு ஏற்படுத்தி இருந்தது. இன்று உலகெல்லாம் தமிழர் பரந்து வாழ்வதற்கு முக்கிய காரணம் இலங்கையில் ஏற்பட்ட இந்த யுத்தமே ஆகும். எப்படி சிந்துவெளி நாகரிகத்தோடு திராவிட நாகரிகம் இணைந்திருந்ததோ அதேபோல வடஅமெரிக்கப் பழங்குடி மக்களில் ஓர் இனத்தவரான இன்யூட் நாகரிகம் தூலி நாகரிகத்தோடு தொடர்புடையதாக இருக்கின்றது. திராவிட நாகரிகத்திற்குப் பழம்பெரும் நகரங்களான மொகஞ்சதாரோ, ஹரப்பா (Mohenjo-daro and Harappa) போன்ற இடங்கள் இன்றும் சான்று கூறுகின்றன. ஆனால் துரதிஷ்ட வசமாக இப்பகுதிகள் பாகிஸ்தான் எல்லைக்குள் அகப்பட்டுக் கொண்டதால்



மேற்கொண்டு எதுவும் செய்ய முடியாத நிலை ஏற்பட்டிருக்கின்றது. அன்றைய எகிப்திய, மெசப்பொட்டோமியா நாகரிகத்திற்கு இணையாக இது இருந்திருக்கிறது.

வடஅமெரிக்காவின் முதற்குடி மக்களாகிய இன்யூட் இனத்தவரைப் பற்றிய பதிவுகள் 1500களில் ஐரோப்பியரின் வருகையைத் தொடர்ந்தே ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஆனாலும் அதற்கு முன்பே அவர்களின் முன்னோர் சிறப்பாக இப்பகுதிகளில் வாழ்ந்ததற்கான ஆதாரங்கள் இருக்கின்றன. தூலி (Thule) இனத்தவரின் வழித்தோன்றல்களே கனடாவில் வாழும் இன்யூட் இனத்தவர்கள் என்று ஆய்வாளர்கள் குறிப்பிடுகின்றார்கள். கனடாவின் வட-பகுதியில் இருக்கும் கிறீன்லாந்து என்ற தீவுதான் இவர்களின் கலாச்சாரத்தின் தொடக்கம் என்பதை நில அகழ்வு செய்ததன் மூலம் கண்டுபிடித்திருக்கின்றர். பல்லாயிரம் வருடங்களின் முன் நிலத்தொடர்பு கனடாவோடு இருந்திருக்கலாம் எனவும் ஆய்வாளர்கள் நம்புகின்றனர். தற்போது கனடாவில் இருந்து புவியியல் ரீதியாகப் பிரிக்கப்பட்ட பனியால் மூடப்பட்ட ஒரு தீவாகக் கிறீன்லாந்து இருக்கின்றது.

வட லபரடோரில் வாழும் இன்யூட் இனத்தவரின் தூலி நாகரிகம் கி.மு 200இல் இருந்து கி.பி 1600வரையும் நிலைத்திருந்ததாகத் தெரிகின்றது. திறகெல் மதியாசென் என்பவரின் தலைமையில் 1921ஆம் ஆண்டு சென்ற குழுவினர் சுமார் 1000 வருடங்களுக்கு முற்பட்ட தூலி இனத்தவரின் அடையாளங்கள் சிலவற்றை அலஸ்கா பகுதியில் கண்டெடுத்திருக்கின்றர். எஸ்கிமோக்களின் திமிங்கில வேட்டைக் கலாச்சாரத்தை இந்த அடையாளங்கள் எடுத்துக் காட்டுவதாக அவர் குறிப்பிட்டிருந்தார். இத்தகைய கலாச்சாரம் காலப்போக்கில் மூன்று வகையான கலாச்சாரமாக மாறியிருந்ததால் இதை 'நியோ எஸ்கிமோ கலாச்சாரம்' (They are Okvik/Old Bering Sea, Punuk, Birnirk, and then Thule culture) என்று குறிப்பிடுகின்றனர். வட அமெரிக்காவில் லபரடோர் பகுதியிலும், கிறீன்லாந்து பகுதியிலும் இந்தக் கலாச்சாரம் கடைசிவரை இருந்தது.

Old Bering Sea stage B.C. 200 to A.D. 500 ஆண்டுவரை இருந்த இந்தக் கலாச்சாரம் வர்ணங்கள் தீட்டப்பட்ட ஈட்டி வகையான ஆயுதங்களைக் கொண்டதாக இருந்ததாக டயமன் ஜென்னெஸ் என்பவர் குறிப்பிடுகின்றார். தோலினால் செய்யப்பட்ட பெரிய படகுகள் இக்காலத்தில் பாவனையில் இருந்ததாகத் தெரிகின்றது. இக்காலத்துப் பாவனையில் இருந்த ஈட்டிகள் கூரான எலும்புகளாலும், மான் கொம்புகளாலும் செய்யப்பட்டிருந்தன. சீல் போன்ற கடல் வாழ் இனங்களை வேட்டையாட இது போன்ற ஈட்டிகளையே பாவித்தனர். Punuk and Birnirk stages c. A.D. 800 to 1400 ஆண்டுவரை இருந்த இந்தக் கலாச்சாரம் நவீன எஸ்கி மோக்களின் நாரிகத்தைக் குறிப்பதாகத் தெரிகின்றது. வீடுகளின் அமைப்பு, ஈட்டி போன்ற ஆயுதங்களின் வேலைப்பாடு, திமிங்கில வேட்டையாடும் முறை போன்றவற்றில் வேறுபட்டிருப்பதை அவதானிக்க முடிந்தது. முன் போலல்லாது இங்கிருந்த குடியிருப்புக்கள் மிகப் பெரிதாக இருந்தன. வீடுகளின் அமைப்பும் மாறுபட்டிருந்தன, குறிப்பாக வீடுகளுக்கு மரத்தினாலான தரை அமைக்கப்பட்டிருந்தது. திமிங்கில வேட்டைக்குக் கூரிய பனித்துண்டுகளை ஆயுதங்களாகப் பாவித்தனர். வில்லும் அம்பும் பாவிக்கும் முறையும் இக்காலத்தில் அறிமுகமானது. சில ஈட்டிகளின் முனைகள் உலோகத்தால் செய்யப்பட்டிருந்தன. வடக்கு மற்றும் மேற்கு அலஸ்கா பகுதியில் இத்தகைய முறைகள் அதிகமாகப் பாவனையில் இருந்தன. முன்னைய கலாச்சாரம் போலவே இவர்களின் கலாச்சாரம் இருந்தாலும் ஓவிய வேலைப்பாடுகள் இக்காலத்தில் குறைவாகவே காணப்பட்டன.

1st & 2nd MORTGAGES... that meets your needs
MORTGAGE ALLIANCE
Mortgage Alliance
1585 Markham Road, Unit 110,
Scarborough, ON. M1B 2W1
Tel 647-350-7050
• Commercial Mortgages.
• Construction Mortgages
• Secured Credit line
• Consolidate 1st, 2nd, 3rd mortgages
SAM SURENDRAN
Mortgage Broker Lic# 16002312
Direct: 647-922-5704
www. OKmortgages.ca

Corporate Office: Mortgage Alliance, 2005 Sheppard Ave. E. Suite 200, Toronto ON. M2J 5B4 Tel: 1-877-366-3487



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மஹிந்த – மைத்திரி கூட்டு சாத்தியமா?

**- விகிர்தன் -**

இலங்கையில் இப்போது நடைபெற வேண்டிய தேர்தல் மாகாண சபைகளுக் கான தேர்தலே. ஏனெனில், மாகாண சபைகள் கலைக்கப்பட்டுள்ளன. சில மாகாண சபைகள் கலைக்கப்பட்டு பல மாதங்கள் கூடக் கடந்துவிட்டன. தற்போது மாகாணங்களின் நிர்வாகம் ஆளுநர்களின் கீழேயே நடைபெறுகின்றன. எனவே, இந்த மாகாண சபைகளுக்கான தேர்தலை இனியும் காலம் தாழ்த்தாமல் உடனடியாக நடத்த வேண்டும் என்பது பலரின் கோரிக்கையாகவுள்ளது.

ஆனால், மாகாண சபைத் தேர்தலுக்கு முன்னதாக ஜனாதிபதித் தேர்தலை நடத் தப்பட வேண்டும் என்று சில அரசியல் வாதிகள் வாதிடுகின்றனர். நாட்டில் ஏற் பட்டுள்ள அரசியல் சீரின்மை காரணமாக உடனடியாக ஜனாதிபதி தேர்தலுக்குச் செல்ல வேண்டும் என்று அவர்கள் கூறு கின்றனர். ரணில் விக்கிரம சிங்க தலைமை யிலான ஐக்கிய தேசியக் கட்சியில் உள்ள வர்கள், மைத்திரிபால சிறிசேன தலைமை யிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியில் உள்ளவர்கள் மற்றும் மஹிந்த ராஜபக்ஸ அணியில் உள்ளவர்களும் சிலர் ஜனாதிபதி தேர்தல் முன்கூட்டியே நடத்தப்பட வேண்டும் எனத் தெரிவித்து வருகின்றனர்.

கடந்த வருடம் ஒக்ரோபர் மாதம் இடம் பெற்ற பாரிய அரசியல் குழப்பநிலை முடி விற்கு கொண்டு வரப்பட்டுள்ள போதும், அரசாங்கத்தை சீராகக் கொண்டு நடத்த முடியாத நிலையே இன்னும் தொடர் கின்றது. இதுவரை காலமும் நடைபெற்று வந்த தேசிய அரசாங்கம் இப்போது இல்லாத நிலையில் நாட்டில் ஜனாதிபதி நிர்வாகமும், பிரதமமந்திரி தலைமையிலான நிர்வாகமும் வெவ்வேறு நிலைகளில் முன் னெடுக்கப்பட்டு வருகின்றன. இதனால் தொடர்ந்தும் ஒரு குழப்பான நிலையே காணப்படுகின்றது. இதனை நிவர்த்தி செய்ய ஜனாதிபதியும், பிரதமரும் ஒரே கட்சியைச் சேர்ந்தவர்களாக இருக்க வேண்டும் என்பதில் ஐக்கிய தேசியக் கட்சி முனைப்பாகவுள்ளது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன ஜனாதி பதி பதவிக் காலம் முடியும் வரை இருந்து விட்டு, அடுத்த ஜனாதிபதியாகவும் தானே வரவேண்டும் என்பதில் குறியாக நிற்கின்றார். மஹிந்த ராஜபக்ஸவோ தனது ஆள் ஒருவரை ஜனாதிபதியாக்கி இந்த அரசாங்கத்தை அடுத்த நாடாளுமன்றத் தேர்தலுக்கு முன்னதாகவே கவிழ்க்க வேண்டும் என எண்ணுகின்றார்.



ஜனாதிபதி தேர்தல் முன்னதாகவே நடத்தப் பட்டால் ஐக்கிய தேசியக் கட்சியின் ஜனாதிபதி வேட்பாளராக ரணில் விக்கிரம சிங்கவே நிற்பார் என்றே எதிர்பார்க்கப்படு கின்றது. ஐக்கிய தேசியக் கட்சிக்குள் சில முரண்பாடுகள் இருந்தாலும் இந்த விடயத் தில் அக்கட்சியினர் சுமுகமானதொரு முடிவிற்கு வரக்கூடிய சாத்தியம் உள்ளது. ஆனால், எதிரணியிலுள்ள மஹிந்த, மைத் திரி தரப்பினரிடையே பாரிய சிக்கல்கள் உருவாகும் நிலை காணப்படுகின்றது. தற்போதே அது ஆரம்பித்து விட்டது. மைத் திரி தலைமையிலான சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் மஹிந்தவின் பொதுஜன பெர முனவும் ஒன்றிணைந்து களமிறங்கப் போவதாகப் பேச்சுக்கள் அடிபடுகின்றன.

சிறீலங்கா சுதந்திரக் கட்சி மற்றும் பொதுஜன பெரமுன ஆகிய இரண்டையும் இணைத்து ஒரு கூட்டணியை உருவாக்கு வது தொடர்பில் இரு கட்சிகளுக்கிடையே யும் கலந்துரையாடல்கள் நடைபெற்று வருவதாகவும், இன்னும் இரண்டு அல்லது மூன்று வாரங்களில் இதற்கான முடிவு எட்டப்படவுள்ளதாகவும் மஹிந்த அணியினர் கூறுகின்றனர். அவ்வாறு ஓர் இணைவு சாத்தியப்பட வேண்டுமானால், மைத்திரிபால சிறிசேனவே அடுத்த ஜனாதிபதித் தேர் தலில் வேட்பாளராக நிறுத்தப்பட வேண்டும். அதற்கு மஹிந்த ராஜபக்ஸவும், பொதுஜன பெரமுன கட்சியினரும் இணக்கம் தெரி விக்க வேண்டும். இல்லா விட்டால் இந்த இணைவு சாத்தியப்படப் போவதில்லை.

மைத்திரிபால சிறிசேன தானே மீண்டும் ஜனாதிபதியாக வரவேண்டும் என்கின்ற ஆசையிலேயே இருக்கின்றார். அதற்கான வேலைத் திட்டங்களை அவர் முன்னெடுத்து வருகின்றார். அவர் பங் கேற்கும் பல நிகழ்வுகளில் அவரே தனக் கான பிரச்சாரத்தை மேற்கொண்டு வருகின்றமையினை அண்மைய நாட்களாக அவதானிக்க முடிகின்றது. தன்னாலேயே நாட்டில் ஊழல் மோடிகள் தடுக்கப்பட்டதாக வும், அடிமட்ட மக்களுக்கான அபிவிருத்திப் பணிகளுக்குத் தானே அடித்தளமிட்டு வருவதாகவும் அவர் தெரிவித்து வருகின்றார். தன்னால் வாக்குறுதி வழங்கப்பட்ட பல வேலைத் திட்டங்களை மேற்கொள்ள முடியாமல் போனமைக்கு ஐக்கிய தேசியக் கட்சியின் நிர்வாகமே காரணம் எனவும் அவர் மக்களிடம் கூறி வருகின்றார். பல சந்தர்ப்பங்களில் ஜனநாயகம், நீதிமுறை தொடர்பான தத்துவங்களையும் அவர் குறிப்பிடுகின்றார். நாட்டில் ஏற்பட்ட அரசியல் குழப்பங்களுக்கு தானே காரணம் எனப் பொதுமக்கள் நினைக்கின்றனர் என்பதை அவர் புரிந்து கொண்டுள்ளார். எனினும், அக்குற்றச் சாட்டில் இருந்து தப்பித்துக் கொள்வதற் கான வழிமுறைகளையும் அவர் தேடிக் கொண்டிருக்கின்றார். குறிப்பாக, கடந்த அரசியல் குழப்பநிலையிலிருந்து நாட்டைக் காப்பாற்றியதில் தமிழ், முஸ்லிம் சிறு பான்மைக் கட்சிகளின் பலம் என்னவென் பதை அவர் நன்றாகவே தெரிந்து கொண்டுள்ளார். சிறுபான்மையினரின் ஆதரவின்றி அடுத்த ஜனாதிபதித் தேர்தலில் யாரும் வெல்ல முடியாது என்பதையும் அவர் தெரிந்து வைத்துள்ளார்.

வடக்கு கிழக்கிலுள்ள மக்களின் மனங் களை எவ்வாறேனும் வெல்ல வேண்டும் என்ற நோக்கத்துடனேயே அம்மாகாணங் களுக்கான ஆளுநர் நியமனங்கள் இடம் பெற்றுள்ளன. ஆளுநர்கள் ஊடாக தமிழ், முஸ்லிம் மக்களைக் கவர வேண்டும் என்பதே தற்போதுள்ள அவரது திட்டமாக வுள்ளது. கிழக்கு மாகாண ஆளுநராக ஹிஸ்புல்லா நியமிக்கப்பட்டமைக்கு தமிழ் மக்கள் மத்தியில் பாரிய எதிர்ப்புகள் வெளிப்படுத்தப்பட்ட போதும் தற்போது அது தணிவடைந்துள்ளது. ஹிஸ்புல்லாவும் கிழக்கு மாகாணத்திலுள்ள மூன்று சமூகங் களையும் சமனாக மதிக்கும் ஒருவராகத் தன்னை உருவகிக்கும் முயற்சியில் தற்போது ஈடுபட்டு வருகின்றார்.

வடக்கின் ஆளுநர் சுரேன் ராகவன் ஆளு நராகத் தான் பொறுப்பேற்ற நாளிலிருந்தே அதிரடியாகச் செயற்பட்டு வருகின்றார். மக்கள் நலன் சார்ந்த பல கருத்துக்களை அவர் வெளியிட்டு வருவதோடு, பல நடவ டிக்கைகளையும் மேற்கொண்டு வரு கின்றார். சில விடயங்கள் குறித்து பேசும் போது இது ஜனாதிபதியின் எண்ணம்-விருப்பம் என்பதாகவும் அவர் குறிப்பிடு கின்றார். ஆளுநர் செயலகத்தில் பணி யாற்றும் ஒருவர் இது பற்றி தனிப்பட்ட முறையில் தனது நண்பர்களிடம் கூறுகை யில், முன்னைய ஆளுநர் ரெஜினோல்ட் குரே தான் கூறும் கருத்துக்களை தன்னு டையவையாகவே குறிப்பிடுவார். ஆனால் இவர் அடிக்கடி ஜனாதிபதி மைத்திரியை மேற்கோள் காட்டுகின்றார் எனக் குறிப்பிட்டார்.

வடக்கின் முதலாவது தமிழ் ஆளுநராக சுரேன் ராகவன் இருப்பதால் தமிழ் மக்களின் நலன் சார்ந்த விடயங்களில் அவர் அதிக அக்கறை காட்டுவதாகவே தெரிகின்றது. ஆனால், அதற்கும் அப்பால், ஜனாதிபதி மைத்திரிக்கு வடக்கு மக்கள் மத்தியில் ஆதரவு திரட்டும் ஒரு மறைமுக நிகழ்ச்சி நிரல் (Hidden agenda) அவரிடம் இருப்பதைத் தெளிவாகப் புரிந்தகொள்ள முடிகின்றது.

இவ்வாறு, ஜனாதிபதி மைத்திரிபால சிறி சேனவினால் தனக்கான ஆதரவைத் திரட்டும் நடவடிக்கைகள் அடுத்த ஜனாதி பதித் தேர்தலை குறிவைத்தே நகர்த்தப் படுகின்றது. மஹிந்த ராஜபக்ஸ மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக அறிவிப்பாராக இருந்தால் மட்டுமே மைத்திரி- மஹிந்த கூட்டு சாத்தியமாகும். ஆனால், மஹிந்த ராஜபக்ஸ அண்மைக் காலமாகக் கூட ஜனாதிபதி வேட்பாளர் குறித்து இன்னும் முடிவெடுக்கப்படவில்லை என்றே தெரிவித்து வருகின்றார்.

மஹிந்த ராஜபக்ஸவின் சகோதரர்களான கோட்டாபய ராஜபக்ஸ மற்றும் பசில் ராஜ பக்ஸ இருவருக்கும் ஜனாதிபதி வேட்பாள ராகும் ஆசை உள்ளது. பசிலை விடவும் கோட்டாபய அதிக ஆவலில் இருக்கின்றார். மக்கள் தான் ஜனாதிபதி யாக வருவதையே விரும்புகின்றனர் என்று அவர் கூறி வரு கின்றார். மஹிந்த அணியில் உதய கம்மன் பில உள்ளிட்ட ஒரு பிரிவினர் கோட்டாபய வையே ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த வேண்டும் எனக் கோரிக்கை விடுத்து வருகின்றனர். குமார வெல்கம உள்ளிட்ட சிலர் குடும்ப அங்கத்தவர் களுக்கு வாய்ப்பளிப்பதை எதிர்க்கின்றனர்.

அண்மையில் இந்தியா சென்றிருந்த மஹிந்த ராஜபக்ஸ மூன்றாவது முறையாக தான் ஜனாதிபதியாகும் வாய்ப்பு இல்லா விடினும் பொருத்தமான ஒரு வேட்பாளரை தான் ஜனாதிபதித் தேர்தலில் முன்னிறுத்தப் போவதாகவும், அவரை வெற்றிபெறச் செய்து நாட்டில் பல மாற்றங்களைக் கொண்டுவரப் போவதாகவும் தெரிவித்திருக் கின்றார். மஹிந்த ராஜபக்ஸ எந்தவொரு சந்தர்ப்பத்திலும் மைத்திரியை ஜனாதிபதி வேட்பாளராக்குவது குறித்து கோடிட்டுக் காட்டவில்லை.

ஆகவே, மஹிந்தவும், மைத்திரியும் கூட்டுச் சேர்வதாகவிருந்தால் அது அடுத்து வரும் ஜனாதிபதித் தேர்தலுக்கான கூட்டாகவே அமைய வேண்டும். தன்னை ஜனாதிபதி வேட்பாளராக முன்னிறுத்த மஹிந்த ஒப்புக் கொண்டால் மட்டுமே மைத்திரி அவருடன் கூட்டுச் சேர்வார். இல்லாது விட்டால், மஹிந்த - மைத்திரி கூட்டு சாத்தியப்படப் போவதில்லை.



29 விளம்பரம் VLAMBARAM
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Canyon Press Inc.
Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059 / FAX: 416-286-0334




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வேலைத்தளங்களின் நெருக்கீடுகள்

## நாடும் நடப்பும் - 03



சி. நற்குணலிங்கம்
நெல்லியடி - இலங்கை

ஏதாவது ஒரு பிரச்சினை அல்லது சூழ்நிலைக்கு முகங்கொடுக்கும்போது அவர்களது உடல் மற்றும் மனதில் ஏற்படக்கூடிய அசௌகர்யமான நிலையே நெருக்கீடாக உணரப்படுகின்றது. ஒரு சூழலை அல்லது பிரச்சனையை உடல், உள ரீதியாக எதிர்கொள்ள முடியாத நிலையிலேயே இது தோன்றுவதாக உள்ளது. குறித்த பிரச்சனைக்கு முகங்கொடுக்க முடியாத நிலையில் அவரது உள இயக்கநிலை எழுச்சிய டைந்து காணப்படும். Hans Taylor என்பவர் உடலியல், உளவியல் தொழிற்பாட்டைப் பாதிக்கின்ற அல்லது பாதிப்பதாக அச்சுறுத்தும் நிகழ்வுகளுக்கு துலங்கும் செயன்முறை நெருக்கீடு எனக் கூறுகிறார்.

மனிதன் தனது அன்றாட வாழ்வில் பல சவால்களுக்கு முகங்கொடுக்க நேரிடுகிறது. இதனால் காலமாற்றம், அறிவியல், தொழில்நுட்ப வளர்ச்சி மற்றும் உலகமயமாதல் என்பவற்றுக்கு அமைவாகத் தன்னை தயார்ப்படுத்திக்கொண்டு வாழ்வதற்கான முயற்சிகளை மேற்கொள்கின்றான். இவ்வாறான முயற்சிகள் மனிதனைப் பல சவால்களுக்கு முகங்கொடுக்க வைக்கிறது. இச்சவால்களை எதிர்கொள்ளும் வாழ்க்கைப் போராட்டத்தில் அவனுக்கு நெருக்கீடுகள் ஏற்படுகின்றன. இவ்வாறாக வேலைத்தளங்களிலும் நெருக்கீடுகளுக்கு ஊழியர்கள் முகங்கொடுக்கின்றனர்.

ஆண்டவன் எமக்கு அழகாக, வளமாக வாழ்வதற்கு அருள் புரிந்து அன்பான வாழ்க்கையை அருளியிருக்கின்றான். இதனை உணர்ந்துகொண்டு நாம் சீரும் சிறப்புமாக வாழவேண்டும், மற்றவரையும் வாழவைக்க வேண்டும், வாழவிட வேண்டும். ஆனால் வேலைத்தளங்களில் சில நெருக்கீடுகளுக்கு ஊழியர்கள் முகங்கொடுக்க வேண்டியுள்ளது. மனிதனின் ஆரோக்கியமான வாழ்வுக்கு பெரும் சவாலை ஏற்படுத்தும் ஒரு விடயமாக இது கருதப்படுகிறது. பொதுவாக ஏதோவொரு பிரச்சினையை ஊழியர்கள் எதிர்கொண்டுதான் வாழ்ந்துவருகின்றனர். மிக அண்மைக் காலத்தில்தான் நெருக்கீடு என்ற சொற்பிரயோகம் அதிகமாகப் பிரயோகிக்கப்படுகின்றது. சிலர் மற்றவர்களைக் காட்டிலும் அதிகளவில் அதன் தாக்கத்தை கடுமையாக அனுபவிக்கின்றனர். குறிப்பாக வேலைத்தளங்களில் பணியிலுள்ளோர் அதிக நெருக்கீட்டை எதிர்கொள்வதனால் தமது குடும்பத்தின் மீதுள்ள பொறுப்புக்களிலும் வேலைத்தளத்தில் பணிகளிலும் இடர்பாடுகளை சந்திக்க நேரிடுகின்றனர். வாழ்க்கையின் சிறந்த நாட்களை அடைய சில மோசமான நாட்களோடு போராடியே ஆகவேண்டும்போல் உள்ளது. சில வேலைத்தளங்களில் சில ஊழியர்கள் என் வாழ்க்கையில் எனக்கு கஷ்டப்படாமல் கிடைத்த ஒரேவிஷயம் கஷ்டம் மட்டும்தான் என நினைத்துக்கொண்டு வேலை செய்கின்றனர். சில மேலதிகாரிகள் தம்மை மறந்து தமக்குக் கீழே வேலை செய்வோரை அயோக்கியன் என்று ஏசுவர். தேர்ந்தெடுக்கப்பட்டவன் அயோக்கியன் என்றால், தேர்ந்தெடுத்தவன் முட்டாள் என்று அர்த்தம் என்றார் தந்தை பெரியார். இதெல்லாம் அவர்களுக்கு ஞாபகத்துக்கு வரவே மாட்டாது.

ஒரு தொழில்சார் சூழலில் தொழிலின் தன்மை, வளங்களின் பயன்பாடு, சக ஊழியர்களின் நடத்தை என்பன தொழிலாளர்களுக்கு பொருந்தாத நிலையில் ஏற்படும் உடலியல், மற்றும் உணர்ச்சி ரீதியான விளைவுகள் தொழில்சார் நெருக்கீடுகள் எனப்படும். வேலைத்தளங்களில் ஏற்படும் நெருக்கீடுகளுக்கு காரணிகள் பல உள்ளன மேலதிகாரிகள் பல்வேறுபட்ட பணிகளை ஒரே நேரத்தில் அர்த்தமுள்ளதாக செய்விக்க முயல்வது, அதிக நேரம் வேலை செய்வித்தல், போதிய பாராட்டுக்கள் கிடைக்கப்பெறாமை, பணியிடத்தில் தனிமைப்படுத்தப்படல், பொருத்தமற்ற பொறுப்புக்கள், தவறான நேரமுகாமைத்துவம், கடமைகள் தொடர்பான முரண்பாடுகள், பாதுகாப்பற்ற பணி, மேற்பார்வையாளர்களின் ஆதரவின்மை, பணிநீக்கம் தொடர்பான அச்சம், அச்சுறுத்தல்கள், துன்புறுத்தல்களுக்கு உள்ளாதல், நியாயமற்ற உணர்வுகளின் விளைவுகள், ஒழுங்கற்ற தகவல் பரிமாற்றங்கள், ஆளிடைத்திறன் முரண்பாடுகள், குறைந்த சம்பளம், போக்குவரத்துசார் பிரச்சனைகள், பொருத்தமற்ற இடமாற்றங்கள், மேலதிகாரியின் முகாமைத்துவ பாணி, அரசியல் செல்வாக்கு ஆகிய இத்தகைய பிரச்சனைகளால் தொழிலாளர்கள் வேலைச்சூழலில் நெருக்கீடுகளை எதிர்கொள்கின்றனர்.

இன்று உலகில் ஆறு நபர்களுக்கு ஒருவர் ஒரு குறிப்பிட்ட நேரத்தில் நெருக்கீட்டுக்கு உள்ளாவதாக ஆய்வுகள் கூறுகின்றன. எமது பிரதேசங்களில் ஆசிரியர் தொழிலை எடுத்துக்கொண்டால், ஆசிரியத்துவத்துக்கான கற்பித்தல் தொழிலைவிட மேலதிக வேலைகள் வழங்கப்படல், உதாரணமாக மாணவர்களுக்கான தேசிய அடையாள அட்டையினைப் பெற்றுக்கொடுத்தல். அத்துடன் மாணவர்களை தண்டிக்கவோ, கண்டிக்கவோ முடியாது, இதனால் மாணவர்களை கட்டுப்படுத்துவதிலுள்ள இடர்கள், மாணவர்கள் சிறந்த பெறுபேற்றை அடைவதற்காக மேலதிகாரிகள் கொடுக்கும் அழுத்தம், மாணவர்களுக்கு கல்வியிலுள்ள நாட்டத்தை விட நவீன கலாச்சார மோகம் அதிகமாகக் காணப்படுவதால் அவர்களை கற்றலுக்குள் கொண்டுவருவது பெரும்பாடு. இவ்வாறான நெருக்கீடுகளுக்கு

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)

**JOBS! JOBS! JOBS!**

**TEMP EMPLOYMENT AGENCY**



- General Labor
- Packers
- Machine operator
- Forklift operator




Tel: 416-292-2929 Fax: 416-292-9857 OR

Email: tempemployagency@gmail.com

80 Nashdene Rd. Building - D Unit 89 Scarborough ON. M1V 5E4



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

TBC Toronto Business College
கணக்கியல் கல்வியில் ஓர் முன்னணி நிறுவனம்



Second Career candidates & International Students Welcome

You May Be Eligible For A
GOVERNMENT GRANT OF $28000
FOR STUDYING & LIVING
(unemployment or maternity)
திருப்பிச் செலுத்தத் தேவையில்லை

ACCOUNTING & PAYROLL ADMIN.
35 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

BUSINESS ADMINISTRATION
26 Weeks Diploma

COMPUTERIZED ACCOUNTING
26 Weeks Diploma (Co-op available)
Immediate Job Opportunities

EARLY CHILDCARE ASSISTANT (ECA)
Immediate Job Opportunities
40 Weeks Diploma
Accredited by the National Association of Career Colleges

FOOD SERVICE ASSISTANT
Week End Classes
Starts Jan. 26th, 2019

MEDICAL OFFICE ADMIN.(MOA)
32 Weeks Dipolma

PERSONAL SUPPORT WORKER (PSW)
Immediate Job Opportunities
28 Weeks Certificate
Accredited by the National Association of Career Colleges

PERSONAL SUPPORT WORKER (WEEK END)
38 Weeks Certificate
Immediate Job Opportunities

PART TIME COURSES
Windows 2010, Word 2016, Excel 2016
Power Point 2016, Access 2016
Quick Books 2017
Sage 50 Accounting 2017
Sage 300 2017, Auto CAD
First Aid & CPR
Food Handler Certification

- 100% Instructor Led Training
- Student Friendly Environment
- Placement Assistance
- Small Class Sizes
- Ample Free Parking
- TTC Accessible

416-291-5155 / 416-500-5300
4465 Sheppard Ave. East #208
(Sheppard & Brimley) Scarborough
www.tbcollege.com t.businesscollege@gmail.com
(Registered as a Private Career College under the Private Career Colleges Act 2005)

# பொருளாதார...

01ஆம் பக்கத்தொடர்ச்சி



Former SNC-Lavalin CEO: Pierre Duhaime

விற்குக் கடத்திவர முயன்றார் எனக் கைது செய்யப்பட்டார். அவர் SNC - Lavalin ஊழியர்களை லிபியாவிற்குள் சென்று வர வசதிசெய்து கொடுப்பதற்காகத் தான் அவர்களால் ஒப்பந்த அடிப்படையில் அமர்த்தப்பட்டதாக தெரிவித்திருந்தும் அவருக்கு மெக்சிக்கோ நீதிமன்றம் சிறைத் தண்டனை விதித்தது. அவர் 18 மாதங்களின் பின்னர் சிறையில் இருந்து விடுவிக்கப் பட்டார்.

2018 நவம்பரில் கனேடியத் தேர்தல் நிதி உதவி வழங்கும் சட்டத்தை மீறியதற்காக SNC - Lavalinஇன் முன்னாள் துணைத் தலைவர்களுள் ஒருவரான Normand Morin குற்றத்தை ஒப்புக்கொண்டுள்ளார். SNC - Lavalin நிறுவனம் 2004ஆம் ஆண்டில் இருந்து 2011ஆம் ஆண்டுவரை $8,187ஐ பழமை வாதக்கட்சிக்கும் $109,615ஐ லிபரல் கட்சிக்கும் நிதி உதவியாக வழங்கியிருக் கிறது. இது தொடர்பாக எந்தவிபரங்களும் வெளிவராமல் இருப்பதற்காகவே Normand Morin சில நிபந்தனைகளுடன் குற்றத்தை ஒப்புக்கொண்டு தண்டனைப் பணத்தைச் செலுத்தினார்.

2015 பெப்ரவரியில் SNC - Lavalin மற்றும் அதன் இரண்டு உபநிறுவனங்களின் மீது பல வருடங்களாக லிபிய அரசு ஒப்பந்தங்களை இலஞ்சம் மற்றும் ஊழல் நடவடிக்கைகள் மூலம் பெற்றனர் என RCMP அதிகாரிகளால் குற்றம் சாட்டப் பட்டது. 2011ஆம் ஆண்டுவரை $47.7 மில்லியனை தமக்குச் சாதகமாக ஒப்பந்தங்கள் பெறுவதற்காக லிபிய அரசியல் வாதிகளுக்கு வழங்கியதாக இதில் குற்றம் சாட்டப்பட்டிருந்தது.

இந்தக் குற்றச்சாட்டுகள் தொடர்பான விசாரணைகள் இன்னமும் நிறைவு பெறவில்லை. கனேடிய சட்டவிதிமுறைகளை மீறி லிபிய அரசு அதிகாரிகளுக்கு இலஞ்சம் வழங்கி ஒப்பந்தங்களை பெற்றுக் கொண்டது தொடர்பான விசாரணைகள் பல வருடங்களாக நீடித்து வருகின்றன. இது தொடர்பாக குற்றம் நிரூபிக்கப்பட்டால் SNC - Lavalin 10 வருடங்களுக்குக் கனேடிய அரசினுடைய எந்த ஒரு ஒப்பந்தம் பெறுவதும் தடுக்கப்படும். இது மிகவும் பாரதூரமாக SNC - Lavalin நிறுவனத்தைப் பாதிக்கும் மற்றும் அங்கு பணிபுரியும் பல்லாயிரக்கணக்கான கனேடியர்களையும், கனேடிய பொருளாதாரத்தையுமே பாதிக்கு மென எதிர்வு கூறப்படுகிறது. இதனால் இவ்விசாரணைகளை விரைவில் ஒரு முடிவுக்கு கொண்டுவர SNC - Lavalin உம் கனேடிய அரசும் விரும்புகின்றன.

இது தொடர்பாக SNC - Lavalin உடைய தற்போதைய CEOஉம் கனேடிய அரச அதிகாரிகளும் 79இற்கும் மேற்பட்ட சந்திப்புக்களை மேற்கொண்டுள்ளனர். கனேடிய பழமைவாதக் கட்சியின் தலைவர் Andrew Scheerஉம் SNC - Lavalin அதி காரிகளும் பல சந்திப்புக்களை மேற் கொண்டு இது தொடர்பாகக் கதைத்துள்ளனர்.

SNC - Lavalin குற்றவாளியாகக் காணப்படு மிடத்து அதன்மீது வழங்கப்படும் தண்டனை கனேடியர்களையும் கனேடியப் பொருளா தாரத்தையும் பாதிக்கும் என்பதால் கனேடிய அரசு மற்றைஅரசியல் கட்சிகளின் ஒத்துழைப்புடன் அரசியல் அமைப்பிற்கு Bill C 74 மூலம் ஒரு திருத்தத்தை சமர்ப்பித்தது. இத்திருத்தம் அரசின் வரவு செலவுத்திட்ட விவாதத்தின்போது சமர்ப்பித்து அமலாக்கப்பட்டது.

இந்த அரசியல் அமைப்புத்திருத்தத்தின் மூலம் மிகவும் பாரதூரமான பொருளாதாரக் குற்றமிழைக்கும் நிறுவனங்கள் தமது குற்றத்தை ஏற்றுக்கொண்டால் தண்டனை யில் இருந்து சற்று விதிவிலக்கு பெற "Deferred Prosecution Agreement" எனப்படும் (DPA) வழிமுறை வகுக்கப்பட்டுள்ளது.

இந்தத் திருத்தத்தின் மூலம் ஓர் அரசு சார்பற்ற நிறுவனம் பொருளாதாரக் குற்றங்கள் (இலஞ்சம் வழங்குதல், இலஞ்சம் வாங்குதல், ஊழல் நடவடிக்கை களில் ஈடுபடுதல்) செய்திருந்தால் மற்றும் அதன்மூலம் உயிரிழப்போ அல்லது பார தூரமான காயங்களோ ஏற்படாது இருந்தால் அந்நிறுவனம் தனது குற்றங்களை ஒப்புக் கொண்டால் அவர்கள் தண்டனைப் பணத்தைக் கட்ட வேண்டும். இதுபோன்ற குற்றங்களை இனிமேல் செய்யாது தவிர்க்க வேண்டும். வருடாந்த அரச பரிசோதனைக்குத் தமது நிறுவனத்தை உட்படுத்த வேண்டும் என்ற சில நிபந்தனைகளுக்கும் அந்த நிறுவனம் கட்டுப்பட வேண்டும். இந்த அரசியல் அமைப்புத் திருத்தம் 2018 செப்ரெம்பர் 19இல் அமலுக்கு வந்தது.

இவ்வாறான DPA எனப்படும் வழிமுறை USA மற்றும் UK போன்ற நாடுகளில் ஏற்கனவே அமலில் உள்ளது. இதனாலேயே USA மற்றும் UK போன்ற நாடுகளில் மிகப்பெரிய நிறுவனங்கள் பாரிய இலஞ்ச மற்றும் ஊழல் நடவடிக்கைகளில் ஈடுபட்டால் அது பொதுமக்களுக்கு தெரிய வராமல் DPA வழி முறைகள் மூலம் தீர்வு வழங்கப்படுகிறது. இந்த DPA என்னும் சட்டமூலம் கனடாவிலும் தற்போது அமலில் இருப்பதால் SNC - Lavalin தற்போதைய அதிகாரிகள் லிபிய அரச ஒப்பந்தங்கள்



SNC-Lavalin CEO: Neil Bruce

பெற இலஞ்சம் வழங்கிய விசாரணையில் தமக்கு DPA மூலம் தீர்வு கிடைக்க

(தொடர்ச்சி 14ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

நல்லையா பாலச்சந்திரன்



# சட்டவாளர்களின் சட்டவிரோதச் செயல்களுக்கு ஆதரவான சட்டங்களுக்கு எதிராகக் போராடும் கனேடிய தமிழன்

## கனடிய தகவல் தொடர் 301




கடந்த வருடத்தின் இறுதியில் சட்டவாளர்களின் சட்டவிரோதச் செயல்களுக்கு ஆதரவான சட்டத்துடன் கனடாவில் தொடர்ந்து சில வருடங்கள் முடிவு தெரியாமல் நியாயமாகப் போராடும் தமிழனுக்கு ஆதரவாக கனடிய ஆங்கில ஊடகங்கள் செய்திகளை வெளியிட்டிருந்த நிகழ்வு கனடாவில் சட்டத்துறை, நீதித்துறை சார்ந்தவர்கள் மத்தியில் பரபரப்பான செய்தியாக உருவாகியிருந்தது.

ஏனெனில் இங்கு தமிழன் ஒருவர் கனடாவின் நியாயமன்றங்களுடன் முன்னெடுக்கும் போராட்டம் சகலருக்கும் பாடத்தினை புகட்டும் என்பது மறுக்க முடியாத உண்மை ஆகும். சட்டபூர்வமான நட்டஈடு கோரல் சட்டங்களிலுள்ள விரிசலில் வீழ்ந்திருக்கும் மோசமான சட்டத்தரணிகளிடம் பாதிப்படைந்தவர்கள் (Victims of bad lawyers falling through the mandatory compensation cracks -Toronto Star, Dec. 18, 2018.) என்ற தலைப்பில் 'ரொறன்ரோ ஸ்ரார்' பத்திரிகை உட்பட, ஏனைய ஆங்கில ஊடகங்களான CP 24 News, City News, The London Free Press எனப் பலவற்றிலும் ஒரு தகவல் என்று பாடத்தினை புகட்டும் கட்டுரையாக அவரின் படத்துடன் வெளியாகியதுடன் மற்றும் தொலைக்காட்சி, வானொலி செய்தியாக வெளிவந்திருந்தது.

என்ன நடந்தது என்ற விடயத்திற்கு இனி வருவோம். திரு. நல்லையா பாலச்சந்திரன் (63 வயது) தற்போது கனடாவின் அல்பேட்டா மாகாணத்தின் 'கல்ஹரி' நகரில் வாழ்பவர். பிரபல கம்பனி ஒன்றின் 'கிளை உரிமை' (Franchise Business) என்ற சட்டரீதியான கைச்சாத்திடப்பட்ட உடன்படிக்கையைத் தொடர்ந்து, அதன் வர்த்தக நிறுவனம் ஒன்றினை ரொறன்ரோ நகரில் எடுத்து நடத்த ஆரம்பித்தார். அன்றிலிருந்து அவருக்கு சில பிரச்சினைகள் ஆரம்பமாகின.

அந்நிறுவனத்தின் சட்டரீதியாகக் கைச்சாத்திட்ட உடன்படிக்கையில் சட்டத்தரணியின் தவறுகள் மற்றும் அசட்டையீனங்கள் அவரைப் பாதித்தன. 'தொழில்துறை சார்ந்த சட்டத்திற்கு மாறான செயல்' (Legal Malpractice) என்ற குற்றச்சாட்டின் அடிப்படையில் குறிப்பிடப்பட்ட சட்டத்தரணிக்கு எதிராக நட்டஈடு கோரி வழக்குத் தொடர்ந்திருந்தார். நீதிமன்றத்தில் இந்த வழக்கின் தீர்ப்பு நல்லையா பாலச்சந்திரனுக்குச் சாதகமாக வழங்கப்பட்டது.

**சட்டத்தரணி தொழிலில் காட்டிய கவனக்குறைவினால் பாதிக்கப்பட்ட நல்லையா பாலச்சந்திரனுக்கு $188,646 நட்டஈட்டை பாதிப்பினை உருவாக்கிய முன்னாள் சட்டத்தரணி Michael (Mike) J. Webster வழங்க வேண்டும் என்ற தீர்ப்பினை 2012ஆம் ஆண்டு ஒன்ராரியோ நீதிமன்றம் வழங்கியிருந்தது.**

நீதிமன்ற தீர்ப்பினைத் தொடர்ந்து அந்நட்டஈட்டுத் தொகையினை எப்படிப் பெற்றுக் கொள்வது? அதுவே அவரின் ஒரு தொடர் சட்டப் போராட்டமாக அடுத்த கட்டத்திற்குச் சென்றது.



கனடாவில் சகல தொழில்துறை சார்ந்தோருக்கும், அவர்களினால் வாடிக்கையாளர் ஒருவர் பாதிப்படைந்தால் நட்டஈடு வழங்க 'பொறுப்புக் காப்புறுதி' (Errors & Omissions Liability Coverage) வைத்திருப்பது வழமையாகும்.

The Law Society of Ontarioவில் அங்கத்தவர்களாக உள்ள 50,000 மேற்பட்ட சட்டத்தரணிகளிற்கு எதிரான கோரிக்கைகளுக்கு நட்டஈடு வழங்க 'LAW PRO' (Lawyers Professional Indemnity Company) என்ற காப்புறுதி நிறுவனம் கனடாவில் உண்டு. கனடாவின் சட்டவாளர்களின் தொழில்துறை சார்ந்த தவறுகளில் எந்தவொரு குடிமகனும் பாதிப்புக்கு உள்ளானால் நட்டஈடுகள், இழப்பீடுகள் வழங்கத் தயார் நிலையில் இந்நிறுவனம் உள்ளது. சகல அனுமதிப்பத்திரம் பெற்ற சட்டவாளர்களும் காப்புறுதிக்குப் பணம் செலுத்துவது போல, இக்காப்புறுதித் திட்டத்திற்குக் கட்டணம் செலுத்திக் கொண்டிருக்க வேண்டும்.

நட்டஈடு பெற பின்வரும் முகவரியில் இயங்கும் இந்நிறுவனத்திற்கு விண்ணப்பிக்க வேண்டும்.
New Claims Coordinator
Lawyers Professional Indemnity
250 Yonge Street, # 3101
P.O Box 3, Toronto, ON M1B 2L7
Phone - 1-800-410-1013

ஆனால் இங்கு மூன்று நிபந்தனைகள் உண்டு.

1. குறிப்பிடப்பட்ட சட்டத்தரணி தவறு, அசட்டையீனங்கள் செய்தவர் என்பதில் வாடிக்கையாளர் உறுதியாக இருக்க வேண்டும்.
2. குற்றப்பத்திரிகையை பண கோரிக்கைக்கு சமர்ப்பிக்கும்போது சத்தியப்பிரமாணம் செய்திருக்க வேண்டும்.
3. நீதிமன்ற தீர்ப்பு ஆணை இருக்க வேண்டும்.

ஆனால் அந்தச் சட்டத்தரணி தற்போது தமது தொழில்துறையிலிருந்து விலகிவிட்டார் என்ற காரணத்தினை குறிப்பிட்டு இந்நிறுவனம் நட்டஈடு வழங்கலை மறுத்துள்ளது (Disbarred Lawyers).

இத்தமிழனுக்கு நடந்த இதேமாதிரியான நிலைமை வேறும் பலருக்குக் கனடாவில் நடந்துள்ளமையால் இறுதியில் கனடாவின் ஆங்கில ஊடகங்கள் இதற்குக் கடும் ஆட்சேபனைகளையும் கண்டனங்களையும் தெரிவித்திருந்தன.

நட்டஈட்டில் நழுவப்படுகின்ற நலிவுற்ற சட்டத்துறை தொழில் சார்ந்தோரிடம் பாதிப்படைந்தவர்கள் "Compensation elusive for victims of unhealthy legal professionals' - Canada Pressit, Dec. 18, 2018 என்னும் தலைப்பில் நலிவுற்ற அசட்சையீனமான சட்டத்தரணிகளினால் பாதிக்கப்பட்டும், அவர்கள் தங்கள் தொழில் துறையில் இல்லாத காரணத்தினால் அவர்களின் தொழில் காப்புறுதியிலிருந்து எதுவிதமான இழப்பீடும் பெறமுடியாத நிலையில் இருப்பவர்களின் பெயர்களைக் குறிப்பிட்டு இன்னொரு ஊடகம் கண்டனக் கட்டுரை வெளியிட்டிருந்தது. அடுத்த வழியாக பாதிப்பினை உருவாக்கிய சட்டத்தரணியிடமிருந்து நேரடியாக சட்டரீதியாக அறவிட முயற்சிக்க வேண்டும். ஆனால் வருமானம் சொத்துகள் எவையுமில்லாத வங்குரோத்து நிலைமையில் சட்டத்தரணி இருந்தால் ஒன்றுமே செய்யமுடியாது.

இறுதியாக மூன்றாவது வழி ஒன்று உள்ளது. 'சட்டவாளர்கள்' எனக் குறிப்பிடப்படும் 'சட்டத்தரணிகள்' (Lawyers) மற்றும் 'சட்ட அனுசரணையாளர்கள்' (Para Legals) என்பவர்களோடான தொடர்புகளில் பாதிப்புகளை எதிர்கொண்டவர்கள் நியாயமானதொரு தீர்வினை பெறுவதற்காக அணுகும் மாகாண அரச நிறுவனம் ஒன்று பின்வரும் முகவரியில் இயங்கிக் கொண்டிருக்கிறது.

'ஒன்ராரியோ சட்ட சமூக நிறுவனம்'
Law Society of Ontario Complaints Services
Osgoode Hall, 130 Queen St. West
Toronto, ON M5H 2N6
Phone - 1-800-268-7568

- சட்டவாளர்கள் யாவரும் பொது மக்களுக்குத் தங்கள் பணிகளை சரியாக செய்கின்றனரா? என்பதனை இந்நிறுவனம் கண்காணிக்கும்.
- பொதுமக்களின் முறைப்பாடுகளை இந்நிறுவனம் ஏற்றுக்கொண்டு நியாயமான முறையில் விசாரித்துக்கொள்ளும்.
- நியாயமற்ற வழிகளில் தொழில்துறையில் தவறுசெய்யும் சட்டவாளர்களுக்கு தங்களின்

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)

TUTORING
Math / Science / English
Over 10 years of Experience (M.Sc., Mathematics)
University Math: (www.paramjyothiacademy.ca)
.CALCULUS 1,2 &3
.LINEAR ALGEBRA
Universtiy courses for:
York, Ryerson, UOFT, UOIT, Waterloo and Mcmaster
*Grade 9:MPM-1D *Grade 10:MPM-2D
*Grade 11:MCR-3u(Functions)
*Grade 12:MHF-4U(Advanced Functions)
*Grade 12:MCV-4U(Calculus and Vectors)
GR.9/10:Science(SNC1D)/SNC2D
GR.11/12:Physics(SPH3U)/SPH4U
Chemistry(SCH3U)/SCH4U
University Courses:Calculus 1,2 &3 and Linear Algebra
* Learn from a person who holds masters degree in Mathematics(M.Sc,Maths)
* Limited students per session
Call today to find out more!
Δ Grade 1-8: Math/Science/English
Δ Grade 9-12: Math/Science (Academic, applied, IB and AP)
Δ Principles of Mathematics. Δ Calculus. Δ Vectors.
Δ Functions. Δ Advanced Functions.
Δ University: Calculus-1, Calculus-2, Calculus -3
PARAM JYOTHI ACADEMY
7393 Markham Road . Door #90
647.426.6329



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இன்னல் நீக்கும் இயற்கை – 43



- அகணி -
authorakani@gmail.com

அன்பான விளம்பரம் வாசகர்களே!.

உடல் ஆரோக்கியத்திற்கான இயற்கை வழிமுறைகளைப் பற்றி உரையாடும் இந்தத் தொடர்கட்டுரையில் உளஆரோக்கியம் பற்றியும் பேசவேண்டிய அவசியம் உள்ளது. அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்களின் "ஆளுமை மலர உளஆற்றுப்படுத்தல்" என்ற நூலில் இருந்து சில விடயங்களை உங்களோடு உரையாடிக் கொள்வது மிகவும் பொருத்தமாக இருக்கும் என்று நம்புகின்றேன்.

உளஆரோக்கியத்தில் ஏற்படும் பாதிப்புகளிற்கு மிகவும் இன்றியமையாத இயற்கையான மருத்துவமுறை உள ஆற்றுப்படுத்தல் என்று நாங்கள் சொல்லிக் கொள்ளலாம். "உளஆற்றுப்படுத்தல் முறைகள் உளஆற்றுப்படுத்துநர் நெறிப்படுத்தும் அணுகுமுறை (Directive ap proach), துணைநாடுநர் நெறிப்படுத்தும் அணுகுமுறை (Non-directive approach) என இரண்டாகப் பிரிக்கப்படுவதாக அருள்தந்தை இராசேந்திரம் ஸ்ரலின் அவர்கள் கூறியுள்ளார். உளஆற்றுப்படுத்துநர் உளஆற்றுப்படுத்தல் அமர்வை முன்நகர்த்திச் செல்லும் முறை முதலாவது. இந்த அணுகுமறையில் உள ஆற்றுப்படுத்துநர் வழங்கும் அறிவுறுத்தல்களை செய்வதன் மூலம் துணைநாடுநர் பின்பற்றி தனது உளஆரோக்கியத்தை மேம்படச் செய்கின்றார். இரண்டாவது அணுகுமுறையில் துணை நாடுநரே உளஆற்றுப்படுத்தல் அமர்வை முன்னெடுத்து இயக்குவார். இந்த அணுகுமுறையை ஆள்மைய ஆற்றுப்படுத்தல் (Person-centred therapy) என்றும் அழைப்பர்.

உளஆற்றுப்படுத்தல் வடிவங்கள் தனியாள் ஆற்றுப்படுத்தல் (Individual Councelling), குழுவழி உளஆற்றுப்படுத்தல் (Group Counselling), குடும்ப ஆற்றுப்படுத்தல் (Family Counselling) என மூன்று வடிவங்களைக் கொண்டது. முதலாவது வடிவம் தனியொருவருக்கு ஆற்றுப்படுத்தல் செய்யப்படுவது. ஒரு குழுவினருக்கு ஆற்றுப்படுத்தல் செய்யப்படுவது. மூன்றாவது வடிவம் ஒரு குடும்பத்தினருக்கு ஆற்றுப்படுத்தல் செய்யப்படுவது.

உளஆற்றுப்படுத்தல் பிரிவுகள் உள ஆற்றுப்படுத்தல் திறன்கள் (Councelling Skills), உளக்குணமாக்கல் அணுகு முறைகள் (Psychotherapies), விசேட குழுவினருக்கு உளஆற்றுப்படுத்தல் (Councelling Special Groups) என்பனவாகும்.

திறன்கள் அடிப்படைத்திறன்கள், தேர்ச்சி நிலைத்திறன்கள் என இரண்டு வகை. பல வகையான உளக்குணமாக்கல் முறைகள் உள்ளன. விசேட குழுவினருக்கான உளஆற்றுப்படுத்தல் என்பதில் சிறுவர்களுக்கு, இளைஞர்களுக்கு, முதியோருக்கு, குடும்ப உறுப்பினருக்கு, தம்பதியினருக்கு பாடசாலை உளஆற்றுப்படுத்தல், தொழில் மைய ஆற்றுப்படுத்தல், ஒருபால் சார்ந்தோருக்கு என பல்வேறு விசேட குழுக்களுக்கு வழங்கப்படும் உளஆற்றுப்படுத்தல்.

உளஆற்றுப்படுத்தல் தேவைப்படும்பொழுது பொருத்தமான ஆற்றுப்படுத்துநரினை நாடி ஆற்றுப்படுத்தலைப் பெற்றுக் கொள்வது மிகவும் அவசியமானது என்பதை வலியுறுத்த விரும்புகின்றேன். நமக்கு சிறிய அளவில் மனவழுத்தம் ஏற்படும்பொழுது நமக்கு வேண்டியவர்களுடன் உரையாடி மனவழுத்தத்தால் பாதிக்கப்படாது நம்மை நாமே பாதுகாத்துக் கொள்ள வேண்டும். உடலைப் போன்று உள்ளத்தையும் ஆரோக்கியமாக வைத்திருக்க வேண்டியது மிகவும் முக்கியமானது.

இப்பொழுது கறுவாப்பட்டையில் அல்லது இலவங்கப்பட்டையில் (Cinnamon) உள்ள மருத்துவ குணங்களைப் பற்றி ஆராய்வோம். விஷம் உள்ள பூச்சிகளால் கடிக்கப்பட்டு உடலில் பாதிப்பு ஏற்படும்பொழுது பாதிக்கப்பட்ட இடத்தில் இலவங்கப்பட்டையை அரைத்து அதனால் பற்றுப் போட்டு வந்தால் குணமாகும். வயிற்று வலி, வாந்தி போன்ற பிரச்சினைகள் ஏற்படும்பொழுது இலவங்கப்பட்டை, சுக்கு, ஏலக்காய் ஆகியவற்றைக் கலந்து அரைத்து தேன் சேர்த்து நாளொன்றுக்கு மூன்று வேளையும் சாப்பிட்டு வந்தால் குணமாகும். குழந்தை பெற்றெடுக்கும் தாய்மார் இலவங்கப்பட்டையில் கசாயம் செய்து குடித்து வந்தால் கருப்பை சுருங்கி விரைவில் வழமைநிலைக்குத் திரும்புவர். மாதவிடாய்க்காலங்களில் அதிக உதிரப் போக்குடைய பெண்கள் இலவங்கப்பட்டையை உட்கொண்டு வந்தால் நிலைமை சீராகும். நாளாந்த சமையலில் இலவங்கப்பட்டையை சேர்த்துப் பயன்படுத்திவர செரிமானம் சீராகும். வயிற்றில் புண் ஏற்படாது பாதுகாக்கும் தன்மையும் உண்டு. உடலின் எடையைக் குறைக்கும் தன்மை உண்டு. உடலில் நார்ச்சத்து இதனால் கிடைக்கும். உடலில் உள்ள நச்சுப்பொருட்களை வெளியேற்ற உதவும். உடலில் உள்ள சளித்தன்மை, நீர்த்தன்மை ஆகியவற்றைப் போக்கும் தன்மை கொண்டது. மூளையின் ஆரோக்கியத்திற்கு உதவி செய்து அல்சீமர், பார்க்கின்சன் நோய் போன்றவை ஏற்படுவதைத் தடுக்கும். வாயில் உள்ள பக்ரீரியாக்களை அழித்து பல்லின் ஆரோக்கியத்திற்கு உதவும்.இதன் காரணமாகவே பற்பசைத் தயாரிப்பில் இலவங்கப்பட்டையும் சேர்க்கப்படுகிறது. நரம்புகளின் ஆரோக்கியத்திற்கும் உதவுகிறது.

மூட்டுவலிக்குச் சிறந்த மருந்தாக இலவங்கப்பட்டை உதவுகிறது. மூட்டுவலிக்குக் காரணமான மூட்டுக்களின் இறுக்கத்தை



அதிகளவில் தளர்த்தும் வலிமை இலவங்கப்பட்டைக்கு உண்டு. வாயின் துர்நாற்றத்தை நீக்குவதற்கு இலவங்கப்பட்டை மிகவும் பயனுள்ளது. உடலில் பசியைத் தூண்டும் தன்மை கொண்டது. தலையில் உள்ள முடியுதிர்வைக் குறைக்கக் கூடியது. உடலில் உள்ள தீங்கான கொழுப்பினைக் கரைக்கக் கூடியது. கிறீன் ரீயுடன் சேர்த்துக் குடிக்கும்பொழுது அதிக பலன் ஏற்படும். நினைவாற்றலை அதிகரிக்கச் செய்யும் தன்மை கொண்டது. இருமல் குறைவதற்கும் உதவக்கூடியது. உணவில் சேர்க்கப்படும்பொழுது நல்ல வாசனையை அளிக்கக் கூடியது.

இலவங்கப்பட்டை இலங்கையில்தான் முதலில் உற்பத்தியானது என்ற உறுதியற்ற தகவலும் உண்டு. சமிபாட்டுக்கு கடினமான உணவுகளில் இலவங்கப்பட்டையும் சேர்க்கப்படுவது வழக்கம். திக்குவாய் பிரச்சினைக்கும் இலவங்கப்பட்டை தீர்வாக உதவும். ஆண்களின் விந்து வீரியத்திற்கும் இலவங்கப்பட்டை உதவும். இரவில் சாப்பாட்டிற்கு ஒருமணி நேரம் கழித்து காய்ச்சிய தேங்காய்ப்பாலில் சிறிதளவு இலவங்கப்பட்டைத் தூளைச் சேர்த்து உண்டால் ஆண்களின் விந்து வீரியம் அதிகரிக்கும். சிறிதளவு இலவங்கப்பட்டைத் தூளை தேனுடன் கலந்து சாப்பிடுவதால் இதய ஆரோக்கியத்திற்கும் உதவும்.

தொப்பையைக் குறைப்பதற்கு ஓர் அங்குல நீளமான இஞ்சித்துண்டு, இலவங்கப்பட்டை அரை அங்குல நீளத் துண்டு, நான்கு கராம்பு ஆகியவற்றை 100 மில்லி லீற்றர் நீரில் போட்டு நிறம் மாறும்வரை காய்ச்சிய பின்பு அரை ரீஸ்பூன் மஞ்சள் தூள், ஆறு மிளகு இடித்த தூள், ஆகியவற்றை போட்டு மென்சூட்டில் நாளொன்றுக்கு இரு தடவை குடித்து வந்தால் பயன்கிடைக்கும் என்று சொல்லப்படுகிறது.

இலவங்கப்பட்டையை அதிகமாகப் பயன்படுத்தினால் உடலுக்கு தீங்கு விளைவிக்க கூடும் என்பதையும் மனதில் வைத்துக் கொள்ளுங்கள். வாய்ப்புண், பல்வலி, கல்லீரல் போன்ற உறுப்புக்களில் பாதிப்பு போன்ற ஆபத்துக்கள் இலவங்கப்பட்டையை அதிகமாக உட்கொள்வதால் ஏற்படும். உடலில் உள்ள குருதியில் சர்க்கரை அளவை அதிகமாகக் குறைத்து விடும் தன்மையும் ஏற்பட்டு விடும். சுவாசப் பிரச்சினைகள் கூட ஏற்படக் கூடும்.

நாளொன்றுக்கு ஒரு ரீஸ்பூன் அளவுக்கு மேல் உட்கொள்ளக் கூடாது. இலவங்கப்பட்டையை அதிகமாகப் பயன்படுத்துவதால் புற்றுநோய் கூட ஏற்படலாம். எனவே மிகவும் கவனமாக சிறிதளவு மட்டுமே சாப்பிடவேண்டிய பொருளாக இலவங்கப்பட்டை உள்ளது. இதனை ஒருபொழுதும் அதிகமாகச் சாப்பிட்டு விடாதீர்கள். சிறுநீரகமும் பாதிக்கப்பட்டு விடும். நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

(தொடரும்)

**அன்பான விளம்பரம் வாசகர்களே!**

இயற்கை வளங்களால் எவ்வாறு இன்னல் நீங்கி வாழலாம் என்று அறியும் பொருட்டு எழுந்த தேடலில் கிடைத்த தகவல் பதிவாக அசைந்து கொண்டிருக்கும் இந்தத் தொடர் கட்டுரை எமது பொது அறிவை விருத்தி செய்யும் நோக்குடன் எழுதப்படுகின்றது. இந்தக் கட்டுரையில் கூறப்படும் கருத்துக்கள் இயற்கை சார்ந்து இருந்தாலும் உங்கள் உடல்நிலைக்கேற்ப பொருத்தமான மருத்துவ கருத்துக்களாக அமைந்துவிடாது என்பதை கவனத்தில் எடுத்துக் கொள்ளுங்கள். எப்பொழுதும் பொருத்தமான வைத்திய ஆலோசனையை மேற்கொள்ளுங்கள் என்று வலியுறுத்திக் கூறிக் கொள்கின்றேன். ஆனாலும் நாம் இயற்கையோடு இணைந்து வாழ்வதற்கான தகவலையும், விழிப்புணர்வையும், ஆரோக்கியமாக வாழ்வதற்கு வேண்டிய பொதுவறிவையும் இந்தக் கட்டுரை வழங்கும் என்று நம்புகின்றேன்.

நாமும் நன்றாக வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும்.

பிறர் நம்மைச் சமாதானப்படுத்த வேண்டும் என்று எதிர்பார்க்காமல், நாம் பிறரைச் சமாதானப்படுத்த முயற்சிக்க வேண்டும்.

ARISTO PEST CONTROL
Set Your Mind At Rest, We Will Get Rid Of The Pest
24HRS / 7 DAYS EMERGENCY SERVICES & ANIMAL REMOVAL

• Cockroach • Bedbug • Animal Control • Mice
• Bird Control • WASPS • Hornets Removal • Rat
Government Licensed Exterminator
(We Speak English, Gujarati & Hindi)
Same Day Service - Residential, Commercial, Industrial
We Also Provide No Obligation Inspection For Commercial & Residential Clients
Written Guarantee & Discounted Rates - Call Now 647.339.3926
info@aristopestcontrol.ca / www.aristopestcontrol.ca



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# 2nd Semester: 2019

# MATH WORLD

Teaching Experience in MATH For More Than 25 Years!

## SCORE HIGH IN MATH

## 90's

**"Limited Space"**

## G12

## G9,10,11

**We specialize in the most important grades**

- Classes start in advance for high results
- We provide math instruction rather than tutoring
- Giving the best guaranteed result

## 416 666 5515

**Meeting must be held before the class starts, Call to make an appointment**

*61 SNOWY OWL WAY SCARBOROUGH ON Markham/McNicoll*




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நாமும்...

04ஆம் பக்கத்தொடர்ச்சி

அடமானக் கடனை புதுப்பிக்க வேண்டிய

காலம் வந்து விட்டது. ஆனால் 5 வருட வட்டிவீதம் 2.64%ஆகக் குறைந்து விட்டது. இப்பொழுது இவரின் மாதாந்தக் கொடுப்பனவு $1717.96ஆகக் குறைந்து விட்டது. ஏறக்குறைய $900 அடமானக்கடனின்

முதலை நோக்கிச் செல்ல தொடங்கியது. இவரின் கீழ்ப்பகுதி வாடகையாளர் தொடர்ந்து வாடகை செலுத்திக் கொண்டே வருகின்றார்.

இதே காலத்தில் நந்தனின் (மற்றையவர் வாடகைக்கு இருப்பவர்) வாடகை வருடா வருடம் அதிகரித்தே வருகின்றது. இவர்களின் நிலைமையை 2018இற்குக் கொண்டு வருவோம். நந்தினியின் இன்றைய வீட்டு விலை $500,000. இவரின் அடமானத் தொகை $320,759.02 இவரின் வீட்டின் நிகர அதிகரிப்பு $100,000இற்கு மேலாக உள்ளது. வருடாந்த சேமிப்பு $50,000 இற்கு மேலாக உள்ளது (வருடாந்த சேமிப்பு)

நந்தனிற்கு இறக்கம் என்றும் ஏற்படவில்லை, தலையிடி இருந்ததில்லை. மாதாமாதம் வாடகையை மட்டுமே செலுத்தி வந்துள்ளார்.

எந்த சந்தர்ப்பத்திலும் அவர் வீடு வாங்கவில்லை. இன்று 2018இல் இவரின் கணக்கின்படி வீட்டின் விலை மேலும் இறங்கப் போகின்றது. இவரின் வங்கிக்கணக்கில் $75,000 சேமிப்பு பணமாக உள்ளது. இவரின் வீட்டு முதலாளி இவரிற்கு அன்புடையவராக இருக்கின்றார். ஏனெனில் வீட்டு உரிமையாளரின் மிகப்பெரிய அடமானக்கடனை இவரே செலுத்தியுள்ளார்.

### இவர்களில் எவர் முன்னுள்ளார்

10 வருடத்திற்குப் பிறகு... நந்தனின் பண அதிகரிப்பு $75,000 (சேமிப்பு). நந்தினியின் பணப்பெறுமதி $150,000இற்கு சற்று அதிகம். நந்தினியின் $25,000 முதலீடு 4 மடங்கிற்கு மேலாக அதிகரித்துள்ளது.



நந்தினியின் நிலைமை முற்றாக மாறிவிட்டது. இருக்கும் வீட்டை விற்று புதிய வீட்டை வாங்கலாம். அல்லது மேலுள்ள பகுதியையும் வாடகைக்கு கொடுத்துவிட்டு வீட்டின் Equity இலிருந்து தனக்கான வேறு வீடு, மனையை வாங்கலாம்.

முடிவு அவருடையதே, ஆனால் நந்தனின் நிலைமை? யாராக இருக்க விரும்புகிறீர்கள் என்பது ஒவ்வொருவரினதும் தனிப்பட்ட முடிவு.

என்னுடைய முடிவு நந்தினியாக இருப்பது. ஆதனம் என்பது நீண்டகால முதலீடு. முதலீடு செய்யும் இடம் மிகவும் முக்கியம் என்பது நினைவிலிருக்க வேண்டிய முதற்கோட்பாடாகும்.

இவ்வாறான பல உதாரணங்களைச் சொல்லலாம். மேலும் ஓர் எடுத்துக்காட்டுடன் முடிக்கலாம். 1993இன் ஆரம்ப காலத்தில் ஏறக்குறைய 10 பேருக்கு ஸ்காபரோ பகுதியில் அடுக்குமாடி மனைகள் $80,000 - $88,000 வரை விற்றேன். பலர் விற்று வாங்கி, வாங்கி விற்று இன்று பல வீடுகளை உரிமையாகக் கொண்டுள்ளனர். சிலர் அதே அடுக்கு மாடி மனையிலேயே வாழ்ந்து வருகின்றனர். யாதும் சரி. யாதும் தவறு. நின்மதியே மேல். அது அவரவர் மனதைப் பொறுத்ததே.

# வேலைத்...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

ஆசிரியர்கள் உட்படுவதால் சிலர் உரிய வயதுக்கு முன்னரே ஓய்வு பெற விரும்புகின்றர்.

யாழ். மாவட்டத்தின் அரச, தனியார் வங்கி ஊழியர்களை எடுத்துக்கொண்டால், வங்கிகளில் நெருக்கீடுகள் அதிகமாக பணத்தோடு தொடர்புபட்ட உயர் பதவி நிலைகளிலேயே ஏற்படுகின்றது. இது தவிர்க்க முடியாதது என்ற வகையில் வங்கி உத்தியோகத்தர்கள் அதிகமாக நெருக்கீடுகளுக்கு உள்ளாவதைக் காணலாம். இது தொடர்பான ஆய்வுக்காக யாழ். மாவட்ட வங்கிகளிலிருந்து 100 ஆண்களையும், 100 பெண்களையும் மாதிரிகள் அடங்கலாக 200 மாதிரிகள் உள்வாங்கப்பட்டனர். வங்கி உத்தியோகத்தவர்களில் 52%மானோர் அதிகூடிய தொழில்சார் நெருக்கீட்டுக்கு உள்ளாகியுள்ளனர். மேலும் 16%மானோர் மிதமான நெருக்கீட்டுக்கு உள்ளாகியுள்ளனர். இதற்குக் காரணம் அதிகரித்த வேலைப்பளு. திருமணமானவர்களுள் 60%மான ஊழியர்கள் நெருக்கீட்டுக்கு உள்ளாகியுள்ளனர். அண்மைக் காலங்களில் திருமணமான பெண்களே அதிகம் நெருக்கீட்டுக்கு உள்ளாகியுள்ளனர். சிலர் அவசரம் அவசரமாக மதியநேர இடைவேளையின்போது தமது குடும்பப் பொறுப்புக்களை நிறைவேற்றுகின்றனர். உதாரணமாக பிள்ளைகளை பாடசாலைகளிலிருந்து அழைத்து வருதல். வங்கிகளில் தனியார் வங்கி ஊழியர்களைவிட அரச வங்கி ஊழியர்களே அதிகம் சிரமத்தை எதிர்கொள்வதாக ஆய்வுகள் கூறுகின்றது. இது இவர்களது உடல், உள மற்றும் நடத்தை என்பவற்றை பாதிப்பதோடு மட்டுமல்லாது அவர்களது உறவு முறைகளையும் கேள்விக்குறியாக்குகிறது.

நெருக்கீட்டினால் வரும் விளைவுகள் ஊழியர்களை மட்டுமல்ல வேலைத்தளங்களிலும் பாதிப்பை ஏற்படுத்துகின்றது. உற்பத்தித்திறன் வீழ்ச்சி, வேலைகள் உரிய காலத்தில் முடிக்கப்படாமை, ஊழியர்களிடையே முரண்பாடுகள் எழல், வேலைத்தளத்தில் பற்றில்லாமல் போதல், மொத்தத்தில் நிறுவனம் பெரும் பாதிப்பை எதிர்கொள்ள நேரிடும். எனவே வேலைத் தளங்கள் ஊழியர்கள் மீது நெருக்கீடு அற்றவகையில் அக்கறை செலுத்த வேண்டும்.




# பொருளாதார...

10ஆம் பக்கத்தொடர்ச்சி

வேண்டும் என வலியுறுத்துகின்றனர்.

SNC - Lavalin இனுடைய தற்போதைய CEOஆன Neil Bruce கடந்த 2018 மே 29இல் பழமைவாதக் கட்சித் தலைவர் Andrew Scheer உடன் SNC - Lavalin இற்கு DPA மூலம் தீர்வு கிடைப்பது பற்றி ஆலோசனை நடத்தினார் என Toronto Star ஊடகம் 2019 பெப்ரவரி 10இல் செய்தி வெளியிட்டிருந்தது. இது தொடர்பாக Toronto Star ஊடகத்திற்குப் பழமைவாதக் கட்சியின் தகவல் தொடர்பு இயக்குனர் Brock Harrison மின்அஞ்சல் மூலம் இத்தகவலை உறுதிப்படுத்தியிருந்தார்.

DPA முறை மூலம் ஒரு குற்றம் இழைத்த நிறுவனம் தீர்வு பெறுவதற்கு அவர்கள் சம்பந்தப்பட்ட வழக்குகளை விசாரிக்கும் அதிகாரிகள், சட்டத்தரணிகள், நீதிபதிகளின் அனுமதி கிடைத்தால் மட்டும் போதாது. அதற்கு அரசின் நீதி அமைச்சரும் கனேடிய அரசின் சட்டமா அதிபரும் ஒப்புதல் வழங்க வேண்டும்.

லிபரல் அரசு SNC - Lavalin இற்கு DPA முறை மூலம் தீர்வை வழங்கவிரும்பியே அப்போதைய கனேடிய நீதி அமைச்சரும் சட்டமா அதிபருமாக இருந்த Jody Wilson Raybouldஇற்கு அழுத்தம் கொடுத்தது. ஆனால் அவர் அதற்கு உடன்படவில்லை. அதனாலேயே Jody Wilson Raybould இனுடைய நீதி அமைச்சர்பதவி பறிக்கப்பட்டு அவர் இராணுவவீரர்களுடைய விவகாரம் சம்பந்தப்பட்ட (Veterans Affairs) அமைச்சுக்கு மாற்றப்பட்டார் என Globe and Mail ஊடகம் செய்தி வெளியிட்டிருந்தது.



Minister of Justice and Attorney General of Canada: David Lametti

தற்போது நீதி அமைச்சராகவும் கனேடிய அரசின் சட்டமா அதிபராகவும் David Lametti நியமிக்கப்பட்டுள்ளார். அவர் SNC - Lavalin விவகாரங்களை எவ்வாறு கையாளுவார் என்பதைவிட எதிர்க்கட்சிகள் கனேடியப் பிரதமர் நீதி அமைச்சு விவகாரங்களில் தலையிட்டதை விசாரணைக்குழு வைத்து விசாரிக்க வேண்டும் என வலியுறுத்துவதிலேயே தமது கவனத்தைச் செலுத்திவருகின்றன. எதிர்க்கட்சிகளின் வேண்டுகோளுக்கிணக்க நெறிமுறைகள் (Ethics) ஆணையாளர் விசாரணை நடத்த ஒத்துக்கொண்டுள்ளார். இதே நேரம் Jody Wilson Raybould 2019 பெப்ரவரி 12இல் தனது அமைச்சுப்பதவியில் இருந்து விலகியுள்ளார். அவர் எந்த ஓர் அமைச்சுப்பதவியையும் இனிப்பொறுப்பேற்காமல் ஒரு சாதாரண நாடாளுமன்ற உறுப்பினராக இருப்பார்.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

"விண்ணளந்து வியந்து கொண்டிருக்கும் என்கண்கள், அனைத்துமளந்த எம்முன்னவர்களை அறிய விரிந்து கொள்கின்றன்."

# கீழடி அகழ்வாய்வுகள்

## கிளறப்படும் உண்மைகள்-பன்முகப் பார்வை.



- கனி -
ptons@hotmail.ca
416.261.1348

சென்ற தடவையில் இதுவரை கீழடியில் நடந்த அகழ்வுகளின் அறிக்கையை வெளியிடுவதற்காக ஆரம்ப நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன பற்றிக் கூறியிருந்தேன். இங்கு ஒரு பெரிய திருப்பம் ஏற்பட்டுள்ளதையும் காண முடிகிறது.

காமராஜர் தமிழ்நாட்டில் தொல்லியல் ஆய்வுத் துறையினை ஆரம்பித்ததில் இருந்து இன்று வரையில் 110க்கும் அதிகமான அகழ்வுகள், கல்வெட்டு ஆய்வுகள் தமிழ்நாட்டுப் பகுதிகளில் நடந்துள்ளன. இவ்வாய்வுகள் ஒவ்வோர் இடத்திலும் ஒன்றிரண்டு வருடங்கள் மட்டும் நடத்தப்பட்டு, ஏதேதோ காரணங்களைக் காட்டி, இடையில் நிறுத்தப்பட்டு விட்டன. அவ்விடங்களில் ஆச்சரியப்படும் வண்ணமாகப் பல தொல்பொருட்கள் அகழ்ந்தெடுக்கப்பட்ட போதிலும் அவை பற்றிய அறிக்கைகள் எதுவும் இன்னமும் உத்தியோக பூர்வமாக வெளிவரவில்லை என்கிறார்கள். கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்தவை எனக் கருதப்படும் எழுத்துகள் உள்ள கல்வெட்டுகள், மட்பாண்டங்கள் என்பவை கிடைத்திருந்தன. காட்டாக, 'அந்துவன்' என்ற பெயருடைய கி.மு. 6ஆம் நூற்றாண்டைச் சேர்ந்ததாகக் கருதப்படும் கல்வெட்டையும் அகழ்ந்தெடுத்துள்ளனர் என்று அறியக் கூடியதாக உள்ளது. இருந்தபோதிலும் அவை பற்றிய அறிக்கைகள் எதுவும் இல்லாததால், அவ்விபரங்கள் எங்களையும் வந்தடையவில்லை, உலகத்தவரின் கண்களிலும் படவில்லை.


அகழ்வுகளின் போது பெறப்பட்ட பொருட்கள் இப்போது எங்கே இருக்கின்றன என்பது கூடத் தெரியவில்லை. அப்படியாகத் தெரிந்த ஒன்றிரண்டு பொருட்கள் கூட, அவற்றில் உள்ள பெறுமதியான அடையாளங்கள் சிதைக்கப்பட்டு, எழுத்துக்கள் அழிக்கப்பட்டுக் கிடக்கின்றன என்பதையும் சிலர் கண்டு மனவருத்தப்பட்டுக் கூறுகின்றனர். 'அகதி சொல் அம்பலம் ஏறாது' என்பதுபோல் அவர்களின் மனக் குமுறல்கள் கூட மற்றவர்களுக்குக் கேட்கவில்லை. இவை பற்றிய அலசல் ஒன்றையும் இன்னமும் பொருத்தமான இடத்தில் தெரியப்படுத்துகிறேன். ஆனாலும் ஓரளவுக்காயினும் மகிழ்வுக்குரிய விடயமாக கீழடி அமைந்து விட்டது. பழைய மறைப்புகள் கூடக் கொஞ்சம் கொஞ்சமாக வெளியே வரத் தொடங்கியுள்ளன.

இப்படியாகச் சிறிது விழிப்பினைக் கொண்டு வந்த கீழடி எவ்விதம் இந்திய மத்திய தொல்துறையினரின் அகழ்வாய்வுக்குள் வந்தது என்பது பற்றி இனிப் பார்ப்போம். அண்மையில் இந்திய மத்திய தொல்லியற் துறையினர் இந்தியா முழுவதிலும் தமது ஆய்வுக் களத்தினைப் பெரிதாக்கி இருந்தனர். அவ்வேளையில் கர்நாடகக் கிளையில் வேலை பார்த்துக் கொண்டிருந்த அமர்நாத் அவர்களின் மனதில் 'இதனை நாம் தமிழ்நாட்டுப் பகுதியிலும் செய்யலாமே' என்ற எண்ணம் வந்தது. தமிழ்நாடும் மத்திய தொல்லியற் துறையினரின் கர்நாடகக் கிளையின் கீழ்த்தான் இருந்தது. எனவே, தனது எண்ணத்தை வேண்டுகோளாக மத்திய தொல்லியற் துறையினரிடம் அவர் வெளிப்படுத்த, அவர்களும் அமர்நாத் அவர்களின் வேண்டுகோளினை ஏற்றுக் கொண்டனர்.

மதுரைக்காரரான அமர்நாத் அவர்கட்கு சங்க இலக்கியங்கள் கூறிய வைகை நதி ஓரப்பகுதிகளை அகழ்வாய்வுக்கு உட்படுத்த வேண்டும் என்ற விருப்பம் பல நாட்களாகவே இருந்தது. இதனை எழுத்தாளர் சு. வெங்கடேசனின் 'வைகைக்கரை நாகரிகம்', 'தெற்கில் ஒரு நாகரிகம்' போன்ற கட்டுரைகள் இன்னமும் ஆர்வப்படுத்தியிருந்தன. மேலும் வைகை நதியினை ஒட்டிய பகுதிகளில் காலத்திற்குக் காலம் தொல்பொருட் சின்னங்கள் பற்றிய செய்திகள் வெவ்வேறு வடிவங்களில் வெளிவருவதையும் ஆனால் அவை பற்றி யாரும் அதிகம் கவனம் எடுப்பதில்லை என்பதனையும் அவதானித்திருந்தார். அதனால்தான் இந்நாட்களில் சராசரியாக வருடத்தில் மூன்று மாதங்கள் மட்டுமே தண்ணீர் ஓடும், அந்நாட்களில் 'வற்றா வைகை' எனச் சங்க இலக்கியங்கள் புகழ்ந்து கூறிய வைகையைத் தனது ஆய்வுக்குத் தெரிவு செய்தார். 'வற்றாத வைகை' என்ற பதம் இந்நாட்களில் சில சினிமாப் பாடல்களிலும் ஒலித்ததை நீங்கள் கேள்விப்பட்டிருப்பீர்கள்.

முதலில் தமிழரின் வாழ்வியலுடன் அந்நாட்களில் ஒன்றியிருந்த வைகை நதியினைப் பற்றியும் அதனுடனான தமிழர்களின் தொடர்பினையும் கொஞ்சம் அறிந்து கொள்வோம். குமரிக்கண்டம் கடலில் அமிழ்கையில் அழிவில் இருந்து தப்பி ஓடி வந்த பாண்டியர்கள், காவிரி நதிக்கரையின் ஓரங்களில் தங்களை வளப்படுத்திக் கொண்டு வாழ்ந்து கொண்டிருந்த சோழரைப் போலவே தமது வாழ்விடங்களை வைகை நதிக்கரையை ஒட்டிய இடங்களில் அமைத்துக் கொண்டனர் என நம்ப வேண்டியுள்ளது. குமரியில் இருந்து வந்தவர்களே மதுரை மீனாட்சி அம்மன் கோயிலைக் கட்டினர் என்ற கருத்தும் இதனை உறுதிப்படுத்துவதாய் உள்ளது. குமரியில் இருந்து வந்த பாண்டியர் அமைத்த மதுரை நகரம் கூட, இன்றுள்ள மதுரையல்ல, வைகை நதியை ஒட்டிய இடத்திலேயே அமைந்திருந்தது என இலக்கியங்களைச் சான்று காட்டிக் கூறுவோரும் பலர் உள்ளனர். மதுரை என்ற பெயர் கூட, முதற்சங்க காலத்துத் தென்மதுரையின் நினைவாகவே சூட்டப்பட்டிருக்க வேண்டும் என எண்ணுவோரும் உள்ளனர்.

வைகையில் சித்திரை மாதங்களில் 'கள்ளழகர்' தெய்வத்திற்கான திருவிழாவினைத் தமிழர் சிறப்பாகக் கொண்டாடுவது பலருக்கும் தெரிந்திருக்கும். இந்தியாவின் பல பகுதியிலும் இருந்து மக்கள் வந்து கள்ளழகரின் ஆசியினைப் பெற்றுச் செல்வதாகக் கூறுகின்றனர். கள்ளழகர் என்பது மாயோன் என்று நம்மவர் கூறுகின்ற திருமாலைக் குறிக்கிறது என்பதும் உங்களுக்குத் தெரிந்திருக்கும். மாயோன், தொல்காப்பியர் தனது தொல்காப்பியத்தில் 'மாயோன் மேய காடுறை உலகமும்' எனக் கூறிய, முல்லை மக்களின் கடவுளாகிய மாயோன் ஆவார். கள்ளழகர் விழாக் கூடக் குமரியில் இருந்து வந்த தமிழரின் விழாவின் கொண்டாட்டப் பெருப்பிப்பாக இருக்கலாம் எனவும் எண்ண இடமுண்டு.



படம் பாண்டிய நாட்டை வளப்படுத்திய வைகையின் பாதையைக் காட்டுகிறது

வைகை நதி, உலகின் பெயர் பெற்ற நதிகளைப் போலப் பெரிய நதியல்ல. இந்தியாவின் மேற்குத் தொடர்ச்சி மலைகளில், தேனி மாவட்டத்தில் உள்ள மேகமலைப் பகுதியில் உற்பத்தியாகி, கிழக்கே இராமநாதபுரம் மாவட்டத்தில் உள்ள உச்சிப்புலி என்ற இடத்தில் வங்காள விரிகுடாக் கடலில் வந்து விழுகிறது. இந்நதி கடலிற் கலக்குமிடம் பாக்கு நீரிணைக்கு அருகில் இருப்பதால், வைகையை பாக்குநீரிணையில் வந்து விழுவதாகவும் சிலர் கூறுவர். கிட்டத்தட்ட 258 கிலோமீற்றர் (160 மைல்) நீளமான இந்நதியின் வரலாறு கூட 6000 வருடங்கள் வரையில்தான் இருக்குமெனச் சில ஆய்வாளர்கள் கூறுகின்றனர். ஆயினும் தமிழரின் பழமையின் அடையாளங்களை இரகசியமாகச் சுமந்து கொண்டு, பெரிய சலசலப்புகள் ஏதுமின்றிப் பாய்ந்து கொண்டு இருக்கின்றது வைகைநதி.

இந்த வைகை நதியின் இரு ஓரங்களிலும் 2010இன் ஆரம்பங்களில் அமர்நாத் தனது குழுவினருடன் அகழ்விற்கான களஆய்வினைச் செய்யத் தொடங்கினார். அதன் முன்னராக வைகை நதி நாகரிகத்தைப் பற்றி எழுதி வந்த சு. வெங்கடேசனிடமும் கலந்தாலோசித்து சில தகவல்களைப் பெற்றுக்கொண்டார். அமர்நாத் குழுவினர், வைகைக் கரையின் இருபுறமும் 8 கிலோமீற்றர் தூரத்தில் உள்ள பகுதிகளைத் தங்களின் கள ஆய்வுக்குட்படுத்திக் கொண்டனர். 298 இடங்கள் அகழ்வாய்வுக்குப்

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கலைஞர்களை தமிழர் கைவிடமாட்டார்கள்!

## இயக்குனர் ராம் நேர்காணல்

– கண்ணன் –

நெகிழ்ச்சியில் இருக்கிறார் இயக்குநர் ராம். வெளியாவதற்கு முன்பே சர்வதேச அரங்குகளில் பல்வேறு விருதுகளையும் வென்ற படம் 'பேரன்பு'. தற்போது தமிழக மக்களின் பேரன்பையும் பாராட்டுகளையும் வென்றுள்ளது. இதனையடுத்து சென்ற வாரம் ஓர் அதிகாலையில் சென்னையில் ராமை சந்தித்தோம்.

**பேரன்பு படத்துக்கு நல்ல வரவேற்பு உள்ளது. எப்படி உணர்கிறீர்கள்?**

மிகவும் மகிழ்ச்சியாக உணர்கிறேன். பேரன்பு போன்ற படங்களை திரும்பத் திரும்ப எடுக்கலாம் என்ற நம்பிக்கையைக் கொடுப்பவர்கள் தமிழ் ரசிகர்கள்தான். கலைஞர்களை மனம் திறந்து பாராட்டுவது தமிழரின் இயல்பு. பணமாக உடனே திரும்பி வராமல் இருக்கலாம். ஆனால், பாராட்டுக்கள் எப்போதும் வந்துகொண்டே இருக்கும். அந்தப் பாராட்டுக்கள் மூலம் மாறுபட்ட கதைகளை எடுக்கும் சூழலை உருவாக்குபவர்களும் அவர்கள்தான்.

**'தங்க மீன்கள்', இப்போது 'பேரன்பு'; தொடர்ந்து அப்பா - மகள் உறவு குறித்தே படம் எடுக்கிறீர்களே, என்ன காரணம்?**

'தங்க மீன்கள்' மட்டும்தான் அப்பா - மகள் உறவுப் பற்றியது. 'பேரன்பு' இயற்கையின் முரண்களை குறித்துப் பேசும் படம். இயற்கை நிறைய வேறுபாடுகளைக் கொண்டது. அதில், ஒன்றுதான் பாலின வேறுபாடு. ஆண், பெண், மூன்றாம் பாலினம், உயர் திணை, அஃறிணை போன்ற பல்வேறு வேறுபாடுகள் குறித்துத்தான் பேரன்பில் பேசியுள்ளேன்.

இந்தக் கதையில் அப்பா சுயநலமானவர். சிறப்புக் குழந்தை என்பதால் 12 வருடங்கள் பார்க்க வராமல் இருப்பார். நிர்பந்தத்தின் காரணமாக எப்படி மகள்மீது அன்பு செலுத்துகிறார் என்று எடுத்துள்ளேன். இது உண்மைக் கதை அல்ல. நான் சந்தித்த மனிதர் மற்றும் படித்தவைகளின் தொகுப்பே 'பேரன்பு'. இப்படி ஒரு பிரச்சினை சமூகத்தில் இருக்கிறது என்று தெரியாமலேயே, சமூகம் இயங்கி வருகிறதே என்ற வியப்பு ஏற்பட்டது. நம்மை தாண்டிச் சென்றாலும்கூட நாம் கவனிக்காத, நம்மிடம் பழகினாலும் அனுமதிக் காத, அம்மனிதரின் பேரன்பு எனக்கு ஆச்சரியத்தை ஏற்படுத்தியது.

**நீங்க அப்பா செல்லமா, அம்மா செல்லமா?**

எனக்கு கிடைத்தப் பெற்றோர் ரொம்ப நட்பானவர்கள். யார்கூட செல்லமா இருந்தேன் என்று உண்மையிலேயே ஞாபகம் இல்லை. ஆனால், மனிதரிடத்தில் பேரன்போடும் நட்போடும் பழகவேண்டும் என்பதை எனக்குள் விதைத்தவர்கள் அவர்கள்தான்.



**இப்போது திரும்பிப் பார்க்கும்போது 'பேரன்பு' படத்துக்கான உங்கள் உழைப்புப் பற்றி என்ன தோன்றுகிறது?**

நான் எல்லாப் படத்துக்குமே கடின உழைப்பைப் போடுவேன். இந்தப் படமும் அந்த மாதிரிதான். இந்தப் படத்தில் நான் உழைத்தது போலவே மற்ற நடிகர்களும் கடினமாக உழைத்தனர். சிறப்புக் குழந்தையாக நடித்த சாதனா தனிப் பயிற்சி எடுத்துக் கொண்டதோடு நிறைய சிறப்புக் குழந்தைகளையும் மருத்துவர்களையும் சந்தித்து பாப்பாவாக மாறினாள். திரைப்படங்களைப் பொறுத்தவரை எப்போதும் நான் எளிமையாகத்தான் எடுக்க நினைப்பேன். ஆனால், அது ரொம்ப கடினமானது.

**பல வருடங்களுக்குப் பிறகு தமிழுக்கு மம்முட்டி திரும்ப வந்துள்ள படம் இது. அவரை இயக்கிய அனுபவம் எப்படியிருந்தது?**

மம்முட்டி பெரிய சூப்பர் ஸ்டார். 170 படங்களுக்குமேல் நடித்துள்ளார். மூன்று முறை இந்திய அரசின் தேசிய விருது வாங்கியுள்ளார். ஆனால், நான் அவரை ஒரு நடிகராகவே அணுகினேன். அமுதவன் கதாபாத்திரத்திற்கு அவர் சிறந்தவராகத் தெரிந்தார். அவரிடம் கதையைச் சொன்னவுடனேயே ஒப்புக்கொண்டதோடு படப்பிடிப்பு தளத்தில் நல்ல முறையில் ஒத்தழைப்பும் கொடுத்தார். அவரிடம் நிறைய கற்றல் இருந்தது. 'இத்தனை வருட அனுபவம், பெரிய ஸ்டார் நடிகர்' என்ற எந்த விதமான பந்தாவும் இல்லாதவர். புதிதாக வந்த ஓர் இயக்குநர் சொன்னால் கூட கேட்கக்கூடிய நல்ல மனிதர் மம்முட்டி.

**திருநங்கைகள் குறித்த பார்வை தமிழ் சமூகத்தில் இன்னும் பெரியதாக மாறிவிடவில்லை. மம்முட்டி ஒரு திருநங்கையை திருமணம் செய்துகொள்வதாகக் காட்சியமைத்துள்ளீர்களே? ரசிகர்கள் இந்த முடிவை ஏற்றுக்கொள்வார்கள் என்று நம்பிக்கை இருந்ததா?**

படமே இயற்கையின் பாலின வேறுபாடுகள் குறித்தது என்பதால், மம்முட்டியும் திருநங்கையை திருமணம் செய்துகொள்ளும் கதைக்கு ஒப்புக்கொண்டார். ஓர் உண்மையைச் சொன்னால்; ஒரு பிரியத்தை சொன்னால் மக்கள் ஏற்றுக்கொள்வர் என்ற நம்பிக்கை எனக்கு எப்போதும் உண்டு. அதனாலேயே, உண்மையைச் சொன்னேன். இது புதிதான உண்மையும் கிடையாது. ஒருவேளை, இந்தக் கதைகள் சமூகத்தில் சொல்லப்படாததால் உங்களுக்குப் புதிதாகத் தெரியலாம்.

**திருநங்கையாக நடித்த அஞ்சலி அமீர் அனைவர் பாராட்டுகளையும் பெற்றுள்ளார். அவரை எங்கு கண்டுபிடித்தீர்கள்?**

அஞ்சலி அமீர் கேரளாவைச் சேர்ந்தவர். மலையாள டிவி சேனலில், அஞ்சலி பேசிக் கொண்டிருந்ததைப் பார்த்த, எங்கள் தயாரிப்பாளர் போன் செய்து, 'நம்ம மீரா கதாப் பாத்திரத்திற்கு, இவர் பொருத்தமானவராக இருப்பார்' என்றார். நானும் பார்த்துவிட்டு ஆச்சரியப்பட்டேன். கதைக்கு பொருத்தமானவர் என்பதால், அந்தத் தொலைக் காட்சி நிறுவனத்தைத் தொடர்புகொண்டு எண் வாங்கி மீராவைக் கண்டுபிடித்தோம்.

**சிறப்புக் குழந்தைகளுக்குப் பாலியல் பிரச்சனை மட்டும்தான் உள்ளதா?**

நிறையப் பிரச்சினைகள் உள்ளன. பண்பாடு குறித்தும் சமூகம் குறித்தும் சாதாரண குழந்தைகளுக்கு ஓரளவிற்குப் புரிதல் இருக்கும். ஆனால், சிறப்புக் குழந்தைகள் இயற்கையின் கட்டுப்பாட்டிலேயே இருப்பவர்கள். அவர்களுக்கு சரி, தவறு விதிகளும் மனிதர் உருவாக்கி வைத்துள்ள சட்டங்களும் தெரியாது. அவர்களை சமூகத்தினரால் புரிந்துகொள்ள முடியவில்லை. இந்தக் குழந்தைகள் எப்படி தங்கள் பாலினத் தேவைகளை நிறைவேற்றிக் கொள்வர் என்பதை யோசிக்கவேண்டும். அதனாலேயே, அப்படி காட்சிகள் அமைத்தேன். சிறப்புக் குழந்தைகளுக்கும் உணர்வுகள் உண்டு என்பதை பதிவு செய்தேன். அவர்களும் மனிதர்தான்.

**பொதுவாக உங்கள் படங்கள் யதார்த்த வாழ்க்கையிலிருந்து தனித்து காடு, மலை என்று பயணிக்கின்றன. 'பேரன்பு'ம் அப்படித்தான். என்ன காரணம்?**

நாம் நகரத்திலேயே வாழ்வதால், யதார்த்த வாழ்க்கை என்றால் நகரம் என்று மட்டுமே நினைத்துக் கொண்டிருக்கிறோம். நிறைய மக்கள் காடுகளிலும் மலைகளிலும் வாழ்கின்றனர். கேரளாவில் பெரும்பாலானோர் காடுகளிலும் மலைகளிலும்தான் வாழ்கின்றனர். வடகிழக்கு மாநிலங்களிலும் அப்படித்தான். அது யதார்த்த வாழ்க்கை கிடையாதா? ஒவ்வொரு கதைக்கும் ஓர் இடமும் காலநிலையும் தேவைப்படுகிறது. திரைப்படம் என்பது இவ்வளவுதான் யதார்த்தம் என்று சொன்னாலும் யதார்த்தம் மாதிரி இருக்கக்கூடிய ஒன்றுதான். எனக்கு இதுதான் பிடித்திருக்கிறது.

**நல்ல கதையம்சங்களுடன் படம் எடுப்பதாக பாராட்டப்படும் அதேநேரத்தில் வசூல் ரீதியாக எடுப்பதில்லை என்ற விமர்சனமும் உங்கள் மீது வைக்கப்படுகிறதே?**

ஒவ்வொரு படத்திற்கும் ஒரு முதலீடு உண்டு. அந்த முதலீட்டை தாண்டி லாபம் வருகிறதா என்பதே முக்கியம். குறைவான

முதலீட்டில் எடுக்கப்படும் படங்களுக்கு

(தொடர்ச்சி 26ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




# பரியேறும் பெருமாள் – திரைவிமர்சனம்



ஞா. ஆரணி

தனது ஊர் மக்களுக்கு உதவ வேண்டும் என்பதற்காக பரியன் என் னும் பரியேறும் பெருமாள் (கதிர்) சட்டம் படிக்க விரும்புகிறார். கல்லூரி தொடங்குவதற்கு முதல்நாள், அவரது நாயான கறுப்பி கொடூரமாகக் கொலை செய்யப்படுகிறது. இந்தச் சம்பவம் இப்படத்தின் கதையைத் தொடக்குகின்றது.

பலமுறை பார்வையாளர்கள் பரியனுடைய திறமையைக் குறைத்து மதிப்பிடுகின்றனர். சட்டம் படிக்கவந்த பரியன் ஏன் கலாநிதிப் பட்டம் பெற விரும்புகிறார் என்றும், ஆங்கிலத்தில் கற்பிக்கப்படும் பாடத் திட்டத்தில் எவ்வாறு ஆங்கிலம் தெரியாமல் அவர் படிக்கிறார் என்பதற்கும் விளக்கம் தெரியும் பொழுது பரியனுடைய கெட்டித் தனமும், சாதியின் கொடுமையும் பார்வை யாளர்களுக்கு இப்படத்தில் தெளிவாக விளங்கப்படுத்தப்படுகிறது.

வெவ்வேறு சாதி மக்கள் ஏன் ஒன்றாகச் சேர்ந்து இருக்க முடியாது? தமிழ் நாட்டில் ஏன் தமிழில் சட்டம் படிக்க முடியாது? போன்ற கேள்விகளும் இப்படத்தில் எழுப்பப்படுகின்றன.

படத்தின் முதல் பாகத்தில் பரியன் படிப்பில் மட்டுமே கவனம் செலுத்தி, தான் எதிர் கொள்ளும் ஏனைய பிரச்சினைகளில் ஈடுபடாமல் இருக்கின்றார். ஆனால் அவரது சக மாணவியும், தோழியுமான ஜோ (ஆனந்தி) அவரை தங்களது வீட்டுக் கல்யாணத்திற்கு வரவழைக்கும் பொழுது அவளுக்குத் தெரியாமல் அவவின் குடும்பத்தவரால் பரியன் அவமதிக்கப்படு கிறார். இதன் பின்னர் சாதிப்பிரச்சினையைத் தாங்க முடியாத பரியன் எவ்வாறு தன்னைத் தாக்க வருபவர்களை தனியாக நின்று சமாளிக்கிறார் என்றும், பரியன் ஒரு சட்டத்தரணி ஆவாரா, சாதி வெறியர் களிடம் இருந்து தப்புவாரா எனவும் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

எல்லோருடனும் எளிமையாகப் பழகும் பரியனும், மற்றவர்களுடன் நட்பாக அவர் பழகும் முறையும் படத்தில் நன்றாகக் காட்டப்பட்டுள்ளது. எனவே பரியன் வெற்றி பெற வேண்டும் எனப் பார்வையாளர்களும் விரும்புகின்றனர். சண்டையில் சிக்கி, பிரச்சினையில் மாட்டுப்படுவாரோ என எல்லோரும் அஞ்சுகின்றனர்.

வெவ்வேறு சாதி மக்கள் ஒன்றாகப் பழகுவதைத் தடுப்பதும், சாதி வெறிக் கொலைகளும் இப்படத்தில் காட்டப்பட்டா லும் கதை ஒரு குறிப்பிட்ட பிரச்சினையில் நிலையாக நிற்காமல் பரியனின் கல்லூரி வாழ்க்கையை எளிமையாகத் தொடர்ந்து காட்டுகிறது. இது இயக்குனர் சட்டம் படித்தவர் என்பதால் இயல்பாக வந்திருக்கலாம்.



தேவையான நேரங்களில் பரியனின் கல்லூரி அதிபரும் அறிவுரை வழங் குகிறார். திருப்பி அடிக்க, படிப்பும் பதவியும் தேவை என்றும், படிக்கும் போது அமைதியாக இருந்ததால் தான் தானும் ஒரு தாழ்த்தப்பட்ட சாதியில் இருந்து வந்தும் தன்னை முன்னர் மதிக்காத வர்கள் எல்லாம் இப்பொழுது மதிக்கின்றனர் எனவும் விளக்குகிறார். எவ்வாறாயினும் இதெல்லாம் கதாநாயகியான ஜோவிற்குத் தெரியாமல் நடப்பதைப் பார்க்க நம்ப முடியவில்லை. ஏன் பரியன் அவளுக்கு இதைப்பற்றிக் கூறவில்லை எனப் படத்தில் விளக்கினாலும் அவர் அவமதிக்கப்படு வதை விளங்காத அளவிற்கு அப்பாவித் தனமும் குடும்பச் செல்வாக்கும் ஜோவிடம் இருக்கிறது. பிரச்சினையின் தீர்வு அவளது அப்பாவும் பரியனும் அவள் இல்லாதபோது அவளைப் பற்றிப் பேசுவதால் ஏற்படுகிறது. இது உண்மையான தீர்வாக இருக்க முடியுமா எனத் தோன்றுகிறது.

கதாநாயகிக்குத் தெரியாமல் பரியனுக்கு ஏற்படும் கஷ்டங்களும் பிரச்சினைக்குத் தீர்வும் நாட்டு நடப்புத் தெரியாத அளவிற்கு அவவிற்கு செல்லம் கொடுத்து அப்பாவி யாக வளர்த்தது எல்லாம் மேற்குலகில் வளர்ந்த எமக்கு நம்பமுடியாததாக இருந்தாலும் இதுவே தமிழ் நாட்டின் சாதிக் கொடுமையின் வடிவம் எனப்படத்தில் தெளிவாகத் தெரிகிறது.

ஒரு கடினமான மிக முக்கியமான பிரச்சினையை இப்படத்தில் எளிமையாகவும் நன்றாகவும் மனதை அழுத்தும் முறையிலும் காட்டப்படுவதால் எல்லோரும் கட்டாயமாகப் பார்க்க வேண்டிய படம் இது.

**DOCTORS WANTED**

**Ajax, GTA, ON** - Full Time or Part Time Medical doctors required for Integrative turn key medical clinic with fully equipped medical office in great & High Flow Location. Multiple exam rooms, Pharmacy, lab, EMR, dictation service. New graduates welcome.

**Contact: 416-988-0945 / wynpluspharmacy@gmail.com**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நினைவில் நிற்பவை -11

# முதல் இந்தியப் பயணம்



- துரையூரான் -

இராமேஸ்வரத்தில் தங்கியிருந்தபோது அங்குள்ள பிரசித்திபெற்ற சிவன் கோவிலான இராமநாதஸ்வாமி கோவிலைச் சென்று தரிசித்தோம். இது மிகவும் உயரமான இரு கோபுரங்களையும் நீளமான சுற்றுப் பிரகாரத்தையும் கொண்ட சிற்பக்கலையின் உச்சத்தை உணர்த்தும் கட்டிட வேலைப்பாடுகளையும் கொண்ட சிறப்பு வாய்ந்த கோவிலாக இன்றும் இயங்கிக் கொண்டிருக்கிறது. இதன் கோபுரங்களைத் தலை மன்னாரிலும், நயினாதீவு நாகபூசணி அம்மன் கோவிலிலும் இருந்தும் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான சரித்திரப் பெருமைமிக்க கோவிலின் வரலாறு பற்றிப் பார்ப்போம்.

தலவரலாறு

இக்கோவில் 274 பாடல் பெற்ற ஸ்தலங்களில் ஒன்று. அப்பர், சுந்தரர், சம்பந்தர் ஆகிய மூவரும் இக்கோவில்பற்றிப் பாடல்கள் பாடியுள்ளனர். இக்கோவில், இராவணனைக் கொன்று சீதாபிராட்டியைச் சிறைமீட்டு அயோத்தி திரும்பும் வழியில் இராமேஸ்வரத்தில் சிவனை வழிபட்டு தனது தோஷம் நீங்கும் பொருட்டு சீதையால் மண்ணால் செய்யப்பட்ட சிவலிங்கத்தைப் பிரதிஷ்டை செய்து வழிபட்டார் என்றும் இராமர் கட்டளைப்படி ஹிமாலயத்திலிருந்து ஹனுமான் கொண்டுவந்த லிங்கம் தாமதமாக வந்ததால் அதை வடக்குத் திசையில் வைத்து முதலில் வழிபடும்படி பணித்தார் என்றும் இராமாயணத்தில் கூறப்பட்டுள்ளது. இது இன்றும் பின்பற்றப்படுகிறது. ஆரம்பத்தில் சிறிய கோவிலாக இருந்ததை 12ஆம் நூற்றாண்டில் பாண்டிய அரச பரம்பரையினர் விசாலமாக்கினர். பின்னர் யாழ்ப்பாண மன்னர்களாகிய ஜயவீர சிங்கை ஆரியனும் அவனுக்குப்பின் வந்த குணவீர சிங்கை ஆரியனும் இக்கோவிலைத் திருத்திப் பல வேலைப்பாடுகளைச் செய்தனர்.

பல தென்னிந்தியக் கோவில்களைப் போன்று இங்கும் நாற்றிசைகளிலும் மதில்கள் கட்டப்பட்டுள்ளன. இம்மதில் கிழக்கு மேற்காக 865அடி நீளமாகவும் வடக்குத் தெற்காக 657அடி நீளமாகவும் உள்ளது. கிழக்கிலும் மேற்கிலும் உயர்ந்த கோபுரங்கள் கட்டப்பட்டுள்ளன. வடக்கிலும், தெற்கிலும் வாசல்களுக்கு மேலும் சிறு கோபுரங்கள் உள்ளன. இக்கோவிலின் உட்புறச் சுற்றுப் பிரகாரம் 5அடி உயரமான மேடையின் மீது பல தூண்கள் வரிசையில் அமைக்கப்பட்டுள்ளன.

உலகிலேயே நீளமான பிரகாரங்கள் கொண்டுள்ள இக்கோவிலின் கிழக்கு மற்றும் மேற்கு வெளிப் பிரகாரங்களின் நீளம் தனித்தனியே 400அடி. வடக்கு மற்றும் தெற்கு வெளிப்பிரகாரங்களின் நீளம் தனித்தனியே 640அடி ஆகும். கிழக்கு தெற்கு உட்பிரகாரங்களின் நீளம் முறையே 224அடி மற்றும் வடக்குத் தெற்கு உட் பிரகாரங்களின் நீளம் முறையே 352 அடியாகும். மொத்தப் பிரகாரங்களின் நீளம் 3850 அடியாகும். இந்த மூன்றாம் பிரகாரத்தை இராமநாதபுரம் மன்னர் முத்துராமலிங்க சேதுபதி 1740-1770 இல் கட்டி முடித்தார். 1212 தூண்களுடன் கூடிய இப்பிரகாரம் 690அடி நீளமும் 435அடி அகலம் 22½அடி உயரம் கொண்டது. இக் கோயிலில் 22 தீர்த்தங்கள் உள்ளன.

15ஆம் நூற்றாண்டின் முற்பகுதியில் தற்கால இராமநாதபுரம், கமுதி, இராமேஸ்வரம் பகுதிகள் பாண்டிய இராஜ்யத்தின் கீழ் இருந்தன. கி.பி. 1520இல் விஜய நகரப் பேரரசின் ஆட்சியின் கீழ் வந்தது. மதுரை நாயக்கர்களிடமிருந்து பிரிந்த சேதுபதிகள் இராமநாதபுரத்தை ஆளத் தொடங்கினர். இவர்கள் இக்கோவிலின் மேம்பாட்டுக்குப் பெரிதும் உதவினர். முக்கியமாக முத்துக் குமாரரகுநாத சேதுபதியும், முத்து இராமலிங்க சேதுபதியும் கோவிலின் கட்டிட வடிவமைப்பை மேம்படுத்தினர். 18ஆம் நூற்றாண்டில் இப்பகுதி சந்தா சாகிப் (1740-1754), ஆற்காடு நவாப், மருதநாயகம் (1725-1764) ஆகியோரின் கட்டுப்பாட்டில் இருந்தது. கி.பி 1795இல் இது பிரித்தானிய கிழக்கிந்திய நிறுவனத்தின் நேரடிக் கட்டுப்பாட்டில் இருந்து 1947இல் இந்தியாவின் பகுதியாயிற்று (விக்கிப் பீடியா)

இரண்டு நாட்கள் இங்கு தங்கியபின் ரயில் மூலம் மதுரைக்குப் பயணமானோம். நான் ஏற்கனவே எழுதியபடி அங்கு ஹோட்டல்கள் எதுவும் இருக்கவில்லை. புகையிரத நிலையத்துக்கு அண்மையில் மங்கம்மா சத்திரம் என்ற ஒரு விடுதி இருந்தது. ஓர் அறைக்கு 1.50 ரூபாய் கொடுத்து வாடகைக்கு எடுத்துத் தங்கினோம். அப்போது உணவுச்சாலைகள் இருந்தன. ஒரு சைவச்சாப்பாடு 6 அணா, 2 இட்லியும், 1 வடையும் 3 அணா, கோப்பி, 1 அணா. எனினும் பெரும்பாலான மக்கள் வறுமையில் வாடினர். சாப்பிட்டு விட்டு இலை எறியும் தொட்டிக்கு அருகில் எஞ்சிய உணவை எடுத்து உண்பதற்குப் பலர் காத்திருந்தனர். அதற்காக அவர்களிடையே சண்டையும் ஏற்பட்டது. அவர்களுக்கு உதவி செய்யும் நோக்குடன் எனது மைத்துனர்தான் காசை சில்லறையாக மாற்றித்தரும்படி ஹோட்டல் மனேஜரைக் கேட்டபோது நீங்கள் இதை இங்கோ கொடுக்கத் தொடங்கினால் பிச்சைக்காரரைச் சமாளிக்க முடியாது. வேறு எங்காவது போய் கொடுங்கள் என்று கூறி மாற்றிக் கொடுத்தார். அப்போது இலங்கைக்காசின் பெறுமதி இந்தியக் காசை விடக் கூடுதலாக இருந்தது. எனவே நாங்கள் உதவுவதைக் கைவிட்டு விட்டு நகரைச் சுற்றிப் பார்த்தோம். கடைகளும், சிறிய தெருவோர வியாபாரங்களும் ஏராளமாக இருந்தன. பொருட்களின் விலைகள் மிகவும் மலிவாக இருந்தன. ஓர் ஓலைப் பெட்டியில் குழந்தைகள் விளையாடும் மரப் பொருட்கள் (பானை, சட்டி, அகப்பை) 6 ஆணாவுக்கு வாங்கினோம். அத்தோடு ஜமக்காளம் 2 ரூபா, படுக்கை விரிப்புகள் 1ரூபா, பட்டுச் சேலைகள், பட்டு வேட்டிகள் யாவும் நல்ல மலிவாகக் கிடைத்தன. எனவே அன்று கூடுதலாகச் சில பொருட்கள வாங்கிக் கொண்டு அறைக்குச் சென்றோம்.

அடுத்த நாள் காலை மதுரை மீனாட்சி அம்மன் கோவிலுக்குச் சென்றோம். நாம் சென்றபோது கூட்டம் அதிகம் இருக்க வில்லை. வாசலில் நின்ற ஒருவர் எங்களைக் கூட்டிக்கொண்டு போய் யாவற்றையும் விளக்கிக் கூறினார். காலைப் பூஜையையும் பார்த்து வழிபட்டு அர்ச்சனையும் செய்தோம். இது மிகவும் புராதனமான சைவக் கோவில் என்பதையும் சிற்பக் கலையிலும் கட்டிடக் கலையிலும் தமிழ் மக்கள் எவ்வாறு உன்னத நிலையில் இருந்தனர் என்பதையும் உலகுக்குப் பறைசாற்றிக் கொண்டிருக்கும் கோயில் என்பதையும் விரிவாகப் பார்ப்போம்.

தலவரலாறு

மீனாட்சி அம்மன் கோவில்பற்றிய ஆரம்ப வரலாறு சங்ககாலத்திலிருந்து தொடங்கு கிறது. திருக்குறள் அரங்கேறியது பற்றிய கதையும் இதை நிச்சயப்படுத்துவதாக உளது. எனினும் 6 ஆம் நூற்றாண்டில் தோன்றிய நூல்களிலும் பாடல்களிலும் இது பெரும்பாலும் பேசப்படுகிறது. தற்போதை கோயிலின் வடிவமைப்பு 14ஆம் நூற்றாண் டில் மீள அமைக்கப்பட்டது எனவும் 17ஆம் நூற்றாண்டில் திருமலை நாயக்க மன்னால் புனருத்தாரணம் செய்யப்பட்டு விசாலமாக்கப் பட்டது எனவும் அறியப்படுகிறது. 14 ஆம் நூற்றாண்டில் மாலிக்கபூர் என்ற முஸ்லீம் தளபதி தனது படையுடன் வந்து இக் கோவிலைக் கொள்ளை அடித்து இடித்து நாமாக்கினான். இவ்வாறு தென்னிந்தியாவில் இருந்த பல கோவில் கோவில்கள் இடிக்கப் பட்டன. விஜயநகர சாம்ராஜ்ய மன்னர்கள் தற்காலக் கோயிலை மீளக் கட்டித் திறந்து வைத்தனர். 16ஆம் நூற்றாண்டில் விஸ்வ நாத நாயக்கரும் அவருக்குப் பின் வந்த அரசர்களும் கோவிலைத் திருத்தி மதில்கள் கட்டிப் பாதுகாப்பை ஏற்படுத்தினர். இவ்வாறு திருத்தி அமைக்கப்பட்ட கோவில் 14 கோபுரங்களைக் கொண்டுள்ளன. இவை ஒவ்வொன்றும் 45 - 55 மீற்றர் உயரத்தைக் கொண்டுள்ளன. தெற்குக் கோபுரம் மட்டும் 52மீற்றர் (170அடி) உயரத்தைக் கொண்டுள் ளது. இக்கோயிலில் பல மண்டபங்கள் உள்ளன. அவை ஆயிரங்கால் மண்டபம், கிளிக்கூண்டு மண்டபம், கொலுமண்டபம், புது மண்டபம். இங்கு மூலஸ்தானத்திலுள்ள மீனாட்சி அம்மனுக்கும் வடதிசையிலுள்ள சுந்தரேஸ்வரம் பெருமானுக்கும் மேலுள்ள விமானங்கள் பொன்னால் செய்யப்பட்ட தகடுகளால் வேயப்பட்டுள்ளன.

இவை மிகவும் பாதுகாப்பாகச் சுவர்களால் சூழப்பட்டுள்ளன. உள்வீதியில் ஒரு குறிக்கப்பட்ட இடத்திலிருந்து பார்த்தால் மட்டுமே எமக்குத் தெரியும்.

இக்கோவில் பார்வதிக்கும் சிவனுக்கும் பிரத்தியேகமாகக் கட்டப்பட்டிருப்பினும் விஷ்ணுவுக்குப் பல கற்சிலைகள் அமைத்திருப்பதுடன் விசேட விழாக்களும் மேற்கொள்ளப்படுகின்றன. மீனாட்சி விஷ்ணுவின் சகோதரியாகக் கருதப்படுவதால் இவ்வாறு செய்யப்படுகிறது. இதைத்

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)

ALL LINK
TRAVEL & TOURS INC.



வேறு எந்த விமான பிரயாணச் சீட்டு முகவர்களிடமும் கிடைக்காத மிகவும் குறைந்த கட்டணம்!

Cheapest air fares:
- Colombo $ 1100
- Chennai $ 1060
- Bangalore $ 1040
- Paris $ 490
- London $ 520
- Germany $ 690
- Zurich $ 520

All-inclusive packages:
- Cuba $ 569
- Mexico $ 699
- Dominican& Republic $ 899

Contact: SUTHA
OFFICE-416 293 8700 CELL- 416 312 2995
ALL LINK TRAVEL & TOURS Inc. SCARBOROUGH. AJAX. BRAMPTON. MISSISSAUGA.



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




- வங்கிக்கடனில் 25% மட்டும் செலுத்தி உங்கள் கடன் சுமையிலிருந்து விடுபடல்!
- COLLECTION AGENCY களின் தொலைபேசித் தொல்லைகளையும் சட்ட நடவடிக்கைகளையும் உடனடியாக நிறுத்தல்!
- சம்பளப்பணத்தை பறிமுதல் செய்வதை தவிர்த்தல்!
- உங்கள் RRSP, RESP மற்றும் வீடு வாகனங்களை பாதுகாத்தல் !
- சிறிய மாதாந்த கட்டுப்பணத்தின் மூலம் BANKRUPTCY செல்வதை தடுத்தல்!



**கடன் சுமையிலிருந்து உடனடியாக மீளுங்கள்..!**

**Suren Sornalingam**
*Certified Credit Counsellor*

**இலவச ஆலோசனைகள்**

**CALL : 647-274-2832**

55 TOWN CENTRE COURT SUITE 700 - SCARBOROUGH, ONTARIO
INFO@CREDITRECOVERYCANADA.COM - WWW.CREDITRECOVERYCANADA.COM




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## நீண்டநாள் வாழ நினைத்ததை அடைய நோய் தடுக்கும் வழிமுறைகள்

# உயிர்காற்று




நாம் விடுகிற மூச்சு பற்றி நீங்கள் எப்போதாவது எண்ணியது உண்டா? நம்முடைய இயக்கங்களிலேயே அதுதான் முக்கிய இயக்கம் என்பதை அறிவீர்களா? தேக ரீதியாகவும், மனோ ரீதியாகவும் நமக்கு ஏற்படும் தொந்தரவுகளில் பெரும்பான்மை முறையற்ற சுவாசத்தின் விளைவுகள் என்பது தெரியுமா?

உயிரும், மூச்சும் ஒன்றே, மூச்சுள்ள வரை உயிர் உண்டு. மூச்சில்லை என்றால் மரணம். முதல் மூச்சில் தொடங்கும் வாழ்க்கை கடைசி மூச்சில் முடிகிறது. தூங்கும்போதும் விழித்திருக்கும்போதும் தொடரும் மூச்சு தண்ணீர் இல்லாமல் சிலநாள் இருக்கலாம். ஆனால் காற்று இல்லாமல் ஒரு சில நிமிடம் கூட தாக்குப்பிடிக்க முடியாது.

இரத்தம் நம்முடைய உயிர் அணுக்களுக்கும், திசுக்களுக்கும், நரம்புகளுக்கும், சுரப்பிகளுக்கும், உறுப்புகளுக்கும் உணவுச் சத்தை வழங்குகிறது. அந்த இரத்தமோ காற்றை உணவாய் கொள்கிறது.

நமக்கு கிடைக்கும் பிராண வாயு சப்ளையை பொறுத்தே நம்முடைய ஜீரணத்தில் இருந்து சிந்திப்பு வரை ஒன்று செம்மைப்படுகிறது அல்லது சீர்குலைகிறது. எனினும் நாம் சுவாசிப்பு பற்றி அத்தனை அக்கறை கொள்வது இல்லை. காலையில் ஒரு சில முறையேனும் ஆழ்ந்து சுவாசிக்கிறவர்கள் எத்தனைபேர்? இது காலை உணவினை விட முக்கியம்.

நாம் உண்கிற உணவின் மூலக்கூறுகளை சத்துப் பொருட்களாக மாற்றப் பிராணவாயு இல்லாவிட்டால் எப்படி? சுவாசிப்பதற்கு சுத்தமான காற்று இல்லாவிட்டாலும், மேலாக மூச்சு விட்டுக்கொண்டு இருந்தாலும் வயது வராத சிறுவர்கள் பாதிக்கப்படுகின்றனர். குழந்தையினுடைய மூளைக்குப் போதுமான உணவு கிட்டவில்லை என்றால் அது எப்படித் தெளிவாக சிந்திக்க முடியும்?

ஆழ்ந்து சுவாசிப்பதற்கும் மேலெழுந்தவாரியாக மூச்சு விடுவதற்கும் வித்தியாசம் உண்டு. உரக்கக் கத்துவதற்கும், பலவீனமாய் கீச்சிடுவதற்கும் உள்ள வேறுபாடுதான் அது.

உடம்பில் ஏற்படும் பல கோளாறுகளுக்கும் நாம் மேலோட்டமாக மூச்சு விடுவதும் ஒரு காரணம். தினமும் குறைந்தது 60 முறையாவது ஆழ்ந்து சுவாசிப்பது ஆரோக்கியத்துக்கு அவசியம் என்கின்றனர். மேலோட்டமாகச் சுவாசிப்பவருக்கு ஜலதோஷம் பிடிக்கும், பார்வைத் திறன் குன்றும், ஞாபக சக்தி பலவீனப்படும், முதுகு வளைந்துவிடும், மார்ப்பு குறுகிவிடவும் வாய்ப்பிருக்கிறது.

மூளை ஒழுங்காக இயங்க வேண்டுமென்றால் உடம்பின் மற்றப் பகுதிகளை விட மூளைக்குப் பிராணவாயு மூன்று மடங்கு தேவை. அந்த அளவு கிடைக்காத பட்சத்தில் அது உடம்பிற்குப் போவதில் இருந்து தன் தேவையை நிறைவேற்றிக் கொண்டு விடுகிறது.



நம்முடைய உறுப்புகளுக்கு உணவளிப்பதோடு அவற்றை சுத்தமாக வைத்துக் கொள்ளும் பணியையும் பிராண வாயு ஏற்றிருக்கிறது. வீடு காற்றோட்டமும் வெளிச்சமும் இருந்தால்தான் வாழ்வதற்கு உகந்ததாக இருக்கும். உடம்பும் அப்படித்தான். உடம்பை வாழ்வதற்குத் தகுதிப்படுத்துவது பிராண வாயு. சுவாசம் முறையாக அமையாவிட்டால் ஏற்படக் கூடிய விளைவுகளை இன்னமும் சொல்ல வேண்டுமா என்ன?

அதென்ன முறையான சுவாம்?

முழுமையாக சுவாசிப்பது மற்ற சுவாசிப்புகளில் இருந்து சற்றே வேறுபட்டது. சுவாசப்பைகளை முழுமையாக நிரப்புகிறதும் முழுமையான அளவு வெறுமை செய்கிற திறனும் இதற்கு உண்டு. நாடித் துடிப்புக்கேற்ப சீராக மூச்சு விடுவது. ஒவ்வொரு யோகா நிலையிலும் இது முக்கியமாகக் கருதப்படுகிறது. சுவாசப் பயிற்சியை சிலர் தனியாகவும் செய்கின்றனர். எளிமையான முறையில் ஆழ்ந்து சுவாசித்தால் ஆரோக்கியம். கொஞ்சம் கடினமான முறை பிராணாயாமம். இது மனதுக்குள் மறைந்து கிடக்கும் சக்திளை தூண்டி விடும்.

ஆழ்ந்து சுவாசிப்பதுதான் யோகாவில் முதல் பாடம். அது உடம்புக்கு சக்தியை அளிக்கிறது. நோய் எதிர்ப்பு சக்தியை வளர்க்கிறது. உணர்வுகளை

(தொடர்ச்சி 34ஆம் பக்கம்...)






Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org










Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# TOWNHOMES at Stayner

## ( Collingwood / Wasagabeach / Blue Mountain )




**Stayner West is a new townhouse development by Aspen Ridge Homes**

**Price from $358,990.**

**Total 64 units. Sizes range from 1249 to 1569 square feet.**

**New and Experienced Sales reps/Brokers are welcome to join our successful team.**

**Free Real Estate classes start every week.**

- Office open 7 days
- 9:00 am - 9:00 pm
- Over 5,000 Sqft. office
- Conveniently Located in GTA Square Mall

"கனவு உங்களுடையது பொறுப்பு எங்களுடையது"

**For More info. Call 416.321.6969**

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife / GTA Realty Inc.** *Brokerage

5215 Finch Ave. E., #203, Toronto ON. M1S 0C2

*Independently Owned & Operated



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# IDEAL
HEATING & COOLING
SOLUTIONS INC.

96% HI EFFICIENCY FURNACE,
HIGH-EFFICIENCY CENTRAL AIR CONDITIONERS
WATER HEATERS /TANKLESS WATER HEATERS.
INSTALLED WITH 10 YEARS WARRANTY ON PARTS
1 YEAR WARRANTY ON LABOUR



## WITH REASONABLE PRICE!



LIFETIME WARRANTY ON HEAT EXCHANGER

**Enbridge incentive $1300.00**
With audit free of $678.00
For qualified houses & existing Furnaces

10 YEARS WARRANTY ON PARTS
1 YEAR WARRANTY ON LABOUR

FOR ALL KIND OF GAS LINES, HUMIDIFIER
AND THERMOSTAT INSTALLATION SERVICES

WE DEAL IN FOLLOWING BRANDS:

American Standard
Goodman
DIRECT AIR
ARMSTRONG AIR
YORK
KeepRite

CONTACT: KAMAL
647-920-4931
idealhcsolutions@gmail.com
56 Donwood Court, Brampton ON, L6P 1T7




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தாய்நாடும் தாய்மொழியும்



விதுசிகா அருள்தாசன்
அகவை -13

இலங்கைத்தீவிலுள்ள யாழ்ப்பாணத்தில் பிறந்து வளர்ந்தார் ஞானவி. அவரது பெற்றோர் தமது மகளை வெளிநாட்டிற்கு அனுப்பி படிப்பிக்க விரும்பினர். அதற்காக அவளை ஆரம்பப் பள்ளியிலிருந்தே ஆங்கில மொழிப் பாடசாலையில் சேர்த்துப் படிப்பித்து வந்தனர். ஞானவி ஆங்கில மொழியில் படித்தாலும் தாய் மொழி தமிழையும் கற்று திறைமைசாலியாக விளங்கினார்.

16 வயதில் பெற்றோர் விரும்பியபடி ஞானவிக்கு வெளிநாட்டில் படிக்கும் வாய்ப்பு கிடைத்து. வெளிநாடு செல்லும் அனுமதி கிடைத்ததும் ஞானவியும் அவரது தாயாருடன் கனடாவுக்கு வந்தார். கனடா வந்து உயர்நிலைப்பள்ளியில் சேர்ந்து தனது படிப்பை தொடர்ந்தார்.

தாய் மொழியாம் தமிழையும் தமது கலாச்சாரத்தையும் பின்பற்றி வளர்ந்த ஞானவி கனடாவிலும் அதையே பின்பற்றி வந்தார். ஆனால் அவருடன் கூடப்படிப் பவர்கள் அவரை கனடா கலாச்சாரத்தை பின்பற்றுமாறு கூறிப் புறக்கணித்து வந்தனர். அதனால் மனமுடைந்த ஞானவி தன்னை கொஞ்சம் கொஞ்சமாக மாற்றத் தொடங்கினார். தாயின் சொல்லை மதிப்பதில்லை. பள்ளிக்குப் போவதையும் குறைத்து, தமிழ் பேசுவதையும் குறைத்தாள். தமிழ் பேசுவதை அவமானமாக நினைத்தாள்.

தாயார் தனது மகளின் மாற்றத்தைக் கண்டு மனமுடைந்தார். தனது மகளின் மனதில் மாற்றத்தை உருவாக்க எண்ணினார். நான்கு வருடங்களுக்குப்பின் விடுமுறையில் மகளையும் கூட்டிக்கொண்டு இலங்கை சென்றார். அங்கு பசிக்கு சாப்பாடு கிடைக்காது கஸ்ரப்படும் பிள்ளை-களையும், படிக்க வழியின்றி கஸ்ரப்படும் பிள்ளைகளையும் காட்டினார். அங்கு கஸ்ரப்படும் பிள்ளைகளை பார்த்த ஞானவிக்கு மனதில் இனம்புரியாத வேதனை. தான் வெளிநாடு சென்று படிக்கும் அளவுக்கு தனக்கு வாய்ப்புக் கொடுத்த ஆண்டவனை நினைத்தாள், மனதால் நன்றி தெரிவித்தாள்.

ஒரு சமயம் இவரது நூலான 'இது இராஜபாட்டையல்ல' பாகம் -2 நூல் வெளியீட்டின்போது இன்னொரு சிறந்த மனிதரான 'தமிழருவி' மணியன் பேசும்போது "...... சுற்றி எரிகின்ற தீச்சுவாலைக்கு நடுவே எரியாத கற்பூரமாக வாழ்பவர் நமது மதிப்பிற்குரிய சிவகுமார் அவர்கள்.." என்று சிவகுமாரின் ஒழுக்கமான வாழ்க்கைக்கு நற்சான்றிதழ் வழங்கியது இப்போதும் என் காதில் ஒலிக்கிறது. வாய்ப்புக்களைத் தேடிப்போகாமலும் நாடி வந்த மலர்களுக்கு நற்புத்தி வழங்கி சமாதானப்படுத்தி அனுப்பியும் வைத்த ஏகபத்தினி விரதன்.

இவரது நடிப்பைவிட எனக்கு இவரது எழுத்துப் பிடிக்கும், எழுத்தைவிட இவரது பேச்சுப் பிடிக்கும், பேச்சைவிட இவரது அபார ஞாபகசக்தி மிகவும் பிடிக்கும். வேடிக்கையான சம்பவம் ஒன்றை நினைவுபடுத்தலாம். ஒருமுறை நடிகர் திலகம் அவர்களது பிறந்தநாளின்போது அவரை வாழ்த்த 'அன்னை இல்லம்' சென்றிருந்தார்.

மாலை மரியாதை செய்தபின்பு பேசிக்கொண்டிருக்கும் போது சிவாஜி நடித்த படத்தில் இடம் பெற்ற காட்சியொன்றில் நடிகர்திலகம் ஆக்ரோஷமாகப் பேசிய சில வசனங்களைப் பேசிக்காட்டினார். சிவாஜிக்கு நினைவில்லை. மறந்து போச்சு.

"இது எவன் பேசியது"

"உங்களிடமிருந்து கொப்பியடித்ததுதான். படம் - வணங்கா முடி. வசனம் ஏ.கே. வேலன். உங்களில் யாருக்காவது மறக்கத் தெரியாத மனசில் புதைந்திருக்கிறதா...? காட்சி இதுதான். மன்னன் மகளைக்

(தொடர்ச்சி 37ஆம் பக்கம்...)

---



Math tutorial 382

Answers to tutorial 381

1) Let $x_1, x_2$ be the roots of $x^2+7x+3=0$, $x_1+x_2=-7/3$ and $x_1x_2=1$, the roots of the req. equation are $3x_1$ and $3x_2$. For the new equation the sum of the roots is $3x_1+3x_2=3(x_1+x_2)=3(-7/3)=-7$
Product of new equ. Is $(3x_1)(3x_2)=9(1)=9$
Therefore the equation is $x^2+7x+9=0$-1/2 .2x

2) $\sqrt{x}+\sqrt{y}=1$, therefore sinceP(a,b)is on the curve $a\geq 0, b\geq 0$
$\sqrt{y}=1-\sqrt{x}$, $y=1-2\sqrt{x}+x$
$\frac{dy}{dx}=-1/2.2x^{-1/2}+1$,.At x=a the slope is $-1/\sqrt{a}+1=-(1+\sqrt{a})/\sqrt{a}$, but $\sqrt{a}+\sqrt{b}=1$, therefore $-\sqrt{b}=\sqrt{a}-1$, therefore the slope is $-\sqrt{b}/\sqrt{a}=-\sqrt{b}/\sqrt{a}$

3) $s(t)=6t^2+2t$, $v(t)=12t+a(t)=12$
(a) v(8) =96+ =98m/s , its acceleration is constant ,hence = 12 $m/s^2$

4) A 10n force acts in the direction of a vector (1 ,1 ) A unit vector along $\bar{F}$ IS $(\frac{1}{\sqrt{2}}, 1/\sqrt{2})$ therefore $\bar{F}=10(1/\sqrt{2}, 1/\sqrt{2})=(5\sqrt{2}, 5\sqrt{2})$ the displacement vector is $\bar{d}=\overline{PQ}=(7,5)$, W=F.d $=35\sqrt{2}+25\sqrt{2}=60\sqrt{2}N$

Tutorial383

Questions

1) If x and y are natoiral numbers and $y\leq x$ then whole numbers q and r must exist such that x =yq +r
(a) What is the value of r if y is a factor of x?
(b) If y is not a factor of x, what are the possible values of r if y=5,y=7 ,or y=n?

2) Factorise (a) $x^4+5x^2+9$
(b) $4x^4+8x^2+9$

3) An athletic equipment supplier experiences weekly costs of $C(x)=1/3x^3+40x+700$ in producing x base balls gloves per week
(a) Find the maginal cost

By Mr S.F.Xavier(Teacher)6473409490



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# நமது தாய்மொழி தமிழ்

- த.சிவபாலு எம்.ஏ -

மொழி என்பது மனித தொடர்புச் சாதன-மாகும். தமது தேவைகளைப் பிறருக்கு எடுத்துக் கூறுவதற்கும், தமது உணர்வு களை வெளிக்காட்டவும் ஏனையவர்களுடன் பரிமாறிக் கொள்ளவும் மொழி இன்றியமை யாத கருவியாகும். மனிதனின் சிந்தனை வளர்ச்சிக்கும் முன்னேற்றத்திற்கும் தாய் மொழி முக்கியமானதாகும். ஓர் இனத்தின் பண்பாட்டுக் கருவூலங்களில் மொழி சிறப்பிடம் பெறுகின்றது. மனித இனத்தை நாம் மொழியின் அடிப்படையில் பாகுபடுத்துகின்றோம்.

ஒவ்வொரு இனத்திற்கும் அவர்களது மொழியே தாய் மொழியாகும். தாய் மொழி என்பது ஒரு குழந்தை தனது தாயின் கருவில் இருக்கும் காலத்திலிருந்து கேட்டு, வீட்டில் பேசி வரும் மொழி என வரையறை செய்யப்படுகின்றது. எனினும் தாய்மொழி, முதல் மொழி, நாட்டு மொழி என மொழி யினைப் பலவாறாக வரையறை செய்யப்படு வதினால் மொழி என்பதற்குச் சரியான வரைவிலக்கணத்தைத் தர முடியாதுள்ளது. ஒரு குழந்தையின் தாய் ஒரு மொழியைத் தனது தாய்மொழியாகக் கொண்டிருக்க தந்தை இன்னொரு மொழி பேசுபவராக இருந்தால் அந்த அந்தப் பிள்ளையின் தாய்மொழி எது எனத் தீர்மானிப்பது சில வேளை சிக்கலானதாக அமையும். வீட்டில் பேசப்படும் மொழி பிள்ளையால் பேசப்படுமானால் அதனை அப்பிள்ளையின் தாய்மொழி எனக் குறிப்பிடலாம். பிள்ளை பாடசாலை சென்று கற்கத் தொடங்கியதும் அந்தப்பிள்ளை கற்கும் மொழி கல்வி மொழியாக அமையும். ஆனால் அந்தப் பிள்ளை அதிக நேரம் எந்த மொழியைப் பேசுகின்றதோ அந்த மொழி அந்தப் பிள்ளையின் முதன் மொழியாகக் கொள்ளப்படுகின்றது. உலக நாடுகளில் பல நாட்டினரும் குடியேறி வாழத் தலைப்படுதல் தாய்மொழி, கல்வி மொழி, முதல் மொழி என்னும் பாகுபாட்டை ஏற்படுத்துகின்றது. குடியேற்ற நாடுகளில் பிள்ளைகள் தங்கள் தாய்மொழியாக அவர்களது குடும்பத்தினர் அல்லது சமூகத்தினர் பேசும் மொழியைப் பேசிவரும் அதேவேளை கல்வி மொழியாக ஆட்சி மொழியைக் கொள்ளும் நிலைமை இருந்து வந்ததன் காரணமாக அது போதனை மொழி அல்லது கல்வி மொழி எனக் கொள்ளப்பட்டது. இந்த நிலைமை இன்றும் நிலவிவருவதனைக் காணலாம்.

நாம் தமிழர், எமது தாய்மொழி தமிழ். நாம் பரம்பரை பரம்பரையாகப் பேசிவந்த மொழி தமிழே. எனவே எமது தாய்மொழிபற்றி அறிந்துகொள்வது அவசியம்.

"தமிழ் மொழி தொன்மையும் பெருமையும் வாய்ந்தது. தமிழ் மொழி பத்தாயிரம் ஆண்டுகளுக்கு முன்பே தோன்றியுள்ளது" என்பது ஆய்வாளர்களின் கூற்று. தமிழ் மொழி வளமான இலக்கண, இலக்கியங் களைக் கொண்டது. சொல் வளம் மிக்கது. இயற்றமிழ், இசைத்தமிழ், நாடகத் தமிழ் என்னும் பிரிவுகளை உடையதால் முத்தமிழ் எனவும் பெயர் பெறுகின்றது.

தமிழ் இலக்கியங்களில் மிகப் பழமைவாய்ந்தவை சங்க இலக்கியங்கள். அவற்றுள் ஒருசிலவே இன்று கிடைக்கின்றன. தமிழ் இலக்கியங்கள் விழுமியங்கள் நிறைந்த அக்காலப் பண்பாட்டைப் படம்பிடித்துக் காட்டுவனவாக உள்ளன. இலக்கியம் என்பது காலத்தின்




கண்ணாடி என்பர். சூழ்நிலைக்கேற்ப இலக்கியங்கள் மலர்ந்தன. சிலப்பதிகாரம், சீவகசிந்தாமணி, மணிமேகலை, வளை யாபதி, குண்டலகேசி ஆகிய ஐம்பெரும் காப்பியங்களையும், எட்டுத்தொகை, பத்துப் பாட்டு, கலிங்கத்துப்பரணி, அகநானூறு, புறநானூறு போன்றன பழந்தமிழ் இலக்கி யங்களையும் கொண்டது தமிழ் மொழி.

இலங்கை, இந்தியா, மலேசியா, சிங்கப்பூர், மொரீசியஸ், கனடா, ஜேர்மெனி, தென் ஆபிரிக்கா, இங்கிலாந்து, பிரான்ஸ், நெதர்லாந்து போன்ற நாடுகளில் இன்று தமிழர் வாழ்கின்றனர். அவர்கள் தமிழ் மொழியைப் பேசிவருகின்றனர். தமிழ் மொழியின் பேச்சு வழக்கு இடத்துக்கிடம் நாட்டுக்கு நாடு வித்தியாசமானதாகக் காணப்படுகின்றது. இலங்கையிலேயே மட்டக்களப்பு, மலையகம், யாழ்ப்பாணம், நீர்கொழும்பு ஆகிய இடங்களில் பேசப்படும் பேச்சுத் தமிழில் வேறுபாடு நிலவுகின்றது. இலங்கைத் தமிழர் பேசும் தமிழ் நடைக்கும் இந்தியத் தமிழர் பேசும் தமிழுக்கும் வேறுபாடு உண்டு.

இந்தியாவின் தென்மண்டலத்தில் சங்க காலத்தில் தமிழ் வியாபித்திருந்தது என்பதற்கு வரலாற்றுச் சான்றுகள் உள. எனினும் அது இன்று (கேரளத்தமிழ்) மலையாளம், கன்னடம், தெலுங்கு, கொங்குணி போன்ற மொழிகளாக மாறி யுள்ளன. மக்களின் குடியேற்றம், குடிவரவு என்பன மொழி மாற்றத்திற்குக் காரணங்களாகின்றன.

"யாமறிந்த மொழிகளிலே தமிழ் மொழி-போல் இனிதாவதெங்கும் காணோம்" என்பது பல்மொழிப் பாண்டித்தியம் பெற்ற மகாகவி பாரதியாரின் கூற்று. தமிழ் மிக இனிமையான மொழி என்பது அதனைக் கற்றுச் சுவைகண்டால் தெரியும்.

தமிழுக்கு அமுதென்று பேர் -அந்தத்
தமிழ் இன்பத் தமிழ்எங்கள் உயிருக்கு நேர்
தமிழுக்கு நிலவென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் சமூகத்தின் விளைவுக்கு நீர்
தமிழுக்கு மணமென்று பேர்! - இன்பத்
தமிழ் எங்கள் வாழ்வுக்கு நிருமித்த ஊர்!
தமிழுக்கு மதுவென்று பேர் - இன்பத்
தமிழ் எங்கள் உரிமைச்செம் பயிருக்கு வேர்!


என்று தமிழின் இனிமை பற்றிப் பாடியுள்ளார் பாரதிதாசன். தமிழ் எமது தாய்மொழி என்பதனை உணர்ந்து நாம் அதனை இளஞ்சந்ததியினருக்குக் கடத்துதல் வேண்டும்.







## உலகத் தாய்மொழி தமிழ்



உயிராய் மெய்யாய் உயிர் மெய்யாய் உருவாகி
ஆயிரம் ஆயிரம் சோதனைகள்வென்று உலகில்
சங்கம் கண்டு, மூவேந்தர் காலத்தில்
ஆட்சி செய்த மூத்தமொழி தமிழே

இலக்கண இலக்கியம், இடை, நடை, எதுகை, மோனை
வல்லினம், மெல்லினம், முன்னிலை, படர்க்கை என
எந்த மொழிச் சொற்களிலும் இல்லாத சிறப்பு
தாய்மொழி தமிழில் உண்டென்பதறிவோம்

தாய்வழி வந்து சேய் வாய் மொழிவந்து வளரும் எங்கள்
தாய் மொழி தமிழை, தாயினும் மேலாய் நாம்
காத்திடவேண்டும், குடும்பமொழியாய் கொண்ட
தமிழை புலம்பெயர்ந் நாட்டிலும் பேச வேண்டும்.

பிறக்கும் பிள்ளைகளுக்கும் பாலுடன் தமிழை ஊட்டி
வீட்டில் பிள்ளைகளுடன் தமிழை நாம் பேச வேண்டும்
ஏட்டிலும் பிள்ளைகள் தமிழைப் பயின்றிட
நாம் ஊக்கம் கொடுக்க வேண்டும்

ஔவை தந்த ஆத்திசூடி கொன்றைவேந்தன் நன்னெறிகளையும்
வள்ளுவர் தந்த வான்புகழ் திருக்குறளையும்
இளம் சந்ததியினர் பயில ஊக்கம் கொடுக்க வேண்டும்
வற்றாத நதிபோல் பாய்ந்திட வைக்க வேண்டும்

செம்மொழி என்று இன்று எம்மொழி பேசப்படும்மொழி
சென்ற இடமெல்லாம் பேசப்பட வேண்டும்
எழுத்தாளர்கள் தமிழை ஏடுகளில் எழுதி
ஏற்றம் பெறச் செய்ய வேண்டும்.



கவிநாதம் பரந்தாமன்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# எம்மை நாம் பாதுகாப்பது எப்படி?'நோயற்ற வாழ்வே குறைவற்ற செல்வம்'

## மூலிகை உணவு மருத்துவம்



வைத்திய கலாநிதி
கே.ரீ. கோபால்
647-456-9796

கடுகு - சிறிதானாலும் காரம் பெரிது. தாவரவியல் பெயர் Brassica nigra. குடும்பம் Brassicaceae ஆகும். மருந்து சரக்குகளில், மற்றும் உணவுப் பாவனைச்சரக்குகளிலும் மிக சிறிய பொருளாகும். ஆனால் காரம் கூடியது, மிக முக்கியமானது. எவ்வளவு



சிறந்த முறையில் சமைத்தாலும் கறி, குழம்பு முதலியவற்றுக்கு கடுகு தாளிதம் செய்து போட்டால்தான் சுவை மிகுந்திருக்கும். ஆயினும் உணவுக்குச் சுவையூட்டும் நோக்கத்துக்காக மட்டும் கடுகு தாளிதம் செய்யப்படுவதில்லை. கடுகை எண்ணெயில் தாளித்து அந்த எண்ணெயை கறிகுளம்பு என்பவற்றுக்கு இடப்படுவதால், அவை நீண்டநேரம் கெட்டுப்போகாமல் பாதுகாக்கப்படுகின்றன. (preservation) கடுகு பசியை தூண்டி, சீரணத்தை ஏற்படுத்துவதுடன் வயிற்றுப் பெருமல், குடல் இரைச்சல் என்பவற்றை நீங்கும் இயல்புடையது. வெப்பத்தை கொடுக்கும் தன்மை உண்டு. எனவே இதன் பயன் பெரிதாகும்.

வெந்தயம் - தாவரவியல் பெயர் Trigonella foenum. குடும்பம் Papilionaceae ஆகும். இதனை 'உழுவர்' என்றும் அழைப்பர். உடலுக்கு குளிர்ச்சியை உண்டாக்கும். அசீரணம், வயிற்று வலியால் தவிப்பவர்கள் சிறிதளவு வெந்தயத்தை எடுத்து வாயில் இட்டு மென்று



தின்றால் குணம் கிடைக்கும். இரப்பை, குடல் புண்ணால் வருந்து பவர்களும், வயிற்று எரிவுள்ளவர்களும் ஒரு சிறங்கை வெந்தயத்தை இரவில் தண்ணீரில் ஊற வைத்து காலையில் அந்த நீரைப் பருகி வெந்தயத்தை உட்செலுத் தினால் நற்பயன் உண்டு. இரத்தத்தில் உள்ள குளுக்கோசின் அளவையும் கட்டுப்படுத்துவதில் முதன்மை பெறுகின்றது. நீரழிவு ரோகிகளுக்கும் இது உகந்தவையாகும். வெந்தயரசம், வெந்தயக் குழம்பு, உழுவாகஞ்சி, வெந்தயத் தோசை என்பவற்றை பாவிப்பது உத்தமமாகும். வெந்தயம் தாதுவிருத்தியை கட்டுப்படுத்தும் தன்மை ஓரளவு இருப்பதினால் இல்லற வாழ்வில் ஈடுபட்டு குழந்தைப் பேற்றை விரும்புவோர் வெந்தயத்தை குறைவாகப் பாவிப்பது நன்று.

பெருங்காயம் - தாவரவியல் பெயர் 'Ferula asafoetida' குடும்பப்பெயர் 'Apiaceae' ஆகும். இது ஒரு பிசின் ரெசினாகும் (Gum resin). இதில் கந்தகச்சத்து அதிகம் உள்ளதால் சிறப்பியலான மணத்தைக் கொண்டுள்ளது. வாயு குன்மம், பெருவாயுத்திரட்சி நீங்கும் இயல்புடையது. உணவு சீரணமாகுதற்கு, வயிற்றின் வாய்வுத் தொல்லையை நீக்குவதற்கும், குடல்புண் மாற்றுவ



தற்கும் பெருகாயத்திற்கு செயல்திறன் உண்டு. குழந்தையைப் பெற்றெடுத்த மாதரின் உணவில் சிறிதளவு பெருங்காயம் சேர்த்து வந்தால் பிரசவத்தினால் இழந்த சக்தியை மீளப்பெற்று உடல் நலம் தேறும். இதையே கூறுவர் 'பெருங்காயம் தின்று பெண்ணானாள் அப்பாத்தை' என்பர். இது ஒரு மருத்துவ பழமொழியாகும்.

உள்ளிப்பூடு - தாவரப் பெயர் Allium sativum. குடும்பம் Alliaceae ஆகும். இதனை உள்ளுப்பூடு, வெள்ளை வெங்காயம், வெள்ளைப்பூண்டு, பூடு, வெள்ளுள்ளி என்றெல்லாம் அழைப்பதுண்டு. வெங்காயத்திற்கு அடுத்தபடி உணவில் விரும்பி சேர்க்கப்படும் துணைப் பொருட்களில் இது குறிப்பிடத்தக்கது. உள்ளியில் கந்தகச்சத்து இருப்பதினால் ஒருவித மணத்தைக் கொண்டுள்ளது. வாயு, வயிற்றுப் பொருமல் என்பவற்றை அகற்றும் தன்மை உடையது. பூப்பெதிய காலத்தில் இருந்து பெண்களின் உணவில் உள்ளி முக்கிய இடத்தைப் பெறுகிறது. பிள்ளையை பிரசவித்த மாதர் உள்ளியை தமது உள்ளியைத் தமது உணவில் தினமும் சேர்த்துக் கொள்வதின் மூலம் தாய்ப்பால் அதிகம் சுரக்க வழியேற்படும். 'ஏந்திழை க்கிருள்ளி யேற்ற முலைப்பாலே' என பழமொழி எடுத்துக்காட்டுகின்றது. அதாவது உள்ளியை தோல் நீக்கி வறுத்து எடுத்து பனங் கட்டியுடன் சேர்த்து உண்டுவந்தால் தாய்ப்பால் அதிகம் சுரக்கும். தாய்ப்பால் ஊட்டும் குழந்தைகளின் பசி விரைவில்



படியும்.

உள்ளியில் Allicin என்னும் இரசாயனப் பொருள் இருப்பதினால் இரத்த அழுத்தத்தைக் குறைக்க உதவுகின்றது. எனவே இரத்தக்கொதிப்பு என்னும் அதிகரித்த அழுத்த நோய் உள்ளவர்கள் பச்சையான 2, 3 உள்ளியைச்சாப்பிட்டு வந்தால் அதிக நன்மையைப் பெறுவர். இது இரத்தத்தில் உள்ள பிரதான கொலஸ் ரோல் அளவை அதிகரிக்காமல் கட்டுப்படு த்துகின்றது என்பதை ஞாபகப்படுத்துகிறேன்.

மேலும் இதில் கூறப்பட்டுள்ள மூலிகை வர்கங்களை பார்வையிட்டு தங்களுக்க உகந்துள்ளவற்றைப் பாவித்துக் கொள்ளுங்கள். நற்பயன் பெறுவீர்கள்.

## மறக்கத்...

35ஆம் பக்கத்தொடர்ச்சி

(சாவித்திரி) காதலித்தது தண்டனைக்குரிய குற்றமென்று சிவாஜியை நாடு கடத்த உத்தரவு வழங்கப்படுகிறது. கொதித்தெழுகிறார் சிவாஜி. நான் பிறந்த மண்ணை விட்டு வெளியேற வேண்டுமா.... "பொங்கிவரும் காவேரி. புனல் ஊறிவரும் வைகை



நதி...." என்று ஆரம்பிக்கும் வசனங்களை பிரபல வசனகர்த்தா ஏ.கே.வேலன் சிவாஜிக்கு ஏற்றாற்போல் எழுதியிருந்தார்.

இப்படியாக சிவாஜி வசனங்களானாலும் சரி, கலைஞர் மு.க. எழுதிய காவியங்களானாலும் சரி, தான் ஏற்று நடித்த பாத்திரங்களானாலும் சரி, கூட நடித்த சக கலைஞர்களின் உரையாடல்களானாலும் சரி, கரடு முரடான சங்கத்தமிழ் செய்யுள்களானாலும் சரி புத்தகம் தேடத்தேவையில்லை. சிவகுமாரிடம் கேட்டு அறிந்துகொள்ளும் அளவிற்கு அவர் ஒரு நடமாடும் கலைக்களஞ்சியம்.

பெரியதிரை, சின்னத்திரை, நாடகம், எழுத்து, இராமகாதை, பாரதக்கதைகளைப் புதுப்பித்து எழுதியமை, பள்ளிகள் தோறும் சென்று மாணவ மணிகளுக்கு விழிப்புணர்வு '**Motivation**' தரும் பேச்சுக்கள் என்று தனது வாழ்வியல் நடவடிக்கைகளை புதுப்பித்துக் கொண்டு வலம்வரும் வாழும் நன்மானிடரைச் சந்தித்து மகிழ்ந்த நேரம் மகத்தானது.

முக்கியமான மைற்கல், இவரால் ஆரம்பிக்கப்பட்ட 'அகரம்' அறக்கட்டளை இப்போது அவரது வழியைப் பின்பற்றி அப்பாவிற்குப் பிள்ளை தப்பாமல் பிறந்துள்ளது எனப் புகழாரம் சூட்டும்விதமாக அவரது பிள்ளைகள் நடத்துகின்றனர். சூர்யா, கார்த்தி இருவரும் அதற்கு அடுத்த தலைமுறைத் தலைவர்களாகி விட்டனர்.

குடும்பத்துடன் எல்லோரும் ஒன்று சேர்ந்து என்னை மகிழ்வித்து வழியனுப்பிய பொழுது சூர்யாவை நேருக்கு நேர் பார்த்தேன். அப்போது அவர் நடிகராகவில்லை. 'பருத்திவீரன்' தம்பி கார்த்தியும் தான். வாழ்க சிவகுமார் குடும்பம்.

## "நற்றமிழை நாமறந்தால் வாழேன்"

தாள்பணிந்து வாழேன் தரணியில்
 தமிழுணர்விலார் தமக்கஞ்சி வாழேன்
கோள்சொல்லி வாழேன் மண்ணில்
 கொஞ்சுதமி ழுக்கழிவெனில் வாழேன்
நாள்பார்த்து வாழேன் நன்மைசெய்ய
 நன்றியிலா நண்பருக்காய் வாழேன்
வாள்முனையில் வாழேன், என்னையிங்கு
 வஞ்சிப்பாருடன் வாழேன் இறைவா!

இரந்துண்டு வாழேன் ஈவோரை
 இகழ்ந்திங்கு வாழேன் தமிழை
மறந்திங்கு வாழேன், மதியிலார்முன்
 மண்டியிட்டும் வாழேன் மாசுடையார்
கரம்பற்றி வாழேன் கற்பிலாள்
 கைப்பிடியில் வாழேன் காசுக்காய்
தரமிழந்து வாழேன் பெற்ற
 தாய்வெறுக்க வாழேன் இறைவா!

காசுக்காய் வாழேன் கற்ற
 கலைமறந்து வாழேன் மனங்கள்
கூசும்படி வாழேன், கூடிவாழ்வோரை
 குறைகூறி வாழேன் வாழ்வு
மாசுண்டால் வாழேன் வாழ்வு
 மனம் வெறுத்தால் வாழேன்




ஏசும்படி வாழேன் உலகோர்
 எனைப்பழித்தால் வாழேன் இறைவா!

குற்றமிழைத்து வாழேன், பிறர்
 குடிகெடுத்தும் வாழேன் குடும்பப்
பற்றறுத்தும் வாழேன், பண்பிலார்
 பகைமறந்தும் வாழேன் நன்கு
கற்றவர் நட்பிழந்தும் வாழேன்
 கவித்துவம் இழந்துவிடில் வாழேன்
நற்றமிழை நாமறந்தால் வாழேன்
 நாணயமிழந்துவிடின் வாழேன் இறைவா!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ் வழிக் கல்வி

கணேசன். வாடகை ஓட்டோ ஓட்டுநர். மீட்டருக்கு மேல் ஒரு ரூபாய் கூட வாங்காத நாணயமான ஓட்டோக்காரர். சென்னையில் வாடகை வீட்டில் குடியிருந்து, தினசரி வருமானத்தை வாழ்வாதாரமாகக் கொண்டு வாழ்க்கை நடத்தும் எத்தனையோ குடும்பங்களில் கணேசனின் குடும்பமும் ஒன்று. அக்குடும்பங்களில் நாளைய உணவு என்ன? என்பதை இன்றைய வருமானமே தீர்மானிக்கும்.

இந்த நிலை கணேசனுக்கு இரண்டு வருடங்களுக்கு முன்பு வரைக்கும்தான். வாழ்வின் யதார்த்தத்தையும், சிக்கனத்தின் சிறப்பையும் அறிந்திருந்த கணேசனின் மனைவி லட்சுமியின் மனதிலும், கணேசனின் மனதில் இருந்ததைப் போன்றே வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற எண்ணம் நிரம்பியிருந்தது. கணவன், மனைவிக்கிடையேயான நல்ல புரிதலும், வாழ்வில் முன்னேற வேண்டும் என்ற துடிப்பும், லட்சுமியின் ஊக்கமும் கணேசனை இன்று ஒரு 'ரெம்போ ராவலருக்கு' உரிமையாளராக்கியிருக்கிறது. தனது அடிப்படைத் தேவைகளை பூர்த்தி செய்துகொள்ளும் நடுத்தர வர்க்க நிலையினை அடைந்திருந்தான் கணேசன்.

பழைய மகாபலிபுர ரோட்டில் உள்ள ஒரு தனியார் மென்பொருள் நிறுவனத்தில், ஒப்பந்தத்தின் அடிப்படையில் தனது ரெம்போ ராவலரில் ஊழியர்களை வேலைக்கு அழைத்து வரும் பணியை செய்து கொண்டிருந்தான். நுனி நாக்கில் ஆங்கிலம் பேசி, மிடுக்கான உடையணிந்து ஸ்டைலாக பவனி வரும் இளம் மென்பொறியாளர்களைக் காணும் போதெல்லாம் தன் மகன் அருணைப் பற்றிய எண்ணமே கணேசனின் மனதில் ஓடும்.

எப்பாடு பட்டாவது தனது மகன் அருணை இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல சேர்த்து, படிக்க வச்சு பெரிய ஆளாக்க வேண்டும், தான் பட்ட கஷ்டத்தை தன் மகன் படக்கூடாது. ஆரம்பப் பள்ளியில் கூட அடி எடுத்து வைத்திடாத தனது வம்சத்தில் தனது மகன் காலேஜ் வரை சென்று படிக்க வேண்டும். அதுவும் இங்கிலீஷ் காலேஜ்ல தான் படிக்க வேண்டும் என்று தனது சகாக்களிடம் அடிக்கடி சொல்லிக் கொண்டிருப்பான். கணேசன் இப்படிக் கூறுவதைக் கேட்டால், விவரம் அறிந்த சிலர் லேசாக உள்ளுக்குள் சிரித்துக் கொள்வதுண்டு.

இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல படிக்க வைக்கணும்னா பணத்தை தண்ணியா செலவழிக்கணும், உன்னால அவ்வளவு பணம் செலவழிக்க முடியாது என்று நண்பர்கள் கூறினால், "எவ்வளவு பணம் செலவானாலும் பரவாயில்லை.. எம் புள்ளய நான் இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துலதான் படிக்க வைப்பேன், எவ்வளவு கஷ்டப்பட்டாலும் கவலையில்லை.." என்று கூறுவான்.

லட்சுமியும், கணேசனும் ஐந்தாம் வகுப்பு வரை கூட படித்ததில்லை. ஆனால் கல்வியின் மகத்துவத்தை நன்கு அறிந்து வைத்திருந்தனர். சிறு வயதில் வறுமையின் காரணமாக படிக்க முடியாமல் வாழ்வில் பல கஷ்டங்களை அனுபவித்த கணேசன், தனது தந்தையால் தனக்கு தர முடியாத கல்வியை தான் தன் மகனுக்கு தந்துவிட வேண்டும் என்ற இலட்சியத்திலேயே வாழ்ந்தான். தங்களின் மகன் ரை கட்டி, சூ போட்டு, பெல்ட் அணிந்து ஸ்கூல் வேனில் இங்கிலீஷ் பள்ளிக் கூடத்திற்கு போகும் காட்சியைப் பார்க்கும் நாளுக்காக ஆவலோடு காத்திருந்தனர் இருவரும்.

சென்னையில் மிகச் சிறந்த கொன்வெண்ட் ஸ்கூல் எது? என்று விசாரித்து, அப்பள்ளியில் கட்டணம் எவ்வளவு என்று விசாரித்தபோது கணேசனுக்கு தலையே சுற்றியது. ஆயினும் தன் மகன் இங்கிலீஷ்ல பேசுறத கேட்க வேண்டும் என்ற ஆவலில் எப்படியும் ஃபீஸ் கட்டிவி டலாம் என்று தைரியத்தை வரவழைத்துக் கொண்டான்.

இரவு உணவை முடித்துவிட்டு படுக்கையில் வந்து படுத்திருந்தான் கணேசன். சிறிது நேரத்தில் அனைத்து வேலைகளையும் முடித்துவிட்டு வந்த லட்சுமி, "என்னங்க உங்க முகம் ரொம்ப பிரகாசமா இருக்கு..? என்ன விடயம்...?" என்று கேட்டாள்.
"நாளைக்கு நம்ம புள்ளைக்கு இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல அட்மிஷன் போடப் போறோமே... அந்த சந்தோசம்தான்.."

"ஆமாங்க.. எனக்கும் ரொம்ப சந்தோசமாக இருக்கு.. கண்டிப்பா நம்ம புள்ள நல்லா படிச்சு பெரியா ஆளா வருவான்".

"இனி எம்புள்ள என்னைய டாடினு தான் கூப்புடுவான்"

"என்னையும்தான் மம்மினு கூப்புடுவான்" என்று கணேசனும், லட்சுமியும் மகிழ்ச்சியோடு உரையாடிக் கொண்டே உறங்கி விட்டனர்.

மறுநாள் காலை கணேசனுக்கு சீக்கிரமே விழிப்பு தட்டியது. படுக்கையில் தூங்கிக் கொண்டிருந்த தனது ஆசை மகன் அருணை சிறிது நேரம் பாசத்தோடு பார்த்துக் கொண்டிருந்தான்.

"கண்ணா எழுந்திரிடா.. பள்ளிக் கூடத்துக்கு போயி அட்மிஷன் போடணும், என் மகனை கலெக்டராக்கணும், டாக்டராக்கணும்..." என்று கொஞ்சிக் கொண்டே, அருணை அழைத்துச் சென்று தானே குளிப்பாட்டி புது டிரஸ் போட்டுவிட்டுக் கொண்டிருந்தான்.

சமையலறையிலிருந்து கையில் காலை உணவோடு வந்த லட்சுமிக்கு தனது மகனை புது டிரஸ்ஸில் பார்த்ததும் அவளது மனது இருபது வருடம் கடந்து சென்றது. அருணை டாக்டராகவும், கலெக்டராகவும், விமானியாகவும் அவள் கண் முன் நிறுத்தியது.

மகனுக்கு உணவு ஊட்டிக் கொண்டிருந்த லட்சுமியின் கண்களில் கண்ணீர்த் துளிகள் துளிர்க்க ஆரம்பித்தன. காலம் காலமாக வாழ்க்கையில் வறுமையாலும், கல்வியறிவின்மையாலும் பட்ட கஷ்டங்கள் தன்னோடு முடியப் போவதாக எண்ணி பெருமிதம் கொண்டாள்.

"சரி நேரமாச்சு லட்சுமி... நீ போய் அந்தப் பணத்த எடுத்துட்டு வா... சீக்கிரம் போனாத் தான் சீட் கிடைக்கும்... நம்ம புள்ள படிக்க போறது பெரிய ஸ்கூலாக்கும்... லேட்டா போனா நல்லா இருக்காது, சீட் காலியாகிவிடும்.. முதல் ஆளாப் போயி அட்மிஷன் போட்டு வந்தாதான் எனக்கு நிம்மதி..." என்று கூறிக் கொண்டே கணேசன் புறப்பட ஆயத்தமானான்.



தான் எடுத்து வந்து கொடுத்த பணத்தை வாங்கி சரிபார்த்து பையில் வைத்துக் கொண்டு, மகனை தூக்கிக் கொண்டு நடந்த கணேசனை வாசல் வரைக்கும் வந்து வழியனுப்பினாள் லட்சுமி.

முக்கால் மணி நேரம் பயணித்து பள்ளியை அடைந்த கணேசனுக்கு பள்ளியின் வெளியே நிறுத்தி வைக்கப்பட்டிருந்த கார்களைக் கண்டபோது அவனையும் அறியாது அவனுள் ஏதோ ஒரு மகிழ்ச்சி. அது இத்தனை வசதி மிகுந்தவர்களின் பிள்ளைகளோடு தன் மகனும் படிக்கப் போவதை எண்ணி வந்த மகிழ்ச்சியா? அல்லது இவ்வளவு பெரிய வசதியான வர்கள் படிக்க வைக்கின்ற பள்ளியில் தானும் தன் மகனைப் படிக்க வைக்கப் போகிறோம் என்பதை எண்ணி வந்த மகிழ்ச்சியா? என்று கணேசனுக்கே தெரி யவில்லை.

பள்ளியின் மெயின் கேட்டை கடந்து கூட்டமாக உள்ளே சென்றவர்களில் கணேசனை மட்டும் வாட்ச்மேன் அழைத்து என்ன வேண்டும்...? என்ன விடயமாக வந்தீர்கள்...? என்று வினவிய போதுதான், தான் அணிந்திருந்த உடை மற்றும் நடை போன்ற சில வித்தியாசங்கள் தனக்கும், மற்றவர்களுக்குமிடையே இருப்பதை உணர்ந்தான் கணேசன்.

அட்மிசன் ஃபோர்ம் வாங்குவதற்காக வரிசையில் நின்றிருந்த கணேசனுக்கு, முன்னால் நின்றிருந்தவர்களிடம் பேச்சு கொடுக்கத் தோன்றியது. ஆனாலும் ஏதோ ஒரு தயக்கத்தினால் அவனது வாயிலிருந்து வார்த்தைகள் வர மறுத்தது.

ஃபோர்ம் தருபவரிடம் பணத்தை நீட்டிய போது அவர் பார்த்த ஏளனப் பார்வை கணேசனிடம் ஒரு தாழ்வு மனப்பான்மையை உருவாக்கியது. பணத்தை வாங்கிக் கொண்டு ஃபோர்மை கொடுத்தவர் கையெழுத்திடச் சொன்ன போது "கணேசன்" என்று தடித்த எழுத்துக்களில் தமிழில் கோணலாக கையெழுத்துப் போடும்போது பின்னால் நின்றவர் நக்கலாய் சிரித்த சிரிப்பொலி கணேசனுக்கு கேட்காமல் இல்லை. யாரிடம் கொடுத்து ஃபோர்மை நிரப்பச் சொல்லலாம் என்று தயங்கியவாறே நின்றான் கணேசன்.

ஒரு வசதியான தாயும், தந்தையும் தன் மகளுடைய ஃபோர்மை நிரப்பிக் கொண்டிருந்ததைக் கண்டதும் மிகுந்த தயக்கத்துடன் அவர்களை நெருங்கி, "அம்மா... கொஞ்சம் இந்த ஃபோர்மை நிரப்பித் தர்றீங்களா... எனக்கு எழுதப், படிக்கத் தெரியாது..." என்றான்.

கனிவோடு ஃபோர்மை வாங்கிய அந்த பெண்மணி நிதானமாக அனைத்து விவரங்களையும் கேட்டு நிரப்பிக் கொடுத்தார்.

"ரொம்ப நன்றிம்மா.." என்று கணேசன் அப் பெண்மணியிடம் கூறும்போது நல்லவங்களும் நாட்டுல இருக்கத்தான் செய்றாங்க... என்று நினைத்துக் கொண்டான்.

அட்மிஷனுக்காக பள்ளி முதல்வர் அறைக்கு வெளியே அமர்ந்திருந்தான் கணேசன். அறையின் உள்ளே சென்ற அனைவரும் சீட் கிடைத்த சந்தோசத்தில் வெளியே வருவதைப் பார்த்துக் கொண்டிருந்தவனுக்கு இன்னும் சற்று நேரத்தில் தானும் அந்த சந்தோசத்தை அனுபவிக்க ஆவலோடு காத்திருந்தான்.

"அருண் யாருங்க..." என்று சத்தம் வந்ததைக் கேட்ட கணேசன், "நாந்தாங்க..எம் மகன்தாங்க அருண்" என்று வேகமாய் ஓடினான்.

"ம்..ம்... உள்ள போங்க.." என்றார் அந்த காக்கிச் சட்டைக்காரர்.

முதல்வரின் அறையில் கோட், சூட் அணிந்திருந்த பள்ளி முதல்வரைப் பார்த்ததும், "வணக்கம் சார்.." என்ற கணேசனை நிமிர்ந்து பார்த்த முதல்வரின் பார்வைக்கும், அப்ளிகேஷன் ஃபோர்ம் கொடுத்தவர் பார்த்த ஏளனப் பார்வைக்கும் பெரிதாய் வித்தியாசம் எதுவும் இருந்த தாகத் தெரியவில்லை.

"உங்க நேம் என்ன" என்றார் பள்ளி முதல்வர்.

"கணேசன் சார்"

"ஆ.. மிஸ்டர் கணேசன்.. என்ன படிச்சிருக்கீங்க..."

"நா மூணாவதுதான் சார் படிச்சிருக்கேன்.."

"உங்க வைஃபாவது படிச்சிருக்காங்களா..."

"இல்ல சார்.. அவளும் ரெண்டாவதோ, மூணாவதோதான் படிச்சிருக்கா"

"இங்க பாருங்க மிஸ்டர். கணேசன்.. இது சிட்டியிலேயே நம்பர் வன் ஸ்கூல்.. ஒவ்வொரு வருடமும் எல்லோரும் ஆச்சரியப் பட்ற அளவுக்கு ரிசல்ட் கொடுக்குறோம். ஸ்டுடன்ஸ் நல்லா படிச்சு நிறைய மார்க் வாங்கணும்னா அவங்க பேரன்ட்ஸ்

(தொடர்ச்சி 39ஆம் பக்கம்...)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழ்...

38ஆம் பக்கத்தொடர்ச்சி

படிச்சிருந்தால்தான் ஹோம் வேர்க்கெலாம் சொல்லித் தர முடியும்... பசங்களும் நல்லா படிப்பாங்க... எங்க ஸ்கூல் ரூல்ஸ் படி அம்மா, அப்பா யாரவது ஒருத்தர் படிச்சிருந்தால்தான் சீட் கொடுப்போம்..நீங்களும் படிக்கலை, உங்க மனைவியும் படிக்கலை. சோ.. சாரி மிஸ்டர். கணேசன் உங்க பையனுக்கு சீட் தர முடியாது” என்றார் பள்ளி முதல்வர்.

“சார்.. சார்... அப்படியெல்லாம் சொல்லாதீங்க சார்.. என் பையன் நல்லா படிப்பான் சார்... நான் எங்கையாவது ரியூசன் ஏற்பாடு பண்ணி நல்லா படிக்க வைக்கிறேன் சார்... என் மகனை இங்கிலீஷ் பள்ளிக்கூடத்துல சேர்த்து படிக்க வைக்கிறதுதான் சார் என் அலட்சியம்.. தயவுசெஞ்சு சீட் கொடுங்க சார்...: என்று கெஞ்சினான் கணேசன்.

“இலட்சியம் இருந்து என்ன செய்றது? நீங்க படிக்கலையே.. நீங்க என்னதான் கெஞ்சினாலும், பேசினாலும் உங்க பையனுக்கு சீட் தரமுடியாது கணேசன்.. என் ரைம்ஜ வேஸ்ட் பண்ணாம கிளம்புங்க... எனக்கு நிறைய வேலை இருக்கு..” என்று சொல்லி வாசலை நோக்கி கையை நீட்டினார் பள்ளி முதல்வர்.

தனது மகனைப் பற்றி தான் கட்டியிருந்த மனக்கோட்டை சுக்கு நூறாக உடைந்தது போலிருந்தது கணேசனுக்கு. கண்களில் கண்ணீர் கசிய தனது மகனை கையில் பிடித்துக் கொண்டு பள்ளியை விட்டு வெளியேறினான். எத்தனையோ கனவுகளுடனும், எதிர்பார்ப்புகளுடனும் வந்த கணேசனுக்கு ஏமாற்றம் மட்டுமே மிஞ்சியது.

“அட்மிஷன் போட்டாச்சு.. நம்ம புள்ளைய இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல சேர்த்தாச்சு...: என்ற சந்தோச செய்தியைக் கொண்டு வருவார் தனது கணவர் என்று ஆவலோடு வீட்டு வாசற்படியிலேயே அமர்ந்திருந்தாள் கணேசனின் மனைவி லட்சுமி. வாடிய முகத்துடனும், கலங்கிய கண்களுடனும் வந்த கணேசனைப் பார்த்ததும் லட்சுமிக்கு இருப்புக் கொள்ளவில்லை.

“என்னங்க என்னாச்சு.. எதுக்கு சோகமா இருக்கீங்க.. கண்ணெல்லாம் கலங்கீருக்கு... நம்ம பையனுக்கு அட்மிஷன் போட்டாச்சா...” என்று பதற்றத்தினூடே அடுக்கடுக்கான கேள்விகளை கேட்டாள் லட்சுமி.

“இல்ல லட்சுமி... அட்மிஷன் கிடைக்கல”

“எதுக்குங்க கிடைக்கல...”

“அம்மா.. அப்பா யாராவது ஒருத்தர் படிச்சுருந்தாதான் அட்மிஷன் தருவாங்களாம்... நாம ரெண்டு பேருமே படிக்காததுனால அட்மிஷன் தர மாட்டேன்றாங்க...”

“என்னங்க சொல்றீங்க... நீங்க கொஞ்சம் பேசி பார்க்கலாம்ல.. நாம படிக்காததுல என்னங்க இருக்கு”

“இல்லை லட்சுமி.. நான் எவ்வளவோ பேசிப் பாத்துட்டேன்... அவங்க எதையுமே கேட்கவில்லை... சீட் தர முடியாதுனு சொல்லீட்டாங்க...” என்ற கணேசனுக்கு நெஞ்சு விம்மியது.

லட்சுமிக்கும் கண்கள் கலங்க ஆரம்பித்தது. படிக்காமல் தான் பட்ட கஷ்டம் தன்னோடு போயிடும். தன் மகன் படிச்சு பெரிய ஆளாகி நல்ல படியா வாழ்வான். இங்கிலீஷ்ல பேசி தங்களுக்கு பெருமையைத் தேடித் தருவான் என்ற தனது ஆசைகள் அனைத்தும் நிராசையாகி விட்டதாக எண்ணி வருந்திய லட்சுமி, கண்ணில் கண்ணீரோடு வாயிலிருந்து வார்த்தைகளையும் உதிர்த்தாள்.

படிச்சவங்க புள்ளைங்கதான் படிக்க முடியுமா? படிக்காதவங்க புள்ளைங்களும் படிக்காமலே இருந்து கஷ்டப்படத்தான் வேணுமா? நாம என்ன வேணும்ணா படிக்காம இருந்தோம். சாப்பாட்டுக்கே வழி இல்லாம கஷ்டப்பட்ட பெத்தவங்களுக்கு நம்மள படிக்க வைக்கிறதுக்கு எங்கங்க வசதி



இருந்துச்சு... அவங்களுக்கு வறுமையோட போராடவே தெம்பு இல்லாத போது நமக்கு எங்க இருந்துங்க படிப்பை கொடுக்க முடியும்?

நாமதான் படிக்கல நம்ம புள்ளையாது நல்ல நிலைமைக்கு வந்து கஷ்டப்படாம வாழ்வானு கனவு கண்ட நமக்கு நம்ம புள்ளைய ஆசை பட்ட மாதிரி படிக்க வைக்கக் கூட முடியலையேங்க... என்று உருகிய லட்சுமி, “வீட்ல பாடம் சொல்லிக் கொடுத்தால்தான் புள்ளைங்க படிப்பாங்கனா பள்ளிக் கூடத்துல டீச்சருங்கெலாம் எதுக்கு இருக்காங்க? அவங்க ஒழுங்கா சொல்லிக் கொடுத்தா பசங்க ஒழுங்கா படிக்க மாட்டாங்களாக்கும்” என்று கோபமாகவும் பேசினாள்.

முதல்நாள் சந்தோசமாய் உறங்கிய கணேசனும், லட்சுமியும் இந்த இரவில் துக்கத்தாலும், சோகத்தாலும் வெம்பினர்.

காலையில் எழுந்து எதுவும் சாப்பிடாமல் வெறித்த முகத்துடன் நீண்ட நேரம் திண்ணையில் அமர்ந்திருந்த கணேசனின் மொபைல் போன் சிணுங்கியது. போனை ஒன் செய்து, “ஹலோ..” என்றான் கணேசன்.

எதிர் முனையில், “கணேசன், இன்னைக்கி பேய்மெண்ட் டேட் ஞாபகம் இருக்குல, மறக்காம பத்து மணிக்குள்ள வந்து உங்க வண்டிக்கான வாடகை பணத்தை வாங்கிட்டு போங்க..” என்றார் கணேசன் பணிபுரியும் ஐ.டி. கம்பெனியின் ஹெச். ஆர். மேனேஜர்.

மகனின் அட்மிசனுக்காக நிறைய கடன் வாங்கி அதில் சிறிதளவை செலவும் செய்திருந்தான் கணேசன். பணம் வந்ததும் அதனை திருப்பித் தர வேண்டிய நிர்பந்தத்தில் இருந்ததால் பணத்தை பெற்றுக் கொள்ள கம்பெனிக்குச் சென்றான்.

கணேசனைக் கண்டதும், ஹெச். ஆர். மேனேஜர், “வாங்க கணேசன், என்ன ஒரு மாதிரி இருக்குறீங்க.. என்னாச்சு.. வட் ப்ராப்ளம்” என்றார்.

“ஒண்ணும் இல்லை சார்..”

“நோ.. நீங்க ஏதோ மறைக்கிறீங்க.. நீங்க நார்மலா இல்ல..என்ன ப்ராப்ளம் சொல்லுங்க கணேசன்.”

“சொல்றேன் சார்.. என் மகனை இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல படிக்க வைக்கணும், அவன் இங்கிலீஷ்ல பேசுறத காது குளிர கேட்கணும்னு ரொம்ப ஆசைப்பட்டேன். உங்களையெல்லாம் பாக்குறப்ப என் புள்ளையும் உங்கள மாதிரி பெரிய பெரிய கம்பெனில வேலை பார்க்கணும், பெரிய பதவிகளுக்கு போகணும்னு ஆசைப் பட்டேன். அதுக்காக எவ்வளவு கஷ்டப் படவும் தயாரா இருந்தேன் சார். நேத்து ஒரு பெரிய இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல போயி என் பையனுக்கு அட்மிசன் போடப் போனேன். ஆனா நானும், என் மனைவியும் படிக்காததுனால எம் பையனுக்கு சீட் தர முடியாதுனு சொல்லிட்டாங்க சார்.. என் பையன்தான் சார் எனக்கு உலகம். அவனுக்காகதான் நானும், என் மனைவியும் வாழ்றோம். அவன் இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல படிச்சு பெரிய ஆளா வராம எங்களை மாதிரி கஷ்டப்படுற மாதிரி ஆயிடுச்சுனா எங்களால தாங்க முடியாது சார்... எம் பையனோட எதிர்காலத்த நெனச்சா எனக்கு கஷ்டமா இருக்கு..” என்று ஓ..வென அழ ஆரம்பித்தான் கணேசன்.

“வட் இஸ் திஸ் கணேசன்... அழாதீங்க.. கொஞ்சம் பொறுமையா இருங்க..” என்று ஹெச். ஆர். மேனேஜர் சமாதானப்படுத்திய கொஞ்ச நேரத்தில் அமைதியானான் கணேசன்.

ஹெச்.ஆர். மேனேஜர் தொடர்ந்து பேச ஆரம்பித்தார்.

“கணேசன், உங்கள நெனச்சா எனக்கு ரொம்ப பெருமையா இருக்கு. தான் பட்ட கஷ்டத்த தன் மகன் படக்கூடாதுனு உங்க மகனை எவ்வளவு கஷ்டப்பட்டாலும் நல்லா படிக்க வச்சு பெரிய ஆளாக்க நினைக்கிற உங்க நல்ல எண்ணத்தை நான் மனதார பாராட்டுறேன். ஆனா, இங்கிலீஷ் மீடியத்துல படிச்சாதான் நல்ல நிலைமைக்கு வர முடியும், இங்கிலீஷ்ல பேச முடியும்னு உங்களுக்கு யாரு சொன்னது” என்று கேட்டார் ஹெச். ஆர். மேனேஜர்.

“என்ன சார்.. இப்பிடி கேட்குறீங்க.. பெரிய பெரிய ஆளுங்களெல்லாம் அவங்க பிள்ளைங்கள இங்கிலீஷ் பள்ளிக் கூடத்துல தான் சார் படிக்க வைக்கிறாங்க.. தமிழ்ல படிச்சா தமிழ்ல மட்டும்தான் பேச முடியும். இங்கிலீஷ்ல படிச்சா தான' சார் இங்கிலீஷ்ல பேச முடியும்..?” என்று அப்பாவியாய் கேட்டான் கணேசன்.

இலேசாக சிரித்த ஹெச். ஆர். மேனேஜர், “நீங்க நினைக்கிறது ரொம்ப தப்பு கணேசன். என்ன மாதிரி பெரிய பெரிய பதவிக்கு உங்க பையன் வரணும், இங்கிலீஷ்ல பேசணும்னு சொன்னீங்க.. உங்களுக்கு ஒரு விசயம் தெரியுமா? நான் நீங்க நினைக்கிற மாதிரி இங்கிலீஷ் மீடியத்துல படிக்கல. எங்க கிராமத்துல இருந்த சாதாரண ஸ்கூல்ல தமிழ் மீடியத்துலதான் படிச்சேன். இந்த காலத்துல இங்கிலீஷ் மீடியத்துல படிச்சால்தான் நல்லா வர முடியும்னு ஒரு பிரம்மையை உருவாக்கி வச்சுருக்காங்க.. நீங்க நினைக்கிற மாதிரி இங்கிலீஷ் மீடியத்துல படிச்சால்தான் இங்கிலீஷ்ல பேச முடியும்னுலாம் ஏதும் இல்லை. நல்ல சிந்தனையும், அறிவும் உள்ள பசங்க எங்க படிச்சாலும் பெரிய ஆளா வருவாங்க... நிறைய சாதனையாளர்களும், அறிஞர்களும் தமிழ் மீடியத்துல படிச்சவங்கதான்... எதையும் தாய் மொழில படிச்சால்தான் எளிதில் புரிந்து கொள்ள முடியும். சிந்தனை வளம் பெருகும்.. தமிழ் மீடியத்துல படிக்கிறது கௌரவ குறைச்சலும் இல்ல.. இங்கிலீஷ் மீடியத்துல படிச்சவங்கதான் நல்ல வருவாங்கன்ற உங்க எண்ணத்த தூக்கிப் போடுங்க... உங்க பையனுக்கு நல்ல புத்தகங்களையெல்லாம் வாங்கிக் கொடுத்து சின்ன வயசுல இருந்தே புத்தகம் படிக்கிற பழக்கத்தைக் கொண்டு வாங்க... நல்ல பழக்கங்களை கற்றுக் கொடுங்க.. வாழ்க்கையோட யதார்த்தத்தையும், நீங்க எப்படியெல்லாம் கஷ்டப்பட்டு படிக்க வைக்கிறீங்க என்பதையும் உங்க பையனுக்க புரிய வைங்க.. இதையெல்லாம் செஞ்சாலே போதும். உங்க பையன் உங்க ஆசைப்படி நல்லா படிச்சு பெரிய ஆளா வருவான். ஆங்கில மோகத்தை தூக்கிப்போட்டுட்டு நல்ல தமிழ் மீடியத்துலையே சேர்த்து அவன் ஆசைப்பட்ட படிப்பையே படிக்க வைங்க” என்றதும் கணேசனுக்கு அந்தப் பேச்சில் இருந்த யதார்த்தமும், உண்மையும் புரிய ஆரம்பித்தது.

ஆங்கில வழிக் கல்வியின் மீதிருந்த மோகத்தில் இருந்து மீண்ட கணேசன் ஹெச். ஆர். மனேஜரிடம், “சார் சென்னையில் நல்ல தமிழ் மீடிய ஸ்கூல் எது சார்..?” என்று கேட்டான்.

மகிழ்ச்சியோடு கணேசனை தட்டிக் கொடுத்த ஹெச். ஆர். மனேஜர் சென்னையில் சிறந்த தமிழ் வழிக் கல்வியை போதிக்கும் அந்தப் பள்ளியின் பெயரைச் சொன்னார்.

-ராபியா குமாரன்
புளியங்குடி.


அளவெட்டி மக்கள் மன்றம்

Alaveddy Night - Dinner Dance நிகழ்ச்சி

February 23ஆம் திகதி சனிக்கிழமை 6 மணிக்கு, Baba Banquet Hallஇல் சிறப்பாக நடைபெறும். அனைவரையும் அன்புடன் அழைக்கின்றோம்

தொடர்புகளுக்கு: **416.520.0496**




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






பிறிம்லி மீனாவுடன் ரெலிபோன் கதைத்து வைப்பதற்கு முன் என்னவாம் மீனா என முகபாவனையில் கேட்டா ஆட்டிலறி அன்னம்மா.



இந்தியாவிலை நிக்கிறாவாம். தைப்பொங்கலுக்கு அவவின்ரை அக்காவோடை சட்டி பானையிலை பொங்கலாம் என்று நினைத்தவவாம். சட்டி சரியான விலையாம்...என்று சொல்லி முடிப்பதற்குள் யேஸ் இற் இஸ் என்றபடி கூகிள் கோகிலா தொடங்கினா... மோட்டர் சைக்கிள் ஓடுற ஆக்கள் கட்டாயம் ஹெல்மெற் பாவிக்கவேணும் என்ற சட்டம் கடுமையாக்கிப்போட்டினம். அதை எதிர்க்கிறதுக்கு தலையிலை சட்டி கவிட்டு ஆர்ப்பாட்டம் செய்யினம் என தனது உலக அறிவை விளம்பரப்படுத்தினா கூகிள் கோகிலா.



அவையளின்ரை தலைக்குள்ளையும் மண் வெளியிலையும் மண் என சொல்லிச்சிரித்தா ஐபொட் அகிலாண்டேஸ்வரி.




இதற்கும் மேலாக வட்ஸ்அப் வரதன் ராகு கேது பெயர்ச்சியை மிகவும் நுணுக்கமாக அவதானித்துக் கொண்டிருந்தார். உலகருக்கு, ராசம்மாவிற்கு, தனக்கு வடிவாகப் பார்த்தாகி விட்டது. வரதனுக்கு இரண்டு ராசி. ஜேர்மனியில் வாயில் வந்த பிறந்ததிகதி பதிந்ததால் அது வேறு ராசி.

கனடாவுக்கு வந்ததும் இலங்கையில் பிறந்த ஒறிஜினல் திகதி அதாவது 1958 கலவரத்தின்போது பிறந்ததென்றும் என்ரை அப்பா மூத்தபிள்ளை ஆம்பிளைப்பிள்ளையென பெரிய பாட்டி வைத்து 4..5..நாள் கழித்துத்தானாம் பதிஞ்சவர். 1958இல் தமிழ் சிங்களக் கலவரம். றோட்டெல்லாம் ஆமி கடைகள் கந்தோருக்கு போகேலாது. நல்லகாலம் கள்ளு விக்கிற இடங்கள் மட்டும் திறந்திருந்தது.

வரதன் பிறந்த பலன் கடவுளே என்று கள்ளுக் கடையள் திறந்திருந்தது என்று வரதனின் தகப்பன் அடிக்கடி கூறுவார்...

2..3..நாள் பிறந்த நாள் 2..3..நாள் பிந்திமுந்தியிருக்கும் பிள்ளையள் பிறந்த நாள் எல்லாம் நல்லது தானே என சொல்லிக் கொள்வார்.

ராகு-கேது-சனி.....ஒருவனை எந்த ராசியில் பிடிப்பது விடுவது எனத் தெரியாமல் திணறுகின்றன.

செக்கண்புளோர் செல்லம்மா விடுவதாக இல்லை. அதுசரி வரதன்...ராகு-கேது பெயர்ச்சியிலை எங்கடை வீட்டைச்சுத்திக்கிடக்கிற பனி மலை எப்ப பெயரும் எனக்கேட்க உலகர் கடைக்கண்ணால் எல்லோரையும் படமெடுத்தார்.

ஞாபகம் இருக்கிறதா பெப்ரவரி 15....28.



16. தெளிவத்தை ஜோசப் ஈழத்து சிறுகதை எழுத்தாளர் பிறந்தநாள்.


17. பமிலி டே

19 மாசி மகம்





20. மலேசியா வாசுதேவன் நினைவு நாள் (2011)

20. சமூகநீதிக்கான உலக நாள்





21. சர்வதேச தாய்மொழி நாள்

22. காதல் மன்னன் ஜெமினி கணேசன் நினைவு தினம்

21. நடிகை ஸ்ரீதேவி நினைவு தினம்

24. ஜெயலலிதா பிறந்த நாள் (பெப்-24-1948 - டிசெ.-05-2016)



25. அண்ணை றைற் புகழ் கே. எஸ். பாலச்சந்திரன். கலைஞர் மறைவதில்லை, அழிவதில்லை. ரி.வி.ஐ. வை ரி லிங்கம் நிகழ்ச்சி மூலம் இலைமறை காயாக இருந்த பல கலைஞரை வெளிச்சத்திற்கு கொண்டுவந்தவர். பல்கலை வித்தகர். இலங்கை இந்திய வானொலிக் கலைஞர்.



26. எஸ்.ஜி.சாந்தன் எழுச்சி பாடல்களை எமக்களித்த பாடகர் நடிகர் (2017)

26. பன்னாட்டு அரசுசார்பற்ற அமைப்புகள் நாள்.



27. செங்கை ஆழியான் ஈழத்து எழுத்தாளர்.

28. RRSP கடைசி நாள்.

## நூலறிமுகம் - 'மாதகல் மான்மியம்'

நாள்: 17-02-2019 (Sunday February 17th of 2019) @ 4:00 pm
இடம்: 'Thanil Poona', 3001 Markham Rd. # 21 Scarborough ON
(Mcnicoll Plaza: between Mcnicoll & Passmore on Markham Road)
அனைவரையும் அன்புடன் அழைக்கிறேன். உங்கள் பிள்ளைகள் மாதகல் பற்றி அறிய உதவும் ஆங்கில நூலையும் பெற்றுக்கொள்ளலாம்.
சபா. அருள்சுப்பிரமணியம் : 647-706-6124

## "குடும்ப நன்னாள் இனிய பொன்னாள்"

குடும்பத்தார் எல்லோரும் குதூகலிக்க
குற்றமிலா மனமெல்லாம் மகிழ்ந்திருக்க
அடுக்கடுக்காய் வந்ததுயர் மறந்திருக்க
அன்றாடம் அமைதிக்காய் மனம்துடிக்க
கடுக்காய்போல் கசந்திருந்த நினைவெல்லாம்
கரும்பாய் கற்கண்டாய் இனித்திருக்க
மிடுக்கோடு குடும்பநன்னாள் வந்ததுகாண்
மிச்சமின்றித் துயரங்களைத் துடைக்குமின்னாள்



ஆண்டுக்கு ஒருமுறைதான் வந்துபோகும்
ஆனாலும் பேரின்பம் தந்துபோகும்
தீண்டும் எண்ணங்களால் பாசமோங்கும்
தீராத பகைமைகூடி நீக்கிவைக்கும்
வேண்டும் குடும்பத்தில் நல்லமைதியிங்கு
வேள்வியாய்க் கொள்ளவேண்டும் வாழ்வுதனை
ஆண்டுஅனுபவித்து உறவோடு மண்ணில்
ஆனந்தவாழ்வுதனைப பெற்றாலே இன்பம்!

உறவுகள் சேர்ந்தொன்றாய் வாழுகின்ற
உரிமைமிகு கட்டமைப்பே குடும்பமாகும்
பிறப்புமுதல் இறப்புவரை ஆண்பெண்ணிணைந்து
பிள்ளைகளைப் பெற்று வளர்த்தெடுத்து
சிறப்போடு வாழ்வதுதான் சீரான குடும்பமாகும்
சிற்றருவிகள் சேர்ந்து கடலில் கலப்பதுபோல்
உறவுகள்கூடி இணைதலே நற்குடும்பம்
உணர்வுகளை மீட்டாதோ குடும்பநன்னாள்?

நல்லதொரு குடும்பம் பல்கலைக்கழகமென
நாவினிக்கச் சொல்வாரே பெரியோர்
சொல்லவியலாச் சுமையெல்லாம் சுமந்து சுமந்து
சோகத்தை ஆழ்மனதில் புதைத்துவிட்டு
நில்லாமல் ஓடியோடி உழைத்துநாளும்
நிறைவாகக் குடும்பம்வாழ முயல்வான் தந்தை
இல்லாமை தெரியாமல் காப்பாள் அன்னை
இதுதானே மண்ணிலே நல்லதொரு குடும்பம்

குடும்பத்தைக் கோயிலாகக் காண்போருண்டு
கொடுஞ்செயலால் நரகமாக்கிக் கொள்வோருண்டு
நடுத்தர வர்க்கத்துக் குடும்பவாழ்வில் நாளும்
நல்லதும் கெட்டதும் நடப்பது இயல்பே
எடுத்தோம் கவிழ்த்தோமென எண்ணி வாழ்வோர்
எந்நாளும் துன்பத்தைத் துணையாய் கொள்வர்
குடும்பத்தில் மகிழ்ச்சிதன்னைக் கொண்டு சேர்க்கும்
குடும்பநன்னாள் அனைவருக்கும் இனியபொன்னாள்!



கவிஞர் புரட்சிபாலன்
வன்கூவர்



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# படித்ததில் உணர்ந்தது

**கருணாகரன்**

ஒரு மனிதர் சாலை ஓரத்தில் ஓடிக் கொண்டிருந்தபோது தெரியாமல் இன்னொரு நபர் மீது இடித்துவிட்டார்.

ஐயோ! தெரியாமல் இடித்துவிட்டேன், மன்னித்து விடுங்கள் என்று இவர் சொல்ல, பரவாயில்லை என்று அவர் சொல்ல இருவருமே கண்ணியத்துடனும் புன்னகையுடனும் விடைபெற்றனர். அவர்களிடையே மனஸ்தாபத்துக்கான காரணமில்லாமல் போயிற்று.

அன்று அவர் வீட்டுக்கு வந்தார்.

இரவு உணவு முடித்து திரும்புகையில் அவருடைய மகன் அவருக்குப் பின்னால் நின்றிருந்தான், கைகளைப் பின்னால் கட்டியபடி. தந்தை திரும்புகையில் அவனைத் தெரியாமல் இடித்து விட்டார்.

'வழியில் நிற்காதே.. ஓரமாய்ப் போ..' அவருடைய வார்த்தையில் அனலடித்தது.

சிறுவன் முகம் வாடிப்போய் விலகினான். அவனுடைய கண்களில் சோகத்தின் நதி முளைத்தது. அது இமை ஓரங்களை இடித்து தரையிறங்கத் துவங்கியது.

இரவு தூங்குகையில் அவர் மனதுக்குள் ஒரு சிந்தனை ஓடியது.

வழியில் யாரோ ஒருவரிடம் நாகரீகமாகவும், அன்பாகவும் நடந்து கொள்ளத் தெரிந்த எனக்கு சொந்த மகனிடம் அப்படி நடந்து கொள்ளத் தெரியவில்லையே என்று மனதுக்குள் எண்ணினார்.

நேராக எழுந்து மகனின் படுக்கையறைக்குச் சென்றான்.

உள்ளே மகன் தூங்காமல் விசும்பிக் கொண்டிருந்தான்.

அவனுடைய கண்கள் சிவந்திருந்தன. அவனருகில் மண்டியிட்ட தந்தை 'என்னை மன்னித்துவிடு, உன்னிடம் அப்படி நான் பேசியிருக்கக் கூடாது..' என்றார்.

சிறுவன் திரும்பினான். சிறுவனின் கண்களிலிருந்த கவலை சட்டென்று மறைந்தது. எழுந்து உட்கார்ந்தான்.

வேகமாக கட்டிலிலிருந்து கீழே குதித்து கட்டிலினடியில் வைத்திருந்த பூங்கொத்தை தந்தையின் கையில் வைத்தான்.

'இதென்ன ?' தந்தை வியந்தார்.

இன்றைக்கு வெளியே நடந்து கொண்டிருந்தபோது இந்தப் பூக்களைப் பார்த்தேன்.

பல நிறங்களில் இருந்த பூக்களைப் பொறுக்கி உங்களுக்காக ஒரு மலர்க் கொத்து செய்தேன். அதிலும் குறிப்பாக உங்களுக்கு நீல நிறம் பிடிக்கும் என்




பதற்காக அதை நிறைய சேகரித்தேன். அதை உங்களிடம் ரகசியமாகச் சொல்வதற்காகத்தான் உங்கள் பின்னால் வந்து நின்றேன்.
சிறுவன் சொல்ல தந்தை மனம் உடைந்தார்.

சிறுவனையும் மலர்களையும் ஒருசேர அணைத்த அவருடைய கண்களில் கண்ணீர் வழிந்தது.

ஒரு மழலையின் அன்பைப் புரிந்து கொள்ள முடியாத நிலையில் தான் இருந்ததற்காக அவர் வருந்தினார்.

குடும்பம் என்பது கடவுள் நமக்காக பூமியில் ஏற்பாடு செய்திருக்கும் சொர்க்கம்.

அதை சொர்க்கமாக்குவதும் நரகமாக்குவதும் நம்முடைய செயல்களில் தான் இருக்கிறது.

பணத்துக்கான ஓட்டங்களில் நாம் இழந்து கொண்டிருப்பது ஆனந்தத்தின் நிமிடங்களை என்பதை நாம் அறிந்துகொள்ள வேண்டும்.

ஒரு வேளை நாம் நாளை இறந்து போக நேரிட்டால் அலுவலகம் இன்னொரு திறமைசாலியை சில நாட்களில் கண்டு பிடிக்கும். குடும்பம் அப்படியல்ல.

ஏற்படும் இழப்பு ஆழமாய்த் தைத்த முள் போல நினைவுகளால் நிமிண்டும் போதெல்லாம் வலித்துக் கொண்டே இருக்கும்.

வாழ்க்கையில் எல்லாம் இருந்தாலும் அன்பினால் நிரப்பப்படாவிட்டால் அது வெறுமையாகவே இருக்கும். பணமே மகிழ்ச்சியைத் தரும் என்பது தலைமுறைக்குத் தரப்பட்டிருக்கும் தவறான பாடம். மகிழ்ச்சியை சதுர அடிகளில் வாங்க முடியாது.

குடும்பங்களில் அதிக நேரம் செல விடுங்கள். அன்பை அதிகமாய் சம்பாதியுங்கள்.








Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

Rising Scholars of Canada
"ignite your passion"

Rising Scholars of Canada offers the following after school educational services to students in Elementary School, High School, and University / College:

1. Tutoring - K-12
2. Homework Help - All subjects
3. Writing Workshops
4. Leadership Seminars
5. Literacy Enhancement Services
6. Online Learning Support
7. Professional Academic Development
8. University and Scholorship Application Assistance



Aparna B. Srikanthan - Hons BSc., M. Ed., EdD (Candidate)

- University of Toronto Graduate - Master of Education (MEd) Specialization in Curriculum Studies and Teacher Development
- High School English Teacher
- University of Toronto Doctoral Candidate in the field of Social Justice Education

1585 Markham Road, Unit 213, Scarborough, ON. M1B 2W1.
(416) 827-2681

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி

## திருமதி அன்னம்மா செல்லர்



பூமியில் 04-02-1937

சொர்க்கத்தில் 24-01-2018

இன்பத்தை பெருக்கிட
இன்னலை களைந்திட - எமக்கு
இறைவனால் பரிசளிக்கப்பட்ட
இனிய தேவதை நீ
அம்மா......
மறுமுறை உந்தன்
கருவறை வேண்டும்
முழுவதும் துறந்து
முழுமையாக உன்னில்
சங்கமம் ஆக
மறுபடி என்னை
மடியினில் சுமப்பாயா?

உங்கள் ஆத்மா சாந்தியடைய பிரார்த்திக்கிறோம் அம்மா.

உரும்பிராயை பிறப்பிடமாகவும் கனடாவை வதிவிடமாகவும் கொண்டிருந்த அன்னம்மா செல்லர் அவர்களின் முதலாம் ஆண்டு நினைவஞ்சலி.
அன்னாரின் திருக்கிரியை 16-02-2019 சனிக்கிழமை அன்று நண்பகல் வேளையில் அவரது இல்லத்தில் நடைபெறும்.
உற்றார் உறவினர்கள், நண்பர்கள், அனைவரையும் அன்புடன் அழைக்கிறோம்.

தகவல்: விமலறோஜா தவநேசன் (மகள்) 647-342-7460




## ஏசித் திணிக்காதீர் எம்மொழியைப் பிள்ளைகள்மேல்



இன்பமாய் வாழ இனிய கலைபயில
இன்தமிழ் வேண்டும் இதையுணர்ந்தால் - பன்மொழி
கற்கலாம் தேவையதே காய்வின்றிச் செந்தமிழைக்
கற்பிப்பீர் பிள்ளைகட் கே.

வீட்டிலே தாய்மொழியை வேட்பாகப் பேசிவந்தால்
பாட்டியும் பக்குவமாய்ப் பண்ணோடு - ஊட்டிவந்தால்
சின்னஞ் சிறுசுகள் சேர்ந்துகற்பர் எம்மொழியை
இன்னல்தான் ஏது இவர்க்கு.

ஐந்து வயதுவரை அன்னவரை ஓடியாடி
சிந்துபாட வைத்தால் சிறப்பதுவே - முந்தையராம்
அவ்வையின் ஆத்திசூடி அன்பாய் அகம்பதிய
செவ்வையாய்க் கற்பிப்பீர் சேர்த்து.

வன்முறை என்றுமே வாழ்வளிக்கா சிந்திப்பீர்
அன்பாய் அரவணைத்தே அன்னைமொழி - இன்பமாகக்
கற்பித்தால் ஏற்பர் குழந்தைகளும் காய்வின்றி
நற்பிரசை யாவரே நன்று.

தாய்மொழியைக் கற்பதனால் தப்பின்றி வேறுமொழி
வாய்ப்பாகக் கற்க வழியுண்டே - தாய்மொழிக்
கல்வியினால் காண்பீர் மரபுவழிப் பண்பாடு
இல்லையேல் ஏது இனம்.

சிறுவர்க்காம் நூல்கள் சிறப்பாக இல்லை
அறுதியிட்டுக் கூறுகிறேன் ஆய்ந்தே - மறுப்பின்றி
ஆக்கி அளிப்பீர் அறிஞர்காள் ஆய்ந்தறிந்தே
ஊக்கம் உயர்வுதரும் ஊற்று.

- முருகேசு மயில்வாகனன் -

**நல்ல நட்பை தேடிக்கொள்ள**
**பல வருடம் போதாது.**
**நல்ல நட்பை எதிரியாக்க**
**ஒரு நிமிடமே போதும்**



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# FOR ALL YOUR MORTGAGE NEEDS

Access over 30 lenders with one application

**Refinance** **Purchase** **Renewal**

*Dedicated and knowledgable team...*
*Provide you with the best solutions for*
*1st and 2nd Mortgage...*
*Our commitment to you is to provide with the very best...*

1st Mortgage starting 6.50%* for Private
2nd Mortgage starting 9.99%* for Private
Approval funded within 48 hours*








**Pradeepraj Mani**
Mortgage Agent
LIC# M14001956
**416.997.3862**
np_57@hotmail.com

*Some conditions apply


MORTGAGE ALLIANCE

**Gaya Kathir**
Mortgage Agent
LIC# M13001852 FSCO #10530
**416.806.2274**
gayamortgage@hotmail.com
www.mortgageagencytoronto.ca




Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org






































Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org